# திருவாசகச் சுவை

முரு. பழ. இரத்தினம் செட்டியார்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

# திருவாசகச் சுவை

சித்தாந்தச்செல்வர்

திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலைநகர்

1988

முதற் பதிப்பு : பிப்ரவரி 1988

© அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

திருவாசகச் சுவை

தமிழ்க்கடல் இராய. சொ. நினைவு

அறக்கட்டளைப் பொழிவு - வெளியீடு

எண் – க.

விலை உள்நாடு ரூ. 10/-
வெளிநாடு U. S. $ 5-00

அச்சிட்டோர் :
சபாநாயகம் பிரிண்டர்ஸ்
சிதம்பரம்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | |
| 1. | திருவாசகத்தில் சைவ சித்தாந்தம் | 1 |
| 2. | திருவாசகத்தில் இலக்கியச் சுவை | 45 |
| 3. | திருவாசகத்தில் பக்திச் சுவை | 61 |

பேராசிரியர், தமிழாகரர், கலைமாமணி
**டாக்டர் ஆறு. அழகப்பன்,**
எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்,
இந்திய மொழிப்புல முதன்மையர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலைநகர்
15—2—88

# முன்னுரை

காரைக்குடி திரு. சொ. நா. அ. சொ. அ. அண்ணாமலைச் செட்டியார் அவர்களால் தமிழ்க்கடல் திரு. இராய. சொக்க லிங்கனார் நினைவாக நிறுவப்பெற்ற அறக்கட்டளையின் வழி 1986–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18, 19 – ஆம் நாட்களில் நடைபெற்ற மூன்று பொழிவுகளே 'திருவாசகச் சுவை' என்ற தலைப்பின் கீழ் நூலாக வெளி வருகின்றது. இப்பொழிவுகளை நிகழ்த்திய பெருமைக்குரியவர் சித்தாந்தச் செல்வர் திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் ஆவர்.

திரு. இரத்தினம் செட்டியார் அவர்கள் கூர்த்த மதியாளர்; இலக்கியப் பயிற்சிமிக்கார்; எதனையும் உலகியல் சுட்டியுரைக்கும் திறம் மிக்கவர்; கொள்திறனும் உணாதிறனும் உணர்த்தும் திறனும் வாய்க்கப் பெற்றவர்; சித்தாந்தப் பொருளையும் பொதுமக்கள் உளங்கொளச் சொல்லும் வித்தகர் என்ற சிறப்பிற் குரியவர்; சைவ சித்தாந்தத்தையே தம் உயிர் மூச்சாகக் கருதித் தொண்டாற்றும் சான்றோர்.

திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் பெற்ற உண்மை; இப்பனுவலைப் பயின்றார் தம் அனுபவ வெளிப்பாடு. மணி வாசகரின் பக்திப்பனுவலாகிய திருவாசக நுண்பொருளை அனைவரும் பயன்கொள்ள வேண்டும் என்ற கருத்தில் அண்ணா மலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் திரு. இரத்தினம் செட்டியார் 'திருவாசகச்சுவை' என்ற பொதுத் தலைப்பில் மூன்று பொழிவுகள் நிகழ்த்தினார்கள். அவை: 'திருவாசகத்தில் சைவ சித்தாந்தம்', 'திருவாசகத்தில் இலக்கியச் சுவை', 'திரு வாசகத்தில் பக்திச்சுவை' என்பன.

ஆகமங்கள் இல்லையேல் தமிழ்ச் சித்தாந்த சாத்திரங்கள் முழுமையாக உருவாகியிருக்க முடியாது என்ற கருத்தினைத் திருவாசகத்தில் சைவ சித்தாந்தம்' என்ற தலைப்பின் கீழ் பொழிவாளர் உறுதிப்பட உரைத்துள்ளார். இக் கருத்தினைத் திருவாசகத்தின் வழியும் விளக்கிக் காட்டுகிறார். பிறர் கருத்துக் களை மறுத்தும் தழுவியும் தம் கருத்துக்களை முன் வைத்தும் தக்க ஆதாரங்களைக் காட்டி எளிதாக விளங்க வைப்பது இவர் தம் தனிச் சிறப்பாகும். பக்தி நெறியை ஐயப்பாடற்ற நிலையில் உறுதிப்படுத்தவே மாணிக்கவாசகர் சித்தாந்த சைவக் கருத்துக் களைத் தம் நூலில் அறிவுறுத்தியுள்ளார் என்று இம் முதற் பொழிவில் விளக்கம் கூறுகிறார்.

'திருவாசகத்தில் இலக்கியச் சுவை' என்பது இரண்டாவது பொழிவு. மாணிக்க வாசகரின் திருவாசகம் ஓர் ஞானப் பனுவல் எனினும் அவர்தம் அனுபவங்களை இலக்கியச் சுவை சிறக்க வெளிப்படுத்தியுள்ள திறம் இப்பொழிவில் விளக்கப்பெற்றுள்ளது இலக்கியச் சுவையன்றிப் பக்திச்சுவையை உணர்ச்சி பூர்வமாக வெளிப்படுத்த முடியாது என்று கருதும் சொற்பொழிவாளர், இலக்கியத்தையே மணிவாசகர் பக்தியாக்கி வெளிப்படுத்தி யுள்ளார் என்று நிறுவுகிறார். பொழிவாளரின் பரந்த இலக்கியப் புலமைக்கு இப்பகுதி ஒரு சான்றாகும்.

மணிவாசகப் பெருமானுக்கு இறைவன் அறிவுறுத்திய நெறி பக்தி நெறியே என்பதனை 'திருவாசகத்தில் பக்திச்சுவை' என்ற மூன்றாவதுபொழிவின் வழி நாம் அறிந்து இன்புறுகின்றோம். சைவ சித்தாந்தத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனக் கூறப்படும் நான்கு சாதனங்களுள் முதல் மூன்றும் பக்தி நெறியே யென்றும், இறுதியில் கூறப்பெறும் 'ஞானம்' என்பது அறிவு நெறியென்றும் கூறி, அறிவு நெறியாகிய ஞானத்தால்தான் வீடு பெறலாம் என்றும் சிலர் கூறும் கருத்துக்களைப் பொழிவாளர் மறுத்துள்ள திறம் நயத்தக்க நாகரிகமுடையது. அன்பு நெறியே அறிவு நெறியென்றும், அன்பு நெறியால்தான் இறைவனை அடையமுடியும் என்றும் தக்க சான்றுகளுடன் எடுத்துக் காட்டுவது சிறப்புமிக்கது. **'அயரா அன்பின் அரன் கழல் செலுமே'** என்ற மெய்கண்டார் வாக்கை எடுத்து மொழிந்து, அறிவு நெறி

யெனத் தனியாகப் பிரித்துப் பேசுவது சைவ சித்தாந்த தத்து வத்திற்குச் சிறிதும் பொருந்தாது என்பதனைத் துணிந்து மொழிந்துள்ளார்.

தமிழ் நூல்களில் குறிப்பாகத் திருமுறைகளிலும், ஆழ்வார் களின் பாசுரங்களிலும் ஆழ்ந்த பற்றுக்கொண்டு பரந்த புலமை யால் 'தமிழ்க்கடல்' என்ற சிறப்புப் பட்டத்தினைப் பெற்ற திரு. இராய. சொக்கலிங்கனார் நினைவினைப் போற்றும் வகையில் இவ் அறக்கட்டளை நிறுவப்பெற்றுள்ளது. இதனை நிறுவிய திரு. அண்ணாமலைச் செட்டியார் வழிமுறையினர் சிவநேசச் செல்வர்; பக்தி நெறியில் சிந்தை செலுத்தும் ஆர்வலர்; அறம் தழைக்க விழையும் பண்பாளர். இவர்கள் தம் இவ் அறக்கட்டளையே இச்சிறந்த நூல் வெளிவரத் துணையாயிற்று. மேலும் தமிழ்த்துறையின் 60 ஆவது நிறைவு விழா ஆண்டான இவ்வாண்டில் இப்பொழிவு நூலாக வெளிவருவது சாலச் சிறந்தது. இந்நல்வாய்ப்பினை ஏற்படுத்தித்தந்த அறக்கட்டளை யினருக்குத் தமிழ் உலகம் நன்றி செலுத்தும் கடப்பாடுடையது. அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பல்துறை வளர்ச்சியிலும் குறிப் பாகத் தமிழ்த்துறை வளர்ச்சியிலும் நாளும் சிந்தை செலுத்து கின்ற நமது பெருமைக்குரிய இணை வேந்தர் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்களுக்கும், பல்கலைக் கழகப் புகழைச் சிறக்கச் செய்வதில் நாளும் சிந்தை செலுத்துகின்ற நமது பெருமைக்குரிய துணை வேந்தர் பேராசிரியர் திரு. இராம. சேதுநாராயணன் அவர்களுக்கும் தமிழ்த்துறையின் சார்பில் எனது உளமார்ந்த நன்றியைப் புலப்படுத்துகின்றேன். இந்நூலின் அச்சுப்படிகளைப் பிழை திருத்தி உதவிய தமிழ்த் துறை இணைப் பேராசிரியர் டாக்டர் சு. சாமிஐயா அவர்களும், நூல் விரைவில் அச்சாகப் பெரிதும் முயன்ற தமிழ்த்துறை நூல் வெளியீட்டுப் பொறுப்பாளர் இணைப் பேராசிரியர் டாக்டர் வெ. பழநியப்பன் அவர்களும் பல்கலைக்கழக வெளியீட்டுத்துறை பொறுப்பாளர் வெ. இலக்குமணன் அவர்களும் பாராட்டிற்கும் நன்றிக்கும் உரியவராவர்.

௨

# திருவாசகத்தில் சைவசித்தாந்தம்

### சித்தாந்த சாத்திரங்கள்

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்காகும். அவற்றுள் மெய்கண்டார் அருளிய சிவஞான போதம் முடிமணி நூலாக விளங்குகிறது திருவுந்தியாரும், திருக்களிற்றுப் படியாரும் சிவஞானபோதத்திற்கு முன் எழுந்த நூற்களாகும். அருணந்தி சிவமும், மனவாசகங்கடந்தாரும், உமாபதிசிவமும் சிவஞான போதத்தைப் பின் பற்றியே அதற்கு விளக்கமாகப் பதினொரு சித்தாந்த சாத்திரங்களை அருளிச் செய்திருக்கின்றனர். சைவ சித்தாந்தத்திற்கு இவை பிரமாண நூற்களாக அமைந்துள்ளன.

### மூல நூற்கள் யாவை?

சித்தாந்த சாத்திரங்களுக்கு மூலமாக விளங்குகின்ற நூற்கள் யாவை? என்பது சிந்தனைக்குரியது. சிவஞான போதம் வடமொழிச் சிவஞான போதத்தின் மொழிபெயர்ப்பே என்று நெடுங்காலமாக ஒரு கருத்து நிலவி வருகிறது. இன்றைய அறிஞர்கள் சிவஞான போதம் தமிழில் தோன்றிய முதல் நூலே எனக் கூறுகின்றனர். வடமொழிச் சிவஞான போதத்தில் கருத்துக்கள் திட்பமும் நுட்பமும் இல்லாமல் சொல்லப்பட்டிருப்பதால் தமிழ்ச் சிவஞான போதம் அதன் மொழி பெயர்ப்பாக இருக்க முடியாது என்பது பலர் கருத்தாகும். உதாரணமாக முதல் சூத்திரம், ''அவன், அவள், அது'' எனத் துவங்குகிறது. சுட்டப்படும் பொருள் அழியும் என்பதை உணர்த்தவே ''அவன் அவள் அது'' எனும் சுட்டுப் பெயர்களால் மெய்கண்டார் சூத்திரத்தைத் துவங்கியுள்ளார். வடமொழிச் சிவஞான போதம் ''பெண் ஆண் அலி'' எனத் துவங்குகிறது. சுட்டுப் பொருள் அழியும் என்னும் கருத்தை இத்தொடர் உணர்த்தத் தவறி விடுகின்றது. வடமொழிச் சிவஞான போதம் இறைவன் வாக்காக இருக்குமானால் அது மெய்கண்டார் வாக்கைவிடத் திட்பமும் நுட்பமும் செறிந்ததாக இருக்க வேண்டும். அவ்வா

றில்லாமையால் வடமொழிச் சிவஞான போதத்தின் மொழி பெயர்ப்பாகத் தமிழ்ச் சிவஞான போதத்தைச் சொல்வதற் கில்லை. வடமொழிச் சிவஞான போதமே முதல் நூல் எனச் சொல்பவர்கள் இதற்கொரு சமாதானம் சொல்கின்றனர். மொழி பெயர்ப்பாசிரியர் மூல நூலில் உள்ள கருத்தை விளக்கிச் சொல்லக் கடமைப்பட்டுள்ளவர். ஆதலால் அவர் தமிழ்ச் சிவஞான போதத்தைக் கூடுதலான விளக்கத்துடன் அருளிச் செய்திருக்கிறார். விளக்கம் இருப்பது கொண்டு அது வடமொழிச் சிவஞான போதத்தின் மொழி பெயர்ப்பாகாது எனச் சொல்வது பொருந்தாது என்பது அவர்கள் கூறும் சமாதானமாகும். விளக்கம் என்பது வேறு, திட்ட நுட்பம் என்பது வேறு. 'அவன், அவள், அது' என்பன விளக்கமாக நிற்கவில்லை. அவை திட்ப மாக நிற்கின்றன. தமிழ்ச் சிவஞான போதத்தில் வரும் தொடர் களில் உள்ள திட்பத்தையும் நுட்பத்தையும் நாம் உணர்ந்து சிந்தித்துத்தான் விளக்கம் சொல்ல வேண்டியிருக்கிறது. வட மொழிச் சிவஞான போதத்தில் இந்தத் திட்பம் இல்லை. மூல நூல் மொழிபெயர்ப்பு நூலைவிடத் திட்ப நுட்பம் செறிந்ததாக இருக்கவேண்டும். வடமொழிச் சிவஞான போதம் திட்ப நுட்பம் இல்லாதிருப்பதோடு முக்கியமான கருத்துக்களைச் சொல்லாமலும் விட்டிருக்கிறது. சிவஞான முனிவர் வடமொழிச் சிவஞான போதத்தின் மொழி பெயர்ப்பாகவே தமிழ்ச் சிவஞான போதத்தைக் கொண்டிருக்கிறார். ஆனால் வடமொழிச் சிவஞான போதம் விட்டுள்ள முக்கியமான கருத்துக்களை எடுத்துக்காட்டிப் பல அமைதிகள் சொல்லியிருக்கிறார். அமைதி சொல்வதிலிருந்தே வடமொழிச் சிவஞான போதம் தமிழ்ச் சிவஞானபோதத்திற்கு மூலமாகாது என்பதை அவர் உணர்ந் திருக்கிறார் என்பது புலனாகிறது. அவர் காலத்தில் வடமொழி யிலிருந்து ஒன்று வந்ததாகச் சொன்னால்தான் சிறப்பு என்னும் ஓர் எண்ணம் பரவியிருந்தது. அதனை மீற முடியாத நிலையில் சிவஞான முனிவர் மொழி பெயர்ப்பென ஒப்புக் கொண்டு பல அமைதிகள் சொல்லுகிறார். எனவே சிவஞான போதம் தமிழ் முதல் நூலே என்பதுதான் பொருத்தமான கருத்தாகத் தெரிகிறது.

தமிழ்ச் சிவஞான போதம் தமிழ் முதல் நூலாக விளங்கி னும் அதன்கண் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களும் ஏனைச் சித்தாந்த சாத்திரங்களில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களும் பல ஆகமங்களிலிருந்து பெறப்பட்டவையே என்பதில் ஐயமில்லை. திருமுறைகளில் சித்தாந்தக் கருத்துக்கள் மிகச் சுருக்கமாகவே சொல்லப்பட்டுள்ளன. திருமந்திரம் மட்டும் சிறிது கூடுதலாகச் சொல்கிறது. எனினும் முப்பொருள் உண்மை பற்றிய விளக்க மும் முப்பத்தாறு தத்துவங்கள் பற்றிய விளக்கமும் ஆகமங்களில் தாம் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. ஆகமங்கள் இல்லையேல் தமிழ்ச் சித்தாந்த சாத்திரங்கள் முழுமையாக உருவாகியிருக்க முடியாது இந்த வகையில் தமிழ்ச் சித்தாந்த சாத்திரங்கட்கு மூலம் வடமொழிச் சைவாகமங்களே எனச் சொல்வதில் தவறில்லை.

## ஆகமத்தில் பொருள் வேறுபாடு

தத்துவங்கள் பற்றிய விளக்கம் ஆகமத்தில் விரிவாகச் சொல்லப்பட்டிருந்தாலும் சித்தாந்தக் கொள்கையை உருவாக்கு வதில் அவை சிறந்து நிற்கவில்லை. சிலவிடங்களில் ஆன்மா முத்தியில் ஒன்றாய்ப் போகும் என அவை சொல்கின்றன. சில விடங்களில் ஆன்மா பெத்த முத்தி இரண்டிலும் சிவனுக்கடிமை எனச் சொல்கின்றன. வேறு சிலவிடங்களில் ஆன்மா முத்தியில் சிவசமம் என்றும், அது முத்தியில் சுதந்தரம் என்றும் சொல் கின்றன. இவ்வாறு ஆகமங்கள் சித்தாந்தக்கொள்கை பற்றி ஒன்றுக்கொன்று முரணாகப் பல்வேறு விதமாகச் சொல்வதில் அவற்றிற்குப் பொருள் ஒருமை காண்பது அரிதாக இருக்கிறது. ஏதேனும் ஒரு கருத்தை உண்மை எனத் துணிந்து ஏனைக் கருத் துக்களை அதற்கேற்ப அமைதி செய்துகொள்ள வேண்டியிருக் கிறது. இவ்வாறு பொருளைத் துணிய முடியாமையால்தான் பாடாண்வாத சைவம், சுத்த சைவம், சிவசமவாத சைவம் முதலிய அகச்சமயங்கள் தோன்றியிருக்கின்றன. இந்த அகச் சமயங்கள் ஆகமத்தையே பிரமாணமாகக் கொண்டவையாகும். சித்தாந்த சைவம் இவற்றிற்கு வேறாகத் தனித்து விளங்குகிறது. இவ்வாறு அது விளங்குவதற்குக் காரணம் யாது?

## திருமுறைகள் தரும் விளக்கம்

திருமுறை ஆசிரியர்கள் இறைவன் உள் நின்றுணர்த்தச் சித்தாந்தக்கொள்கையைத் தெளிவு செய்து பாடியருளியிருக்கிருர்கள். அவர்கள் வாக்கைப் பிரமாணமாகக்கொண்டு மெய்கண்டார், அருணந்தி சிவம் முதலிய சித்தாந்த ஆசிரியர்கள் சித்தாந்தக் கொள்கையை உருவாக்கியிருக்கிருர்கள். சித்தாந்தப் பொருள் விளக்கத்தை ஆகமத்திலிருந்து அவர்கள் நிறைய எடுத்துக் கொண்டிருக்கிருர்கள். ஆஞல் சித்தாந்தக்கொள்கை விளக்கத்தை அவர்கள் திருமுறைகளிலிருந்தே பெற்றிருக்கிருர்கள். திருமுறைகளுக்கு ஏற்ப வருகின்ற ஆகமக்கருத்துக்களை உடன்பட்டும், முரணுக வருகின்ற ஆகமக் கருத்துக்களை அமைதி செய்தும் அவர்கள் சித்தாந்த சாத்திரங்களைப் பர்டியருளியிருக்கிருர்கள்.

ஆகமத்தில் ஆன்மா முத்தி நிலையில் சிவபோகத்தை நுகரும் எனச் சொல்லப்பட்டுள்ளது. சில இடங்களில் ஆன்மா முத்தியில் ஒன்ருய்ப் போய் விடும் எனச் சொல்லப்பட்டுள்ளது. இதனைத் தான் சுத்த சைவர்களும் சிவாத்துவித சைவர்களும் தமக்குப் பிரமாணமாக எடுத்துக்கொண்டிருக்கிருர்கள். திருமுறைகளில் இதுபற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைச் சித்தாந்த ஆசிரியர்கள் ஆராய்ந்திருக்கிருர்கள். அப்பர் சுவாமிகள் "இறுமாந்திருப்பன்கொலோ ஈசன் சேவடிக்கீழ் இறுமாந்திருப்பன்கொலோ" எனப் பாடியருளியிருக்கிருர். மணிவாசகர் திருவண்டப்பகுதியில் "கடைமுறை என்னையும் இருப்பதாக்கினன்" எனக் கூறியுள்ளார். இத்தொடர்கள் ஆன்மாமுத்தியிலும் உண்டு என்பதைப் புலப்படுத்துகின்றன.

> "நாயேனை ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்தான் காணேடி"

என மணிவாசகர் கூறி யருளியிருக்கிருர்.

ஆன்மா முத்தியில் சிவபோகத்தை நுகரும் என்பதற்கு இது சான்ருக விளங்குகிறது. "ஆன்மா முத்தியில் ஒன்ருகக் கலந்து போகும்; இன்பத்தை நுகர்வதில்லை", என்னும் சுத்த சைவ

சிவாத்துவித சைவக் கருத்தைத் திருமுறை வாக்குகள் மறுத்துள் ளதால், திருமுறைகளுக்கு ஏற்பவுள்ள ஆகம வாக்கியத்தைச் சித்தாந்தக் கொள்கையாகக் கொண்டு, ''ஒன்ருய்ப் போகும்'' என்னும் ஆகம வாக்கியம் ''கலப்பைக்'' குறிக்கிறதேயல்லாமல் ''இன்மையைக் குறிக்கவில்லை'' என அமைதி செய்து சித்தாந்தக் கொள்கையை மெய்கண்ட நூற்கள் உருவாக்கி இருக்கின்றன. திருமுறைகளைத் தவிர இந்த முடிவைச் செய்வதற்குப் பிரமாண மாக மதிக்கத்தக்க வேறு நூற்கள் இல்லை என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

ஆன்மா முத்தியில் சிவசமம் என ஆகமங்கள் பல இடங்களில் சொல்கின்றன. சிவஞான சுவாமிகள் சிவஞான பாடியத்தில் இவ்வாறு ஆகமங்கள் சொல்வதை எடுத்துக்காட்டியிருக்கிருர். இதனைக் கொண்டுதான் சிவசமவாதம் உருவாகியிருக்கிறது. ஆன்மா பெத்தம் முத்தி இரண்டிலும் சிவனுக்கடிமை யென்றும் ஆகமங்கள் பல இடங்களில் சொல்கின்றன. இருவகைக் கருத் துக்களையும் ஆகமங்கள் சொல்வதால் அவற்றுள் எது சரி? என்னும் வினு எழும். சிவசமவாதிகள் தாங்கள் சொல்வதுதான் சரி என்று சொல்லி ஆகமப் பிரமாணம் காட்டுகிருர்கள். அவர்களை மறுப்பதற்கு ஆகமங்களுக்கு வேருக ஆனுல் ஆகமங் களுக்கு ஒத்த வலிமையுடைய பிரமாண வாக்குகள் இருந்தாக வேண்டும். அப்பர் சுவாமிகள் ''தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான சங்கரன் நற் சங்கவெண் குழையோர் காதில், கோமாற்கே நாமென்றும் மீளா வாளாய்க் கொய்மலர்ச் சேவடியிணையே குறுகினேமே'' எனக் கூறுகிருர். ''**என்றும்** மீளா ஆளாய்'' எனக் கூறுவதால் பெத்தம் முத்தி இரண்டிலும் ஆன்மா அடிமை என்பது பெறப்படுகிறது. இதனை ஆதாரமாகக் கொண்டு சித்தாந்த ஆசிரியர்கள் ஆன்மா பெத்தம் முத்தி இரண்டிலும் அடிமை எனச் சித்தாந்தம் செய்திருக்கிருர்கள். ஆகமத்திற்கொத்த வலிமையுடையனவாகத் திருமுறை வாக்கு கள் திகழ்வதால் அவற்றைக்கொண்டு சிவசம வாதத்தைச் சித்தாந்த ஆசிரியர்கள் மறுத்திருக்கிருர்கள். ஆன்மா முத்தியில் பிறப்பிறப்பற்ற நிலையை இறைவனைப் போல அடைவதால் அதனைச் சிவசமம் என ஆகமங்கள் சொல்லுவதாக அவர்கள்

பொருளமைதி கண்டுள்ளார்கள். இவ்வாறு ஒன்றைத் துணிந்து மற்றொன்றிற்கு அமைதி காணும் நிலை திருமுறைகளாலேயே உண்டாகியிருக்கிறது.

**சித்தாந்தக் கொள்கை விளக்கம்**

சிதம்பரத்தில் நடைபெற்ற சைவசித்தாந்தப் பெருமன்ற விழாவில் தலைமை ஏற்ற சித்தாந்தப் பேரறிஞர் அருணைவடிவேல் முதலியாரவர்கள் சித்தாந்தத்திற்கு மூலம் சைவ ஆகமங்களே என்றும் திருமுறைகள் அவற்றிற்கு மாறாக இல்லை என்றும் கூறியிருக்கிறார்கள். இப்படிச் சொன்னால் சித்தாந்த சைவத்தை உருவாக்கிய திறம் திருமுறைகளையே சாரும் என்னும் உண்மை புலப்படாமற்போகும். திருமுறைகளின் முதன்மை வலியுறுத்தப்பட வேண்டும். சித்தாந்தப் பொருள் விளக்கம் செய்வதற்கு ஆகமங்கள் மூலம் என்றும் சித்தாந்தக் கொள்கையை விளக்கம் செய்வதற்கு திருமுறைகள் மூலம் என்றும் சொல்வதுதான் பொருத்தமாகும். சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றாகிய இருபா இருபஃதில் அருணந்தி சிவம் சில நுட்பமான தடைகளை எழுப்பி அவற்றிற்கு மெய்கண்டார் விடை சொல்வதுபோலத் திருமுறை வாக்குகளை எடுத்துக்காட்டியிருக்கிறார். இதிலிருந்து சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் திருமுறைகளே துணை செய்யும் என்பது போதரும்.

சிவஞானசுவாமிகள் சிவஞானபாடியத்தில் சூத்திரத்திற்குச் சூத்திரம் திருமுறைகளையே மேற்கோள்களாகக் காட்டிச் செல்கிறார். அவ்வாறு காட்டும்போது 'அனுபவமுடைய தேசிகர் திருவாக்கான் உணர்க' எனஎழுதுகிறார். திருமுறை ஆசிரியர்களை அவர் அனுபவமுடைய தேசிகர் என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு அவர் ஏன் சொல்ல வேண்டும்? ஆகமங்களுக்குப் பொருள் சொல்லுகின்ற அகச்சமயவாதிகள் மெய்ஞ்ஞான அனுபவமுடையவர்கள் அல்லர். அனுபவமில்லாத அவர்கள் சொல்லும் பொருட்கள் ஏற்கத்தக்கன ஆகா. மெய்ஞான அனுபவமுடைய திருமுறை ஆசிரியர்களின் வாக்குகளே ஏற்கத்தக்கன ஆகும். எனவே திருமுறைவாக்குகளைக் கொண்டே ஆகமங்களுக்குப் பொருள்காணவேண்டும். இதனை உணர்த்தவே சுவாமிகள், "அனுபவமுடைய தேசிகர்" எனச்சுட்டுகிறார். ஆகமத்திற்குப்

பொருளொருமை காணத்திருமுறைகளையே நாம் பிரமாணமாகக் கொள்ளவேண்டும்.

வடநூல்வல்ல சமய ஆசிரியர்கள் வேதஉபநிடதங்களுக்குப் பொருள் கொள்ளும்போது சைவாகமங்களை மேற்கோள் காட்டுவதில்லை. அவர்கள் அவற்றை ஏற்பதுமில்லை. இதனால் சைவாகமங்கள் வடமொழியில் செய்யப்பட்டிருந்தாலும் அவை தமிழ் மண்ணிற்கே உரியனவாக விளங்குகின்றன என்பது தெளிவு.

**சைவசித்தாந்தம்:** திருவாசகத்தில் வரும் சித்தாந்தக் குறிப்புக்களை ஆராயுமுன்னர் சைவசித்தாந்தம் என்றால் என்ன என்பதை நாம் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

"பதிஉண்டு; பசுக்கள்உண்டு; அவற்றைப்பிணித்துள்ள பாசம் உண்டு; இம்மூன்றும் அநாதி" என்பது சைவசித்தாந்தமாகும். கடவுளுக்குப்பதி எனச்சித்தாந்தம் பெயரிட்டிருக்கிறது. பதி தலைவன். தலைவன் என்றாலே அவனைச்சார்ந்த அடிமைகள் உண்டு என்பது போதரும். 'நான் பிருமம்: நான் பிருமத்திற்குச் சமம்' என்னும் கொள்கைகளை உடன்படவில்லை என்பதைக் காட்டுவதற்காகவே சித்தாந்தம் கடவுளுக்குப்பதி எனப்பெயரிட்டுள்ளது. கடவுள் உண்டு என்பதை மெய்ப்பிப்பதற்காகவே மெய்கண்டார் சிவஞான போதமுதற் சூத்திரத்தை அருளிச் செய்திருக்கிறார்.

> "அவன் அவள் அதுவெனும் அவைமூவினைமையின்
> தோற்றியதிதியே ஒடுங்கி மலத்துளதாம்
> அந்தமாதி என்மனார் புலவர்"

இச்சூத்திரத்தில் "மூவினைமையின்" என்னும் தொடர் வருவதைக் காண்கின்றோம். "மூவினைமை" என்பது. தோன்றல் இருத்தல் அழிதல் எனமுத்தொழில்படும் தன்மையைக்குறிக்கும். உதாரணத்திற்காக நம்மையே எடுத்துக்கொள்வோம். நாம் உடலோடு தோன்றுகிறோம்; வாழ்கிறோம்; உடலைவிட்டுப் பிரிந்துபோகிறோம். நம் உடல் தோன்றல் இருத்தல் அழிதல் ஆகிய முத்தொழிற்கும் உட்படுகிறது. "தோன்றலும் அழிதலும்

இயற்கை, இச் செயல்களைச் செய்வதற்கு முதல்வன் ஒருவன் வேண்டுவதில்லை'' என நாத்திக சமயத்தினர் கூறுகின்றனர். இதுபற்றிச் சிவஞான சித்தியாரில் அருணந்திசிவம் பின்வருமாறு கூறுகிறார்:-

''இயல்புகாண் தோற்றி மாய்கையென்றிடின் இயல்பினுக்குச்
செயலதின்று இயல்பு செய்தி செய்தியேல் இயல்பதின்றாம்''

தோன்றுவதும் அழிவதும் இயற்கை என்றால் தோன்றுதலுக்கு அழிதல் முரண்பட்ட செயலாகும். முரண்பட்ட இருவகைச் செயல்கள் இயற்கையில் அமைந்திருக்க முடியாது. ஏன் முடியாது? எனவினவலாம். இயற்கை அறிவற்றது. அதன் கண் தோற்றுவிக்கும் சக்தி கூடுதலாக இருக்குமானால் அழிப் பிக்கும் சக்தி செயல்பட முடியாமல் போகும். அழிப்பிக்கும் சக்திகூடுதலான வலிமையுடையதாக இருந்தால் தோற்றுவிக்கும் சக்தியை அது செயல்படவிடாமல் அடக்கிவிடும். இருவகைச் சக்திகளும் சமவலிமையுடையனவாயிருந்தால் ஒரு செயலுமே நடைபெறாமல்போகும். உலகில் இருவகைச்செயல்களும் நடை பெறுவதைக் காண்கிறோம். இயற்கை அறிவற்றதாதலால் தன் சக்திகளை அப்படியேதான் வெளிப்படுத்தும். ஒன்று நடைபெறும் பொழுது மற்றொன்றை அடக்கிவைக்க அதற்குத்தெரியாது. இருவகைச் சக்திகளையும் மாறி மாறி விகற்பித்துச் செயல்படுத்த வேண்டுமென்றால் இயற்கை அறிவுள்ளதாக இருக்கவேண்டும். இயற்கை அறிவுள்ளதென்றால் அதனையே கடவுள் எனச்சொல்ல வேண்டும். ஆனால் நாத்திகர் உட்பட அனைவரும் இயற்கை அறிவுடையதன்று என்றே கொள்கின்றனர். அங்ஙனமானால் அதன்கண்தோற்றுவித்தல், அழிப்பித்தல், ஆகிய முரண்பட்ட செயல்களைமாறிமாறி நிகழ்த்துவதற்கு அறிவுடைய வேறொரு பொருள் இருந்தாகவேண்டும். அந்தப்பொருளையே கடவுள் என்று சித்தாந்தம் சொல்கிறது. அந்தப்பொருளும் வேறொன்றால் இயக்கப்படுமானால் அதற்குமேல் வேறொருபொருள் இருந்தாக வேண்டும். இப்படி ஆராய்ந்து கொண்டேபோனால் முடிவில் ஒருபொருள் வேறொன்றால் இயக்கப்படாததாய்த் தோற்றம் இறுதி இரண்டிற்கும் உட்படாததாய் என்றும் உள்ளதாய் இருந்தாக வேண்டும். அதனைத்தான் அநாதி, என்றும் பிறப்

பிறப்பற்ற கடவுள் என்றும் சைவசித்தாந்தம் வரையறை செய்கிறது. இப்படிக் கொள்வதால் கடவுளைப் படைத்தவர் யார்? என்றும் வினா எழ இடமில்லாமல் போகிறது. தோற்றமும் ஈறும் அற்ற ஓர் அநாதிப் பொருள் இருந்தால்தான் தோற்றமும் ஈறும் உள்ள உலகியல் இயக்கம் நடைபெறமுடியும். கடவுள் உண்மையைச் சைவசித்தாந்தம் இவ்வாறு நிலைநாட்டுகிறது.

மாயை: உலகில் கல் மண் நீர் நெருப்பு வான் ஞாயிறு, திங்கள் விண்மீன் மலை கடல் முதலியவற்றைப் பார்க்கிறோம். இவையனைத்தும் அறிவற்ற சடப்பொருட்களாகும். இச்சடப் பொருள்களனைத்தும் அழிந்து போகும் இயல்புடையவை. ஞாயிறு மெல்லமெல்ல தன் ஆற்றலை இழந்து வருகிறதென்றும் ஒரு காலத்தில் அது அழிந்துபோகுமென்றும் விஞ்ஞானநூற்கள் எவ்வித ஐயத்திற்கும் இடம் இன்றிச்சொல்கின்றன. ஞாயிற்றுக்கே இக்கதியென்றால் ஏனைய சடப்பொருட்களைப்பற்றிச் சொல்லவே வேண்டுவதில்லை. அனைத்தும் அழிந்து போகும் என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. இவை அனைத்தும் அழியுமென்றால் இவை எங்கிருந்து. எவ்வாறு தோன்றின? என்னும் வினா எழும். சடப்பொருள்களைப்பகுத்துக் கொண்டே சென்றால் அவையனைத்தும் முடிவில்ஒருபேராற்றலாக மாறி நிற்கும். இதனை, விஞ்ஞானமும் ஒப்புக்கொள்கிறது. அணுக்களைப்பிளந்தால் அவை ஆற்றலாகமாறும் என்பது இன்றைய விஞ்ஞானக்கண்டுபிடிப்பாகும். சைவசித்தாந்தம் இதனை அந்தக் காலத்திலேயே ஆராய்ந்து கூறியுள்ளது. எல்லாச் சடப்பொருள்களின் ஆற்றல்கள் திரண்டமயம் மாயை என அது சொல்லுகிறது. ஆற்றலாக விளங்கிநிற்கும் மாயையிலிருந்துதான் உலகத்துச் சடப்பொள்களனைத்தும் தோன்றியுள்ளன என்பது சைவசித்தாந்தக்கொள்கையாகும். உலகச் சடப்பொருள்கள் அனைத்திற்கும் மூலப்பொருளாய் விளங்கும் மாயையும் அறிவற்ற சடமாகவே இருக்கவேண்டும். சடத்திலிருந்துதான் சடம்தோன்றும்.

**மாயை அநாதி:**

இந்த மாயை எவ்வாறு உண்டாயிற்று? எனச்சிந்திக்க வேண்டும். கடவுளே மாயையை உண்டாக்கிறா என எளிமை

யாகச் சொல்லிவிடலாம். அப்படியானால் கடவுள் அதனை எதிலிருந்து உண்டாக்கினார் என்னும் வினா எழும். ஒன்றிலிருந்தும் உண்டாக்கவில்லை; அவர் நினைத்தார்; உண்டாகி விட்டது; என்று சொன்னால் அஃது அவரிடமிருந்து தோன்றியது என்பது தான் பொருள். பேரறிவுப் பொருளாகிய அவரிடமிருந்து அறிவற்ற சடப்பொருளாகிய மாயை தோன்ற முடியாது. எனவே மாயையும் கடவுளைப்போல யாராலும் படைக்கப்படாத அநாதிப் பொருள் என்பது சித்தாந்தக் கொள்கையாகும்.

**உலகத் தோற்றம் :**

மாயை அநாதிப் பொருளாக இருந்தாலும் அதிலிருந்து தோன்றுகின்ற இவ்வுலகம் இறைவனால் படைக்கப்பட்டது என்று நாம் கூறுகிறோம். காரணம் மாயை சடப்பொருள். நாம் மேலே விவரித்தபடி தோன்றுதல் அழிதல் ஆகிய இருவகை முரண்பட்ட தன்மைகள் மாயைக்குள் இயற்கையாக அமைந்திருக்க முடியாது. ஆகவே இறைவன்தான் மாயையிலிருந்து உலகைத் தோற்றுவித்தும் அழிப்பித்தும் செயல்படுகிறான் என்பது தானே பெறப்படும்.

**உயிரும் உடலும்:**

உயிர் அறிவுடையதாக விளங்குகிறது, உயிர்பிரிந்து போனால் உடல் அறிவற்ற சடமாக மண்ணோடு மண்ணாய்ப் போகிறது; இதிலிருந்து உடல்வேறு உயிர்வேறு என்பது புலனாகிறது. உடல் சடமாதலால் அஃதும் மாயையிலிருந்தே தோற்றுவிக்கப்பட்டதென்பது தெளிவு. இந்த உலகத்துச் சடப்பொருள்களையும் உயிர்கள் சார்ந்துள்ள அனைத்து உடல்களையும் இறைவன் மாயையிலிருந்தே தோற்றுவித்து ஒடுக்குகிறான் என்றும், ஆனால் இவற்றிற்கு மூலமாகிய மாயையை அவன் படைக்கவில்லையென்றும், அஃது இறைவனைப்போல என்றுமுள்ள பொருள் என்றும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

**உலகப்படைப்பு ஏன்:**

உயிர்கள் உலகைக் கொண்டும் உடலைக் கொண்டும் இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றன. உயிர்கள் அறிவு விளக்கம்

பெறுவதற்கு உடலும் உலகமும் அவற்றிற்குத் தேவைப் படுகின்றன. கண் காது மூக்கு முதலியவை இல்லாவிட்டால் உயிர்கள் ஒன்றையும் அறியமுடியாது. உலகம் இல்லாவிட்டால் அவை ஒன்றையும் நுகரமுடியாது. ஆகவே உயிர்களின் அறிவு விளக்கத்திற்கு உலகமும் உடலும் தேவைப்படுவதால், இறைவன் கருணைகாரணமாக அவற்றை மாயையிலிருந்து படைத்தளித் திருக்கிறான்.

**உயிர்கள் அநாதி :**

உயிர்கள் எவ்வாறு உண்டாயின? என்பதை இனிச்சிந்திப் போம் உயிர்களை இறைவன் உண்டாக்கினான் என்றால் ஏன் அவற்றை உண்டாக்க வேண்டும்? என்ற வினா எழும். உயிர் களால் அவனுக்கு ஆகும் பயன் யாதுமில்லை. அவை தன்னை வணங்க வேண்டும் என்பதற்காகப் படைத்தான் என்று சொன்னால் அவனுக்கும் விருப்பு இருக்கிறது என்றாகிவிடும். வேண்டுதல் வேண்டாமை இலானாகிய அவன் உயிரைப்படைக்க வேண்டிய அவசியம் எதுவுமில்லை. உலகும் உடலும் உயிருக்குத் தேவை என்பதால் அவன் அவற்றைப்படைத்தளிக்கிறான். ஆனால் உயிர் அவனுக்குத் தேவைஇல்லை. இக்காரணத்தால் உயிரை அவன் படைக்கவில்லையென்றும் அஃதும் அவனைப்போல என்றும் உள்ள அநாதிப்பொருள் என்றும் சித்தாந்தம் கூறுகிறது. இந்தியாவிலுள்ள எல்லாச் சமயங்களுமே இறைவன் உயிரைப் படைக்கவில்லை என்றே கூறுகின்றன. இந்தியாவிற்கு வெளியே தோன்றிய கிறித்தவம், இசுலாமியம் ஆகிய சமயங்களே இறைவன் உயிரைப்படைத்தான் எனக்கூறுகின்றன. அப்படிச் சொன்னாலும் அவை உயிர் நித்தியம் என்பதை ஒப்புக்கொள் கின்றன. தோன்றிய பொருள் அழியும். தோன்றாத பொருள் தான் நித்தியமாக இருக்கும். எனவேஉயிர்யாராலும் படைக் கப்படாத என்றும் உள்ள அநாதி நித்தியப்பொருள் என்பதுதான் பொருத்தமுடையது.

**ஆணவம் அநாதி**

உலகமும் உடலும் உயிர்களுக்குத் தேவை என்றும் அத் தேவை காரணமாகவே அவற்றை இறைவன் படைத்தளித்திருக்

கிருன் என்றும் முன்பு சொன்னோம். என்ன தேவை என்பதை இப்பொழுது நாம் சிந்திக்க வேண்டும்.

நமக்கு அறிவு இருக்கிறது. இருப்பினும் தீமையானவற்றையே பெரும்பாலும் நாம் விரும்புகிறோம். பிறனில் விழைதல் தீமை என்பது யாவர்க்கும் தெரியும். வேறொருவனின் மனைவி பேரழகியாக இருந்தால் ஒருவர் உள்ளம் அவரை அறியாமலே அவள்பால் செல்லுகிறது.

"சென்ற விடத்துச் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு"

என்று வள்ளுவர் அறிவுக்கு இலக்கணம் சொன்னார். ஆனால் நம்மறிவோ நம்மையறியாமலே தீமையின்பாற் செல்வதைக் காண்கின்றோம். இதற்குக் காரணம் என்ன? நம் அறிவை இருள் போன்ற ஒரு பொருள் மறைத்திருக்கிறது. அம்மறைப்பின் காரணமாகவே தீமையின்பால் நம் அறிவு செல்கிறது. இருள் போன்ற இம்மறைப்புப் பொருளை "ஆணவமலம்" எனச் சித்தாந்தம் பெயரிட்டுள்ளது. வேற்றுச் சமயங்கள் மாயை என்னும் பொருளே நம்மைத் தீமையின்பால் ஈர்க்கின்றது எனச் சொல்கின்றன. மாயையாலான கண் காது மூக்கு முதலிய பொறிகள் நம் அறிவை விளக்குகின்றனவே அல்லாமல் மறைக்கவில்லை. இதனால் தீமையின்பாற் செலுத்துகின்ற பொருள் வேறாகவே இருக்க வேண்டும். மாயையை ஒளிப்பொருள் என்றும் ஆணவமலத்தை இருள்பொருள் என்றும் சித்தாந்தம் கூறுகிறது. இருளோடு கூடிய மாயை மயக்கம் செய்யுமேயன்றித் தனித்த நிலையில் அது மயக்கம் செய்வதில்லை. ஆணவமல உண்மையைச் சைவம் ஒன்றே சொல்கிறது. ஏனைச் சமயங்கள் மாயை பற்றி மட்டுமே சொல்லுகின்றன.

உயிரின் அறிவை மறைக்கின்ற ஆணவமலத்தை இறைவன் உண்டாக்கியிருக்க முடியாது. உண்டாக்கியிருந்தால் அஃது அவன் கருணைக்கிழுக்காகும். இதனால் மாயையைப் போல், கடவுளைப் போல ஆணவமலமும் யாராலும் உண்டாக்கப்படாத என்றுமுள்ள அநாதிநித்தியப் பொருள் எனச் சித்தாந்தம் சொல்கிறது. அஃது என்றும் உள்ள பொருளாதலால் உயிரின்

அறிவை அஃது அநாதியே மறைத்திருக்கிறது. என்பது சித்தாந்தக் கோட்பாடாகும்.

### ஏன் தடுக்கவில்லை?

இறைவன் என்றும் இருக்கிறுன்; உயிர் என்றும் இருக்கிறது; ஆணவமலமும் என்றும் இருக்கிறது; உயிர் ஆணவமலத்தை அநாதியே பற்றியிருக்கிறது; இப்பற்றுதலால் தான் அது மலத்தால் மறைப்புண்டு அறிவு இச்சை செயல்களின் இயக்கமின்றி அநாதியே கிடக்கிறது. இந்நிலையைக் "கேவல நிலை" எனச் சித்தாந்தம் சொல்லும். மலத்தை அநாதியே பற்றுதலாகிய உயிரின் செயலை "மூலகன்மம்" என அது சொல்லும். இதனுல் மூலகன்மும் அநாதி என்பது பெறப்படும். உயிர் அநாதியே மலத்தைப்பற்றுதலை இறைவன் ஏன் தடுக்க வில்லை? என வினுவலாம். உயிர் அறிவுடைப் பொருள்; அது தன் அனுபவத்தாலேயே அறிவு விளக்கம் பெறவேண்டும். இறைவன் தன் வல்லமையைக்கொண்டு ஆணவமலத்தைப் பற்ருதவாறு தடுத்தால் அஃது தன் வல்லமையைக் காட்டியதாக ஆகுமேயன்றி உயிருக்குப் பயன் விளைவித்ததாக ஆகாது. உயிரின் அறிவு எளிய தன்மை உடையது. எதனைச் சாருகிறதோ அதன் மய மாகவே அது விளங்கும். படிப்படியாக விளக்கம் பெறுவதுதான் உயிர் அறிவின் இயல்பாகும். உடனே அதற்கு அறிவு விளக்கத்தைக் கொடுத்தால் அதனுல் அதனைத் தாங்க முடியாது. படிப்படியாக உயிர் அறிவு விளக்கம் பெறுவதற்கு ஆணவமல மறைப்பும் ஒரு வகையில் அதற்குத் தேவைப்படுகிறது. எனவே இறைவன் அநாதியே அது மலத்தைப் பற்றுவதைத் தடுக்காமல் துணை நின்றிருக்கிறுன், என அறிதல் வேண்டும்.

### அறிவு விளக்கம்

கேவல நிலையில் உயிர் ஆணவமலத்தால் மறைப்புண்டு அறிவிச்சை செயல்களின் இயக்கமின்றிக் கிடப்பதை அறிந்த இறைவன் படிப்புடியே அதனை அம்மலப் பிடிப்பினின்றும் விடுவிக்கக் கருதி ஆணவமலத்திற்கு மாறுக அமைந்துள்ள மாயையிலிருந்து உலகையும் உடலையும் அதற்குப் படைத்தளிக்கிறுன். ஒளிப் பொருளாகிய மாயையின் உதவி பெற்றதும்

உயிர்களின் அறிவிச்சை செயல்கள் மெல்ல மெல்ல இயங்கத் துவங்குகின்றன. இவ்வாறு இயங்கத் துவங்கியதும் உடலைக் கொண்டு உலகிடை நல்வினை தீவினைகளைப் புரியும் ஆற்றலை அவைபெறுகின்றன. இறைவன் நல்வினை, தீவினைக்குரிய இன்ப துன்ப அனுபவங்களை உயிர்களுக்கு ஊட்டுகிறான். இவ்வனுப வத்தில் உயிர் படிமுறையே அறிவு விளக்கம் பெற்று ஆணவ மலப்பிடிப்பினின்றும் விடுபடுகின்றது. ஆணவமலப்பிடிப்பு நீங் கியதும் அவை இறைவனைப் பற்றி மாறாத பேரின்பத்தை நுகர் கின்றன. இந்நிலையே உயிர்களுக்கு முடிந்தநிலையாகும். இதனை "முத்தி நிலை" எனச் சித்தாந்தம் பேசுகிறது.

**நல்வினை தீவினை:**

அநாதியே உயிர்மலத்தைப் பற்றுதலை மூலகன்மம் என்று சொன்னோம். இறைவன் உயிருக்கு உடலையும் உலகையும் வழங் கியதும் அதன் அறிவு இச்சை செயல்கள் மெல்ல இயங்கத்துவங் குவதால் உலகிடை நின்று உயிர்கள் உடலை வாயிலாகக்கொண்டு நல்வினை தீவினைகளைப் புரிகின்றன. இவ்வினைகளைக்காரிய கன்மம் என்றும் ஆதி கன்மம் என்றும் சித்தாந்தம் சொல்லும்.

**முப்பொருள் உண்மை:**

கடவுள் அநாதி என முன்பு நிறுவினோம். அதுபோல உயிர் களும் ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களும் அநாதி யென மேலே காட்டியுள்ளோம். கன்மம் என்பது மூலகன் மத்தைக் குறிக்கும். கடவுளுக்குப்பதி என்று பெயர். மும்மல பாசத்தால் பிணிக்கப்பட்ட உயிர்களுக்குப் பசு என்று பெயர். ஆணவம் கன்மம், மாயை ஆகிய மும்மலங்களுக்கும் "பாசம்" என்று பெயர். இதனால் பதி பசு பாசம் ஆகிய மூன்றும் அநாதி என்பது சைவசித்தாந்தக் கோட்பாடாகும். இதனையே திருமந் திரத்தில்

"பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அநாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணுகிற் பசு பாசம் நில்லாவே."

எனக்கூறப்பட்டுள்ளது.

இப்பாடலுக்கு ஹாவாய் சுப்பிரமணிய முனி என்னும் அமெரிக்கர் வேதாந்த பரமாகப் பொருள் கூறியிருக்கிருர். அவர் சொல்வது வருமாறு:— "பதிஒன்றேதான் உள்ளது. பசுவும் பாசமும் அதனின்றும் தோன்றியதால் அநாதி எனக் கூறப் பட்டன. இதனைப் தன் இரண்டடிகள் தெளிவுறுத்தும். பதியினை பசுவும் பாசமும் சென்றணுக முடியாது. பசு ஒரு தனிப் பொருளாக இருந்தால் பதியினை அஃது அடையும் என்று சொல்லவாம். பசுவும் பாசமும் நில்லா என ஈற்றடியில் சொல் வதால் பதி மட்டும் தான் முத்தியில் இருக்கும். பசுவும் பாசமும் இருக்க மாட்டா. பதியிலிருந்து தோன்றிய அவை பதிக்குள்ளேயே ஒடுங்கி ஒன்ருய்ப் போய்விடும். ஆகவே முப்பொருளும் அநாதி என்பதற்கு இப்பாடல் மேற்கோள் ஆகாது. மூன்றும் அநாதி என்ருல் என்றும் இருக்க வேண்டும்.

"முத்திதனில் மூன்று முதலும் மொழியக்கேள்" என்னும் உண்மை விளக்கப்பாடல் முத்தியில் மூன்று பொருளும் உண்டு எனச் சொல்லுகிறது. அதுமெய்கண்டார்கண்ட சைவசித் தாந்தக் கோட்பாடாகும். திருமூலர் மெய்கண்டாருக்கு முற் பட்டவர். அவர் மெய்கண்ட சித்தாந்தத்தைச் சொல்லவில்லை. முடிவில் பதி ஒன்றே உளது என்னும் கருத்தில்தான் "பதியணு கிற்பசு பாசம் நில்லாவே" எனக் கூறியிருக்கிருர்".

மேற்கண்ட பொருளை அவர் எழுதி அச்சிட்டுத் தமிழ் நாட்டிலுள்ள சைவசித்தாந்த சபைகளுக்கும் சைவ ஆதீனங் கட்கும் அனுப்பியிருக்கிருர். திருமுறைகள் சைவசித்தாந்தத் தையே சொல்லுகின்றன என்பது தெளிவாக இருந்தும் பத்தாந் திருமுறையாகிய திருமந்திரம் சங்கர வேதாந்தக் கருத்தைச் சுட்டுவதாக அவர் கூறுகிருர். அவர் கூற்றுப் பொருந்தாது என்பது திருமந்திரப்பாடலை நன்கு ஆராய்ந்து பார்த்தால் புலனுகும்.

மேற்கண்ட திருமந்திரப் பாடலில் "பதியினைப் போல் பசு பாசம் அநாதி" என வருகிறது. கடவுளைப் போலப் பசுவும் பாசமும் அநாதி என்பது இதன் பொருள். கடவுள் எதிலிருந்தும்

தோன்றாத அநாதி ஆவார். அவரைப் போலவே பசுவும் பாசமும் அநாதி என்றால் அவையும் எதிலிருந்தும் தோன்றாதன வாகவே இருக்க வேண்டும். பதியிலிருந்து பசுவும் பாசமும் தோன்றின என்னும் சுப்பிரமணிய முனி கருத்து; இதனால் அடி பட்டுப் போகிறது. கடவுள் என்றுமுள்ளவர். அவரைப்போலப் பசுவும் பாசமும் என்றும் உள்ளவையாகவே இருக்கவேண்டும். மூன்றாமடியில். "பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்" என வருவதற்குப் பதியினைப் பசுவின் பாசங்கள் சென்றணுகமாட்டா அதாவது பாதிக்கமாட்டா எனக்கொள்ள வேண்டும். "பசுவும் பாசமும்" என உம்மைத் தொகையாகக் கொள்ளாமல் "பசுவின் பாசம்" என வேற்றுமைத் தொகையாகக் கொள்ள வேண்டும். பாசம் ஈண்டு பால்பகா அஃறிணைப் பெயராகையால் "பாசங்கள்" எனப் பன்மை குறித்து நிற்கிறது. ஈற்றடியில் "பதியணுகில் பசு பாசம் நில்லாவே" என்பதற்குப் பதி தரிசனம் கிட்டும் போது பசுவின் பாசங்கள் பசுவைப் பிணிக்க முடியாமல் போய்விடும் என்பது பொருளாகும். இப்படிப் பொருள் கொள்ளாமல் பசு பாசங்கள் முத்தியில் இருக்க மாட்டா எனக் கொண்டால் "பதியினைப் போல் பசுபாசம் அநாதி" என்ற அடி இடிக்கும். பாசங்கள் முத்தியில் பசுவைப் பிணிக்க முடியாமல் போகுமேயன்றி இல்லாமல் போகமாட்டா. சுப்பிரமணிய முனி 'பதியினைப் போல்' என வரும் தொடரைச் சிந்திக்காமல் பொருள் எழுதியிருப்பதால் அவர்கருத்துப் பொருந்தாது.

**பதிபசு பாசம்:**

சைவசித்தாந்தம் பதி பசு பாசமென முப்பொருளுண்மை கூறுகிறது. இது சைவசித்தாந்தத்திற்குரிய குறியீட்டுத் தொட ராகும். திருமுறைகளில் பசு என்றோ பாசம் என்றோ வந்தால் அது சைவசித்தாந்தத்தைக் குறிக்கிறது என்பது தெளிவு.

**திருவாசகத்தில் மும்மலம்:**

மணிவாசகப்பெருமான் கீர்த்தித் திருவகவலில்

"மாதிற்கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்

அழுக்கடை யாம லாண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியு
மூல மாகிய மும்மல மறுக்கும்
தூய மேனிச் சுடர்விடு சோதி''

எனக் கூறியருளியிருக்கிறார்.

இங்கே மூலமாகிய மும்மலம் என ஆணவம் கன்மம் மாயை என்ற மூன்றையும் அடிகள் குறிப்பிடுகிறார். இவை மூன்றும் மூலம் என்பதால் "இவை வேறு எதிலிருந்தும் தோன்றவில்லை- அநாதியாக இருக்கின்றன" என்னும் உண்மை புலனாகிறது. மும்மலம் என்பது சைவசாத்திரங்களில் வரும் குறியீட்டுத் தொடராகும்.

ஞானசம்பந்தப் பெருமான் திருமுதுகுன்றத் திருப்பதிகத்தில்

"விளையாததொர் பரிசில்வரு பசுபாசவே தனையொண்
தளையாயின தவிரவ்வரு டலைவன்னது சார்பாம்
களையார்தரு கதிராயிர முடையவ் வவனோடு
முளைமாமதி தவழும் உயர் முதுகுன்றடை வோமே"

எனத் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். இதில், "விளையாத தொர் பரிசில்" என்றால், எதிலிருந்தும் தோன்றாத அநாதியாக வுள்ள என்று பொருள். பசு-ஆன்மா; பாசம்-ஆணவமலம்; வேதனை-இன்ப துன்ப வேதனைகளைப் பயக்கும் கன்மமலம்; ஒண்தளை-ஒளிப் பொருளாகிய மாயா மலம். இங்கே சம்பந்தர் பசுவாகிய ஆன்மாவையும் பாசமாகிய ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்றையும் குறிப்பிடுகிறார். மும்மலங்களையும் அவர் ஈண்டு சொல்லியிருந்தாலும் அவர் பாடல்கள் எதிலும் "மும்மலங்கள்" என எண்ணிக்கை சுட்டிய தொடர் வரவில்லை.

அப்பர் சுவாமிகள் திருப்பயற்றூர் திருப்பதிகத்தில்

"புலன்களைப் போகநீக்கிப் புந்தியை யொருங்கவைத்து
இலங்களைப் போகநின்று விரண்டையு நீக்கியொன்றாய்
மலங்களை மாற்றவல்லார் மனத்தினுட் போகமாகிச்
சினங்களைக் களைவர் போலும் திருப்பயற் றூரனாரே."

எனக் கூறியருளியிருக்கிறார். இதில் மலங்கள் எனச்சுட்டுகிறாரே யல்லாமல் "மும்மலம்" எனச் சுட்ட வில்லை. அப்பர் பாடல் எதிலும் "மும்மலம்" என்னும் எண்ணிக்கைத் தொடர் வரவில்லை. சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருச்சுழியல் பதிகத்தில்

"மலந்தாங்கிய பாசப்பிறப் பறுப்பீர்துறைக் கங்கைச்
சலந்தாங்கிய முடியான்அமர்ந் திடமாந்திருச் சுழியல்
நிலந்தாங்கிய மலராற்கொழும் புகையால்நினைந்
தேத்தும்
தலந்தாங்கிய புகழாம்மிகு தவமாம் சது ராமே."

எனப் பாடியருளியிருக்கிறார். இப்பாட்டில் "மலந்தாங்கிய பாசப் பிறப்பு" எனக் கூறுகின்றாரேயன்றி "மும்மலம்" எனக் குறிக்க வில்லை அவரே வேறோர் இடத்தில்,

"மலமெலாம் அறும் இம்மையே மறுமைக்கும்
வல்வினை சார்கிலாச்
சலமெலாம் ஒழிநெஞ்சமே" எனக் கூறுகிறார்

இங்கு "மலமெலாம்" எனப் பன்மையாகச் சொல்கிறாரேயன்றி "மும்மலம்" என எண்ணிக்கை குறிக்கவில்லை. மூவர் தேவாரத் திலும் இவ்வாறு எண்ணிகை சுட்டாமல் வந்த "மலம்" என்ற சொல் திருவாசகத்தில் மட்டுமே "மும்மலம்" என எண்ணிக்கை சுட்டுகிறது. சைவசாத்திரங்களில் "மும்மலம்" என்னும் சொல் பெரிதும் பயிலப் படுவதால் திருவாசகத்தில் அவ்வாறு வருவது சிந்திக்கத்தக்கது. மெய்கண்டார் மணிவாசகருக்குப் பின்னே வந்தவர் அவருக்கு முன்னே இருந்த மணிவாசகர் "மும்மலம்" என எண்ணிக்கை சுட்டுவது கொண்டு அவர் காலத்தில் சித்தாந்த சாத்திரங்கள் தோன்றாவிட்டாலும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் வழக்கத்தில் பரவியிருந்தன என்பது புலனாகிறது. ஆகமங்களில் "மும்மலம்" எனும் தொடர் வருகிறது. அதனை மணிவாசகர் தமிழில் சுட்டியிருக்கிறார் என்று கொண் டாலும், மூவர் காலத்திலும் பார்க்க மணிவாசகர் காலத்தில் சைவ சித்தாந்த அறிவு மேலோங்கியிருந்ததென்றே கொள்ள வேண்டியுள்ளது. மூவர் காலத்தில் சுருங்கிய அளவில்

பரவியிருந்த சித்தாந்தக் கருத்துக்கள் மணிவாசகர் காலத்தில் மேலோக்கியிருந்ததை நோக்கும்போது "தத்துவவாதம்" மணி வாசகர் காலத்தில் அதிகமாக இருந்த தென்றே முடிவு கட்ட வேண்டுவதாகிறது. இதுகொண்டு மணிவாசகர் மூவர்க்கும் பின்னே வந்தவர் என அறிஞர் பலர் கருதுகின்றனர்.

மும்மலம் என்னும் சைவசித்தாந்தக் குறியீட்டைப் பல இடங்களில் மாணிக்கவாசகர் கையாளுகிறார்.

திருத் தசாங்கத்தில்

"கோற்றேன் மொழிக்கிள்ளாய் கோதில் பெருந்துறைக் கோன்
மாற்றுரை வெல்லும் படைபகரா — யேற்று
ரழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயும்
கழுக்கடைகாண் கைக்கொள் படை"
— எனக் கூறுகிறார்

சிவபெருமான் கையிலுள்ள திரிசூலம் என்னும் ஆயுதம் மும்மலங்களையும் நீக்குவதற்கறிகுறியாக விளங்குகிறது என்பது இதன்பொருள்.

பண்டாயநான் மறையில்,

"உள்ள மலமூன்று மாயவுகுபெருந்தேன்
வெள்ளந் தரும்பரியின் மேல்வந்த — வள்ளன்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவும் கெடும்பிறவிக் காடு" என நவில்கிறார்.

"உள்ள மல மூன்றும்" என்பதால் மலங்கள் மூன்றும் என்றும் உள்ள அநாதிப் பொருள்கள் என்பது பெறப்படுகிறது.

இறுதியாகத் திருவாசகத்திலுள்ள அச்சோப்பதிகத்தில் கடைசிப் பாட்டு பின் வருமாறு முடிகிறது:—

"செம்மை நல மறியாத சிதடரொடும் திரிவேனை
மும்மைமல மறுவித்து முதலாய முதல்வன்றான்
நன்மையுமோர் பொருளாக்கி நாய் சிவிகையேற்றுவித்த
அம்மையெனக் கருளியவாறார் பெறுவாரச் சோவே"

முத்தி நிலையில் மும்மலப் பிணிப்பு அறுபடும் என்பதை இப் பாடல் வாயிலாக அடிகளார் நமக்கு உணர்த்துகிருர்.

**ஐம்மலம்:** சித்தாந்த சாத்திரங்களில் மும்மலங்களோடு மாயேயம், திரோதானம் ஆகிய இரண்டையும் கூட்டி ஐம்மலங்கள் எனவும் சொல்லப்பட்டுள்ளது. சிவஞான சித்தியாரில் வருகின்ற பின் வரும் பாடல்கள் இதனை உணர்த்தும்.

> "மும்மல நெல்லி னுக்கு முளையொடு தவிடு உமிப்போல்
> மம்மர் செய்து அணுவின் உண்மை வடிவினை மறைத்து நின்று
> பொய்ம்மைசெய் போகபந்த போத்திருத் துவங்கள் பண்ணும்
> இம்மலம் மூன்றி னேடும் இருமலம் இசைப்பன் இன்னும்"

> "மாயையின் காரியத்தை மாயேய மலம தென்றும்
> ஏயும்மும் மலங்கள் தத்தந் தொழிலினை இயற்ற ஏவும்
> தூயவன் தனதோர் சத்தி திரோதான கரிய தென்றும்
> ஆய்வம்இம் மலங்கள் ஐந்தும் அணுக்களை அணைந்து நிற்கும்"

சித்தாந்தத்தில் சுத்தமாயை அசுத்த மாயை பிரகிருதி மாயை என மூன்ருக மாயையை வகுத்துச் சொல்வது வழக்கம். மாயை ஒன்றேயாயினும் ஆணவமல வியாபகத்தின் வன்மை மென்மை பற்றி அஃது இவ்வாறு வகுக்கப்பட்டுள்ளது. மாயையின் காரியங்கள் என்பது மாயையிலிருந்து தோன்றிய பொருட்களைக் குறிக்கும். சுத்த மாயையிலிருந்து தோன்றிய பொருட்களை வைந்தவம் எனச் சொல்லுவர். அசுத்த மாயையிலிருந்து தோன்றிய பொருட்களை மாயேயம் எனச் சொல்வர். பிரகிருதி மாயையிலிருந்து தோன்றிய பொருட்களைப் பிராகிருதம் எனச் சொல்வர். அசுத்த மாயையின் காரியத்திலிருந்தே பிரகிருதி மாயை தோன்றுவதால், அசுத்த மாயாப் பொருட்களையும் பிரகிருதி மாயாப் பொருட்களையும் சேர்த்து மாயேயம் எனச் சொல்வதுமுண்டு. உலகமும் உடலும் மாயேயம் ஆகும். மும்

மலங்களிலுள்ள மாயை மாயேயமாக மாறியே நமக்குப் பயன் படுகிறது. இதன் காரணமாக மும்மலங்களோடு மாயேயத்தையும் ஒருமலமாகச் சாத்திரம் சொல்லுகிறது.

இறைவன் முத்தி நிலையில் நமக்கு நேரிடையாக அருள்செய்வான். அப்பொழுது அவன் சக்தியைத் திருவருள் சக்தி என்று கூறுவர். உலகியலில் நம்மை ஈடுபடுத்துவதற்கும் இறைவனின் திருவருள் சக்தி துணைசெய்யும். அப்பொழுது அதனைத் திருவருள் சக்தி எனச் சொல்லாமல் திரோதான சக்தி எனச் சொல்வது வழக்கம். மும்மலங்களையும் பாகப் படுத்துவதற்காக இறைவன் மறைமுகமாக நின்று துணை செய்கிறான். மலங்களைப் பாகப்படுத்துகின்ற இச்சக்தியையும் மலமாக உபசரித்துச் சொல்வது மரபு.

இந்த அடிப்படையில் சித்தாந்த சாத்திரங்கள் ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதானம் - என மலங்களை ஐந்தாக எண்ணிக்கை இட்டுச் சொல்லும். இந்த ஐம்மலக் குறியீடு சித்தாந்த சாத்திரத்தைத் தவிர வேறு நூற்களில் பெரும்பாலும் காணப்படவில்லை.

திருமுறைகளுள் மூவர் தேவாரத்தில் மும்மலக்குறியீடும் வரவில்லை; ஐம்மலக் குறியீடும் வரவில்லை. மூவர் தேவாரங்களும் ஏழு திருமுறைகளைக் கொண்டதாகும். எட்டாந் திருமுறையாகிய திருவாசகத்தில் மும்மலக் குறியீடு வருவதை முன்புகண்டோம். ஒன்பதாந் திருமுறையிலும், பதினோராந்திருமுறையிலும் மும்மலக் குறியீடோ ஐம்மலக் குறியீடோ வரவில்லை. பத்தாந்திருமுறையாகிய திருமந்திரத்தில்

''மும்மலங் கூடி முயங்கி மயங்குவோர்
அம்மெய்ச் சகலத்தர் தேவர் சுரர் நரர்
மெய்ம்மையில் வேதா விரிமிகு கீடாந்தத்
தம்முறை யோனிபுக் கார்க்கும் சகலரே''

என ''மும்மலக் குறியீடு'' வந்துள்ளது. திருமந்திரம் திருவாசகத்திற்கு முற்பட்டதாகுமென அறிஞர்கள் கருதுகின்றனர். திரு

முறைகளிலேயே திருமந்திரம் ஒன்றில்தான் சித்தாந்தக் குறியீடுகள் அனைத்தும் வருகின்றன.

மணிவாசகருக்குப் பின்னர் வந்த திருமுறைகளில் பெரிய புராணத்தில் மட்டும்தான் மும்மலக்குறியீடு வருகிறது. கண்ணப்ப நாயனார் புராணத்தில் சேக்கிழார்

"முன்புதிருக் காளத்தி முதல்வனார் அருள்நோக்கால்
இன்புறுவே தகத்திரும்பு பொன்னானாற் போல் யாக்கைத்
தன்பரிசும் வினை இரண்டும் சாருமலமூன்றுமற
அன்பு பிழம்பாய்த் திரிவார் அவர்கருத்தின்
அளவினரோ"

எனக்கூறுகிறார். சேக்கிழார் மணிவாசகருக்குப் பிற்பட்டவர். அவர் திருவாசகத்தைப் பின்பற்றியே இவ்வாறு சொல்லியிருக்கிறார் எனக் கொள்ளவேண்டும்.

ஐம்மலக்குறியீடு இன்னும் அதிக சிந்தனைக்குரியது. மணிவாசகர் திருவாசகம் நீத்தல் விண்ணப்பத்தில்,

"குலங்களைந்தாய் களைந்தாயென்னைக்குற்றம்
கொற்றச்சிலையாம்
விலங்கலெந்தாய் விட்டிடுதி கண்டாய் பொன்னின்
மின்னுகொன்றை
யலங்கலந்தாமரை மேனியப்பா யொப்பில்லாதவனே
மலங்களைந்தாற் சுழல்வன் தயிரிற்பொருமத்துறவே"

என "ஐம்மலக்" குறியீட்டைக் கையாண்டிருக்கிறார். திருமந்திரம் தவிரப் பெரியபுராணம் உட்பட்ட எந்தத் திருமுறையிலும் ஐம்மலக்குறியீடு வரவேயில்லை.

திருமூலர்

"அணுதி பசுவியாத்தி யாகு மிவனை
அணுதியில் வந்த மலம் ஐந்தால் ஆட்டி
அணுதியிற் கேவல மச்சக லத்திட்டு
அணுதி பிறப்பறச் சுத்தத்து ளாகுமோ"

எனத்திருமந்திரத்தில் திருமூலர் ஐந்து மலங்கள் பற்றிப் பேசுகிறார். திருமந்திரம் சாத்திரமும் தோத்திரமுமாக அமைந்த நூலாதலால் அதன்கண் ஐந்து மலம் பற்றிய குறிப்பு வருவது இயல்பேயாகும். ஆனால் தோத்திரமாக அமைந்த ஏனைத் திருமுறைகள் எதிலும் வராமல், திருவாசகத்தில் மட்டும் ஐம்மலக் குறிப்பு வருவது சிந்திக்கத்தக்கது.

**தத்துவவாதம் :**

சித்தாந்தம் அநாதியாதலால் அஃது எக்காலத்திலும் உண்டு என்பதில் ஐயமில்லை. சைவம் உணர்த்தும் பக்திநெறியில் உண்டாகும் ஐயப்பாடுகளை நீக்கி அதனை உறுதிப்படுத்தவே சித்தாந்தம் தோன்றியிருக்கிறது. ஞானசம்பந்தர் அப்பர் காலத்தில் வேற்றுச்சமயங்கள் சைவத்தைத் தாக்கினவேயல்லாமல், வேற்றுச்சமய தத்துவ வாதங்கள் அளவைமுறை கொண்டு அதனைத் தாக்கவில்லை. இதனால் ஞானசம்பந்தர் உள்ளிட்ட அருளாளர்கள் ஓரளவே சித்தாந்தம் பற்றிப் பேசியிருக்கின்றனர். ஆனால் மணிவாசகர் காலத்தில் சமயதத்துவ வாதங்கள் குறிப்பாக வியாச முனிவர் செய்த பிரம்ம சூத்திர வாதமும் மீமாஞ்சக வாதமும் நாத்திகவாதமும அதிகமாகத் தமிழகத்தில் புகுந்து சைவப்பத்தி நெறியை அலைக்கழித்திருக்கின்றன. இதனை மணிவாசகர் பாடியருளிய போற்றித் திருவகவல் வாயிலாக அறியமுடிகிறது.

"ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியரும்
சரத மாகவே சாத்திரம் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னும்
சண்ட மாருதம் சுழித்தடித் தாஅர்த்
துலோகா யதனெனும் ஒண்டிறற் பாம்பின்

கலாபே தத்த கடுவிட மெய்தி
அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவும்''

இங்கே மணிவாசகர் குறிப்பிடுகிற மீமாஞ்சகமும், மாயாவாத மும் வேதத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும். தர்க்கத்தின் அடிப்படையில் அக்காலத்தில் அவற்றை நிலை நாட்டப் பலர் முயன்றிருக்கின்றனர். நாத்திகரும் அதுபோலவே தர்க்கத்தைத் துணையாகப் பற்றி வாதித்திருக்கின்றனர். இந் நிலையில் சைவமும் அளவை நூல்முறை பிறழாது வாதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் சித்தாந்தக் குறியீட்டுச் சொற்களைக் கையாண்டு தத்துவவாதம் பேசும் சமயிகளை மறுக்கிருக்கின்றனர். இது மணிவாசகர் காலத்தில் மிகுதியாக இருந்ததாலேயே சித்தாந்தக் குறியீடுகளை அவர் இயல்பாகவே தோத்திரப் பாடல்களில் கையாண்டிருக்கிறூர்.

**பசுபாசம் :**

பாசத்தால் பிணிப்புண்ட உயிரைப் பசு என்றும் அப்பசுக் களைப் பிணிக்கும் மலங்களைப் பாசம் என்றும் சைவசித்தாந்தம் பெயரிட்டுள்ளதை முன்பு கூறினோம். பசுபாசம் என்னும் சித்தாந்தக் குறியீட்டுச் சொற்களை மணிவாசகர் பல இடங் களில் கையாளுகிறூர். உதாரணமாகக் கண்டப்பத்தில் பின் வருமாறு பாடுகிறூர்,

''கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாளனுய் வந்து வனப்பெய்தியிருக்கும் வண்ணம்
பல்லோரும் காணவென்றன் பசுபாசமறுத்தானை
எல்லோரு மிறைஞ்சுதில்லை யம்பலத்தே கண்டேனே''

**மூலகன்மம் :**

சைவசித்தாந்த சாத்திரங்களில் மூலகன்மம் பற்றி இரண்டோர் இடங்களில் மட்டுமே பேசப்பட்டுள்ளது. அதுவும் தெளிவாக விளக்கப்படாமல் குறிப்பாகவே சுட்டப்பட்டுள்ளது. அதுபற்றிச் சைவசித்தாந்த அறிஞர்கள் தம்தம் கருத்திற்கேற்ப விளக்கம் சொல்லிவருகின்றனர். சிவஞானசுவாமிகள் தாம் எழுதிய சிவஞான போதச் சிற்றுரையில், ''அநாதியே மலத்தைப்

பற்றுதல் உயிரின் வினையாய் எனச் சொல்வதால், அனாதியே உயிர் மலத்தைப் பற்றிய செயலை மூலகன்மம் எனக்கொள்வதே பொருத்தமாகும். இம்மூலகன்மம் பற்றிய குறிப்பு மணிவாசகத்தில் பேசப்பட்டுள்ளது. திருக்கழுக்குன்றப் பதிகத்தில்

"இயக்கிமார் அறுபத்து நால்வரை
 எண்குணம் செய்த ஈசனே
மயக்கமாயதொர் மும்மலப் பழ
 வல்வினைக்குளழுந்தவுந்
துயக்கறுத் தெனையாண்டு கொண்டுநின்
 தூய்மலர்க்கழல் தந்தெனைக்
கயக்க வைத்தடியார் முனேவந்து
 காட்டினார் கழுக்குன்றிலே"

எனவருவது ஆராயத்தக்கது. இப்பாட்டில் மணிவாசகர் மும்மலப்பழவல்வினை என்று கூறுகிறார். மும்மலம் ஆணவம் கன்மம் மாயையைக் குறிக்கும். **பழவல்வினை** என்பது காரிய கன்மத்தைச் சொல்லி வல்வினை என மீண்டும் கன்மத்தைச் சொல்வதால் அவைவெவ்வேறு கன்மத்தைக் குறிக்கும் என்பது புலனாகும். ஆணவம்போல மூலகன்மமும் அனாதியாதலால் மும்மலத்துக்குள் சுட்டப்படும் கன்மம் மூலகன்மத்தையே குறிக்கும். மும்மலங்களால் பின்னர் உண்டாகும் வினை ஆதிகன்மம் என்றும் காரிய கன்மம் என்றும் சொல்லப்படும். காரியகன்மம் பின்னர்த் தோன்றுவதால், மூலகன்மமாகிய கன்மத்தை முன்னர்க்கூறி அடுத்து வல் வினையாகிய காரியகன்மத்தைச் சுட்டியிருக்கிறார். மணிவாசகரைப் பின்பற்றியே சேக்கிழார் பெருமான் திருநாவுக்கரசுநாயனார் புராணத்தில்,

'இருவினைப்பாசம் மும்மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில் வீழ்மாக்கள் ஏறிட
அருளுமெய் அஞ்செழுத் தரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ"

எனப்பாடியருளியிருக்கிறார். ஈண்டு இருவினை என்பது காரிய கன்மத்தையும் மும்மலத்துள் வரும் கன்மம் மூலகன்மத்தையும் சுட்டுகின்றன.

**இருவினை ஒப்பு :**

இறைவன் குருநாதனாக வருவதற்கு முன் உயிரினிடத்தே மலபரிபாகமும் இருவினை ஒப்பும் உண்டாகும் எனச் சைவ சாத்திரங்கள் சொல்கின்றன. நல்வினையின் பயனாகிய இன்பத்தையும் தீவினையின் பயனாகிய துன்பத்தையும் சமமாகவே கருதி விருப்பு வெறுப்பற்ற நிலையில் ஒழுகுவது இருவினை ஒப்பாகும்.

"ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்"

என்னும் சேக்கிழார் வாக்கு இதனைத் தெளிவுபடுத்தும். மணி வாசகர் திருக்கழுக்குன்றப் பதிகத்தில்,

"பிணக்கிலாத பெருந்துறைப் பெரு
மானுன்னாமங்கள் பேசுவார்க்
கிணக்கிலாததோர் இன்பமேவருந்
துன்பமே துடைத் தெம்பிரா
னுணக்கிலாததோர் வித்துமேல்விளை
யாமலென்வினை யொத்தபின்
கணக்கிலாத் திருக் கோல நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே"

எனப்பாடியருளியிருக்கிறார். இப்பாடலில் 'என்வினை ஒத்தபின்' என்பது இருவினை ஒப்பைச் சுட்டும். பிராரத்தவினை நுகர்ச்சிக் கண் வரும் இருவினை ஒப்பை இது சுட்டவில்லை எனச்சொல் வோரும் உண்டு. அவ்வாறு கூறுவோரும் ஆகாமிய இருவினை ஒப்பு என இதனைச் சொல்வதால், எவ்வாறிருப்பினும் இஃது இருவினை ஒப்பைச்சுட்டுகிறதென்பது தேற்றம்.

**மரம் முந்தியா? வித்துமுந்தியா?**

சைவசித்தாந்தத்தில் மிக இடர்ப் பாடான ஓர் இடம் உண்டு. நமக்கு இந்த உடல் முன்னை வினையின் காரணமாக அமைகிறது. முன்னைவினை அப்போது நமக்கு இருந்த உடலைக் கொண்டு செய்யப்படுவதாகும். உடலால்வினையும், வினையால் உடலும் வரும். அநாதி கேவலத்தில் ஆன்மாவுக்கு எந்த

உடலும் இல்லை. முதன்முதல் ஆன்மாவை உடல் பொருந்திய தென்றால், வினை இல்லாமல் எப்படி இவ்வுடலை இறைவன் ஆன்மாவிற்கு அளித்திருப்பான் என்னும் வினு எழும். வினை காரணமாக உடலை அளித்தான் என்றால் அநாதி கேவலத்தில் ஆன்மாவிற்கு வினை செய்வதற்குரிய உடல் இல்லையே? என்னும் வினு எழும், மூலகன்மம் பற்றிய குறிப்பை இவ்விடத்தில் கொண்டு வரக்கூடாது. அஃது எவ்வித உடலின்றிச் செய்யப் படுவதாகும். ஆதிகன்மம் உடல் வாயிலாகச் செய்யப்படுவது; உடலின்றி வினைவராதாதலால் வினை முதலில் ஆன்மாவைப் பொருந்தியதா, உடல் முதலில் அதனைப் பொருந்தியதா? என்னும் வினுவிற்கு சிவஞான சித்தியாரும் சிவப்பிரகாசமும் நிறைவான விடையை அளிக்கவில்லை. சிவஞான சித்தியாரில்,

"உடற் செயல் கன்மம் இந்த உடல் வந்தவாறே
தென்னில்
விடப்படும் முன்னுடம்பின் வினையிந்த உடல்விளைக்கும்
தொடர்ச்சியாய் ஒன்றுக்கொன்று தொன்றுதொட்ட
நாதிவித்தின்
இடத்தினின் மரம்மரத்தின் வித்தும் வந்தியையுமா
போல்"

என அருணந்தி சிவம் கூறியிருக்கிறார். இதற்குச் சிவஞான சுவாமிகள் எழுதிய உரைவருமாறு: அங்ஙனம் உடலும் வினையும் வித்தும் மரமும் போலத்தம்முட் காரண காரியமாய்த் தொன்று தொட்டுப் பிரவாக அநாதியாய் வருதலின் அவற்றிற் குத் தம்முள் முற்பிற்பாடு முடியாது." உடல் முந்தியா? வினை முந்தியா? என்னும் வினு மரம் முந்தியா? வித்து முந்தியா? என்பது போல விடை செல்ல முடியாத அருவழக்காய் முடியுமாதலால் இவற்றிற்கு முற்பிற்பாடு கூற முடியாது என்பது சிவஞான சித்தியார் கருத்தாகும்.

சிவப்பிரகாசத்தில்,

"மாயைமுத லெனவினையின் பான்மைமுத லெனவே
மன்னுபனை விதை மரபின் மயங்கும் மலம்
சுத்தற் (கு)

ஏயுநெறி யென்சொல் அதன் இயல்பாயின் முத்தி
என்பதென்மற் றிவைநிற்க இருங்கலாதி
உணர்வாய்
மேயபின் நற் றன்னுருவம் விளங்காமை விளக்கும்
மிகும் உலகந் தனில்என்னில் இவைவிடுங்கால்
உணர்வுள்
தோயு நெறி இலதாதல் அறியாமை யெனநீ
சொல்லியது மலமென்பர் துணிந்து ளோரே''

என உமாபதிசிவம் அருளிச் செய்திருக்கிறார்.

உடல் மாயாகாரியமாதலால் மாயை முந்தியா? வினை முந்தியா! என்னும் வினவை உமாபதிசிவம் எழுப்பி அது பனை முந்தியா? அதன் வித்து முந்தியா? என்பது போல அருவழக் காய் முடியுமென்றும் ஆணவமலத் தொடக்கு ஆன்மாவுக்கு அநாதியாய் இருப்பதால், மாயையும் கன்மமும் அதனைப் பொருந்துமென்றும் அவற்றுக்குள் எது முந்தி? என்னும் வினவை எழுப்பக்கூடாதென்றும் இப்பாடலில் சொல்லியிருக்கிறார்.

அருணந்தி சிவமும், உமாபதி சிவமும் இக் கேள்விக்கு விடையில்லை எனச் சொல்வது போலவே மரம் முந்தியா? வித்து முந்தியா? கோழி முந்தியா? முட்டை முந்தியா? என்பன போன்ற வினக்களுக்கு விடையில்லை யென்றே அனைவரும் சொல்லி வருகின்றனர். சங்க நூற்களிலிருந்து இன்று தோன்றிய நூற்கள் வரை எந்தத் தமிழ் நூலிலும் இதற்கு விடை சொல்லப் படவில்லை. ஆனால் மணிவாசகர் திருவாசகத்தில் இதற்கு விடை சொல்கிறார். திருவாசகம் மட்டுமே இதற்கு விடை அளித்திருப் பதை நோக்கும்போது நம் உள்ளம் பேருவகை எய்துகிறது. அவ்விடை சித்தாந்தத்திற்கு மட்டும் விடையாகாமல் விஞ்ஞான நூற்கட்கும் விடையாக அமைந்திருக்கிறது.

மணிவாசகர் திருச்சதகத்தில்,

''விச்சதின்றியே விளைவு செய்குவாய்
விண்ணுமண்ணக முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்சகப் பெரும்
புலையனேனை உன் கோயில் வாயிலில்

பிச்சனுக்கினும் பெரியவன்பருக்
குரியனுக்கினும் தாம் வளர்த்ததோர்
நச்சு மாமர மாயினுங் கொலார்
நானுமங்ஙனே யுடயநர் தனே''

என அருளிச்செய்திருக்கிறார்.

''விச்சதின்றியே விளைவு செய்குவாய்'' என்றால், வித்து இல்லாமலே மரத்தை உண்டாக்குவாய் என்பது பொருள். ''முதன் முதலில் இறைவன் மரத்தைத்தான் உண்டாக்கினான்; அதன்பின் மரமும் வித்துமாகிய முறைமை தோன்றிற்று'' என்பது மணிவாசகர் கருத்தாகும். மரம் முந்தியா? வித்து முந்தியா? என்னும் வினாவிற்கு மரமே முந்தியது என்னும் விடையை மணிவாசகர் தருகிறார். இறைவன் திருவருள் உள் நின்று உணர்த்த இவ்விடையை அவர் தருவதால் மரமே முந்தி என்னும் விடை சரியானதென்றே நாம் கொள்ளவேண்டும். வித்து இல்லாமல் மரம் எப்படி வந்ததென்று வினவினால், ''இறைவன் தன் ஆற்றலால் முதன் முதல் வித்து இல்லாமலே மரத்தை உண்டாக்கினான்; பின்புதான் மரமும் வித்துமாகிய முறைமையை ஏற்படுத்தி இருக்கிறான்'' என அடிகளார் சொல்கிறார். அவர் வாக்கு அருள் வாக்காதலால் நாம் அதனை ஏற்றுக்கொள்ளக் கடமைப் பட்டுள்ளோம். இருப்பினும் இதனை நிலைநாட்ட உலகியல் சான்று யாதேனும் உண்டா! என நம் உள்மனம் கேட்கவே செய்கிறது. அதற்கும் நாம் ஓரளவு விடைகாண முடியும்.

வெற்றிலைச் செடியில் எந்த விதையுமில்லை: விதை இல்லாமலே அதன் கொடியை நாம் நட்டோமானால் அது தழைத்து வளர்கிறது. இதுபோல் விதையில்லாத பல செடிகள் உண்டு. ஆனால் செடியோ மரமோ இல்லாமல் தோன்றிய விதை எங்கும் காணப்படவில்லை. செடியில்லாத விதையை நாம் பார்க்கவில்லை யாதலால். செடியே முந்தினதாக இருக்க வேண்டும் என்பது புலனாகிறது. இதுகொண்டு கோழி முந்தியா? முட்டை முந்தியா? என்னும் வினாவிற்கும் கோழியே முந்தியது என்றே விடையிறுத்தல் வேண்டும்.

இவ்வாறு உலகியல் விடை சொன்ன மணிவாசகர் இதனுள்ளே நுட்பமாகச் சித்தாந்த விடையும் வைத்திருக்கிறார். உடல் முந்தியா? கன்மம் முந்தியா? எனக் கேட்டால் உடலே முந்தி என விடை கூறல் வேண்டும். உடல் மாயா காரியம் ஆதலால் மாயை முந்தியா வினை முந்தியா என்னும் வினாவிற்கு மாயை முந்தி என்பதே விடையாகும்.

**அநாதி கேவலம்:**

உயிர்கள் அநாதி கேவலத்தில் அறிவிச்சை செயல்களின் இயக்கமின்றி ஆணவமலத்தால் மறைப்புண்டு கிடக்கின்றன. அப்பொழுது இறைவன் கருணையே காரணமாக உயிர்களுக்கு மாயையிலிருந்து சூக்கும உடம்பைப் படைத்து வழங்குகிறான். இந்தச் சூக்கும உடம்பு எல்லா உயிர்களுக்கும் ஒரே மாதிரி யாகவே இறைவனால் வழங்கப்படுகிறது. இதில் ஏற்றத்தாழ்வோ வேறுபாடோ இல்லை. இது வினை காரணமாக அமைவ தன்று; இறைவனின் கருணை காரணமாக அமைவதன்று; இறை வனின் கருணை காரணமாக அமைவதாகும். இந்த உடம்பு பிறவிக்குப் பிறவி மாறுவதில்லை. படைப்புக்காலம் தொட்டுச் சங்கார காலம் வரை அல்லது முத்தி பெறும் வரை அஃது அழியாமல் இருக்கும் சூக்கும தேகம் பெற்றதும் உயிர்களின் அறிவிச்சை செயல்கள் மெல்ல இயங்கத் தொடங்கும். அப் பொழுது தோன்றுகின்ற விருப்பு வெறுப்புக்களை வைத்து இறைவன் உயிர்களுக்கு வெவ்வேறான தூல உடல்களை அமைக் கிறான். முதல் தூலவுடல் விருப்பு வெறுப்புக்காரணமாக அமைவதாகும். தூலவுடல் பெற்றதும் உயிர்கள் நல்வினை தீவினை களைப் புரியத் துவங்குகின்றன. இதன் பின்னரே உடலால் வினையும், வினையால் உடலும் வருகின்ற முறைமையை இறைவன் உண்டாக்கியிருக்கிறான். மாயாகாரியமாகிய சூக்கும தேகம் வினையின்றியே அமைவதால்தான், "விச்சதின்றியே விளைவு செய்குவாய்," என மணிவாசகர் அருளியிருக்கிறார். இவ்வாறாக மாயை முந்தியா? வினை முந்தியா? என்ற இடர்ப்பாடான வினாவிற்கு மாயை முந்தி என மணிவாசகர் அளித்துள்ள விடை சித்தாந்தத்திற்குப் பெரியதொரு கொடையாக விளங்குகிறது.

**சித்தாந்த சாத்திரங்கள் :**

மணிவாசகர் அளித்துள்ள இவ்விடையை ஏன் சித்தியாரிலும் சிவப்பிரகாசத்திலும் சொல்லவில்லை? எனவினுவலாம். சித்தியாரிலும் சிவப்பிரகாசத்திலும் பெரும்பாலான சித்தாந்த ஐயப்பாடுகளுக்குத் தெளிவான விடை உண்டு. ஒருசில ஐயப்பாடுகளுக்குத் தூலவிடைகளாகக் கூறிவிட்டுச் சிறப்பான விடைகளை ஏனைச் சித்தாந்த சாத்திரங்களில் அருணந்தி சிவமும், உமாபதி சிவமும் தந்திருக்கிறார்கள்.

உமாபதி சிவம் மணிவாசகர் விடையை மனத்துட்கொண்டு தாம்பாடிய'' போற்றிப் பஃறொடையில்'' பின்வருமாறு தெளிவுபடுத்திக் கூறியிருக்கிறார்.

''பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண் — **முற்பால்**
**தனுகரண** மும்புவன முந்தந் தவற்றால்
மனமுதலால் வந்தவிகா ரத்தால் — **வினையிரண்டுங்**
**காட்டி** அதனுற் பிறப்பாக்கிக் கைக்கொண்டு
மீட்டறிவு காட்டும் வினை போற்றி''

ஈண்டு ''தனு'' என்பது சூக்கும உடம்பைக் குறிக்கும். ''கரணம்'' என்பது சூக்கும உடம்பில் அமைந்துள்ள மனம் புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கையும் குறிக்கும். முற்பால் தனுகரணமும் புவனமும் தந்து' என்பதற்கு ''முதலில் சூக்கும உடம்பையும் அந்தக்கரணங்களையும் உலகையும் தந்து'' என்று பொருள். ''முதலில் சூக்கும உடலைத் தந்து அதன்கண் உள்ள மனத்தால் தோன்றும் விருப்பு வெறுப்புக்களை வினையாக்கிக் கொண்டு தூல தேகத்தைத் தந்து இருவினைகளைப் புரியும்படி செய்கின்ற திறம் போற்றி'' என்பது மேலே கண்ட பாடலின் கருத்தாகும்.'' முதலில் மாயையின் காரியமாகிய சூக்குமதேகத்தைத் தந்து அதன்பின் வினையைத் தருகிறான்'' என உமாபதி சிவம் இதில் சொல்வதால் உடலே அதாவது மாயையே வினைக்கு முந்தியதென்பது அவர் கருத்தாதல் இனிது விளங்கும். சிவப்பிரகாசத்தில் சொல்லாத விடையைப் ''போற்றிப்பஃறொடை''யில் உமாபதிசிவம் சொல்லியிருக்கிறார். ஆகவே சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கையும் ஒருங்கே படித்தால்

தான் ஐயப்பாடுகள் அனைத்தும் நீங்குமேயன்றி ஓரிரு நூல்களை மட்டும் படித்தால் அவை நீங்க மாட்டா என அறிதல் வேண்டும்.

**சிவஞானபாடியம் :**

சித்தாந்த சாத்திரங்கள் அனைத்தையும் ஒருங்கே கற்றுணர்ந்த சுவாமிகள் சிவஞானபாடியத்தில் மாணிக்கவாசகரையும், ஏனைச்சித்தாந்த சாத்திரக் கருத்துக்களையும் ஒருங்கிணைத்து எழுதியிருப்பது நினைக்கத்தக்கது. சிவஞானபாடியம் இரண்டாம் சூத்திரம் முதற்பகுதியில் சுவாமிகள் பின்வருமாறு எழுதியிருக்கிறார். 'அற்றாயினும் முதற்கண் உற்பவம் ஆமாறு இவ்வியல் பிற்றென்பது பொற்புடைய மாயைப் புணர்ப்பின் கண் — முற்பாற் — றநுகரண மும்புவன முந்தந்தவற்றான் — மன முதலாய் — வந்த விகாரத்தால் — வினையிரண்டும் — காட்டி'' என்பதனான் அறிக. ஈண்டுத் ''தநு'' என்றது சூக்கும தேகத்தை, ''மனமுதலாய்'' — மனங்காரணமாய் என்க. ''விச்சதின்றியே விளைவு செய்குவாய்'' எனவும் ''விண்ணு மண்ணக முழுதும் யாவையும் — வைச்சு வாங்குவாய்''. எனவும் ஓதிய திருவாக்கானும் இவ்விரு வேறுவகையும் கண்டு கொள்க! மேற்கண்டவாறு சுவாமிகள் எழுதியிருப்பதிலிருந்து சித்தாந்த சாத்திரங்களனைத்தையும் ஒருங்கே கற்க வேண்டியதன் அவசியம் புலனாகும்.

**சித்தாந்த அறிஞர்கள் :**

சித்தாந்த சாத்திரங்களில் அங்கு மிங்கும் காணப்படுகின்ற உண்மைகளை ஒருங்கிணைக்காமல் சித்தாந்தப் பேரறிஞர் சிலர் எழுதுவதாலேயே குழப்பங்கள் நேரிடுகின்றன. உதாரணமாகச் சித்தாந்தப் பேரறிஞர் ஒருவர் ''ஆணவ மலத்தால் விருப்பு வெறுப்புக்களை உடையதாய் நிற்கும் உயிர் அவ்விருப்பு வெறுப்புகளுக்கு விடயமாகிய இன்பத் துன்பங்களைத் தருகின்ற கன்ம மலத்தோடுதான் முதற்கண் தொடர்வதாகின்றது. எனவே கன்மம், மாயை என்னும் இரண்டில் கன்மமே முதற்கண் ஆன்மாவைப் பற்றுவதாம் என்க என எழுதியிருக்கிறார். விருப்பு வெறுப்புக்கள் சூக்கும உடம்பு வழங்கப்

பட்டபின் தான் உண்டாகும். சூக்கும உடம்பு மாயா காரிய-மாதலால், மாயையே முதற்கண் ஆன்மாவைப் பொருந்தும் என்பதுதான் பொருத்தம். இதனை அவரே பின்னர் உணர்ந்து பல பக்கங்கள் கழிந்தபின் 'இறைவன் முதற்கண் சூக்கும தேகத்தையே கூட்டுவிப்பான். சூக்குமதேகத்தினுல் சிறிது அறிவும் இச்சையும் செயலும் விளங்கப் பெற்ற ஆன்மாக்கள் தத்தம் தகுதி நிலைக்கேற்பச் செயல்களை அறிந்தும் இச்சித்தும் செய்ய முயலும். அம்முயற்சியே அவைகட்கு வினையாய் அமையும் என்று எழுதியிருக்கிருர். இதில் மாயா காரியமாகிய சூக்கும உடம்பை முதலில் கூறிப் பின்னர் வினையைக் கூறுவதால் மாயையே முந்தி என்பது அவர் கருத்தாதல் பெறப்படும். சித்தாந்த அறிஞர்கள் தடுமாற்றம் எய்தாமல் எழுத வேண்டு-மாளுல், சித்தாந்த சாத்திரங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்துச் சிந்திப்பதோடு திருமுறை வாக்குகளையும் புடைபுடை வைத்து ஆராய வேண்டும் என்க.

**மும்மூர்த்திகளும் சிவபெருமானும்:**

பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவரும் மும்மூர்த்தி-கள் எனப்படுவர். புராணங்களும் இதிகாசங்களும் மும்மூர்த்தி-களுக்குள் ஒருவராக இருக்கும் உருத்திரனையே சிவன் எனக் கூறுகின்றன. சித்தாந்த சாத்திரங்கள் 'சிவன் உருத்திரன் அல்லன் உருத்திரன் ஆன்மா; சிவனே கடவுள்; சிவன்வேறு; உருத்திரன் வேறு; சிவனுக்கு உருத்திரன் என்ற பெயர் சிலவிடங்களில் வரும். அப்போது அது மகாருத்திரனுகிய சிவனைக்குறிக்கு மென்றும், மூவருள் ஒருவனுக வரும் உருத்திரனைக் குணிருத்திரன் எனக்கொள்ள வேண்டுமென்றும் கூறுகின்றன.

திருவாசகத்தில் அடிகள் பிரம்மா, உருத்திரன், விஷ்ணு ஆகிய மூவரும் சிவனை அறிய மாட்டார்கள் எனத் தெளிவாகவே கூறுகிருர். ஏனைத் திருமுறைகளில் இக்குறிப்பு ஓரளவு வந்தாலும் இவ்வளவு தெளிவாக வரவில்லை. மணிவாசகர் திருவெண்பாவில் பின்வருமாறு பாடுகிருர்.

"மூவரும் முப்பத்து மூவரும் மற்றெழிந்த
தேவரும் காணுச் சிவபெருமான் — மாவேறி
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே இன்பம் மிகும்"

மூவர்-மும்மூர்த்திகள்; முப்பத்துமூவர்—உருத்திரர் பதினெருவரும் ஆதித்தர் பன்னிருவரும், மருத்துவர் இருவரும் வசுக்கள் எண்பரும் ஆவர். மற்றெழிந்த தேவர்-இந்திரன், வருணன், அக்கினி முதலியோராவர். இவர்களனைவராலும் சிவன் அறியப் படாதவன் என மணிவாசகர் கூறுவதால் சிவனை நான்காம் நிலையில் வைத்து அவர் பேசுகிருர் என்பது பெறப்படும்.

சிவஞானபாடியம் முதற் சூத்திரம் முதற்பகுதியில் சிவஞான சுவாமிகள் இவ்வேறுபாடுணராது மகாருத்திரனுகிய பரமசிவனைக் குணிருத்திரனுக வைத்தெண்ணுவோரை நோக்கி "நம்மவரவரே — மூவரென்றேயெம் பிரானெடு மெண்ணி விண்ணுண்டு மண்மேற்-றேவரென் றேயிறு மாந்தென்ன பாவந்திரிதவரே என வாதவூரடிகள் இரங்கிக் கூறிய திருவாக்கும் அறிக" என்று எழுதியிருக்கிருர். சிவஞான பாடிய முதற் பகுதியிலேயே எடுத்த எடுப்பில் மணிவாசகர் திருவாக்கைச் சுவாமிகள் மேற்கோள் காட்டுவது சிந்திக்கத்தக்கது. சிவன் நான்காம் நிலையினன் என்றும் சித்தாந்தக் கருத்தை வாதவூரடிகள் திருவாக்கு வலியுறுத்துவதால்தான் அவ்வாக்கை சுவாமிகள் மேற்கோள் காட்டியிருக்கிருர் என அறிதல் வேண்டும்.

**சித்தாந்த சைவம்:**

பதிபசு பாச உண்மைகளைச் சொல்வதால் மட்டும் ஒருவரைச் சித்தாந்த சைவர் என உறுதியாகத் தீர்மானிக்க முடியாது. சைவத்தைச் சார்ந்த அகச்சமய வாதிகளும் இவற்றை ஒப்புக்கொள்ளுகின்றனர். முத்திநிலை பற்றித்தான் அவர்களுக்கும் சித்தாந்த சைவர்களுக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளது. முத்தி நிலையில் ஆன்மா சிவசமம் என்று சிவசமவாதிகளும் அந்நிலையில் ஆன்மா இறைவனேடு கலந்து இல்லாமற் போகுமென்று சிவாத்துவித சைவர் முதலியோரும் கூறுகின்றனர். முத்திநிலையில் ஆன்மா உண்டென்றும் அஃது

இறைவனோடு ஒன்றாகக் கலந்தாலும் இல்லாமற் போவதில்லை என்றும் பேரானந்தத்தை அனுபவிக்கிறதென்றும் ஆண்டும் அது சிவனுக்கடிமையென்றும் சித்தாந்த சைவர்கள் கூறு-கின்றனர்.

மணிவாசகர் சித்தாந்த சைவரா? என்பதை அவர் முத்தி நிலை பற்றிக் கூறும் திருவாக்குகளை வைத்தே தீர்மானிக்க வேண்டும்.

"தந்த துன்தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா யார்கொ லோ சதுரர்
அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப் பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனோர் கைம்மாறே"

என மணிவாசகர் கோயில் திருப்பதிகத்தில் பாடியுள்ளார். அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்", என அவர் சொல்வதால் "ஆனந்த அனுபவம் உண்டென்பதும்", பெற்றேன் என்பதால் முத்தி நிலையில் அவர் இருக்கவே செய்வார் என்பதும் பெறப்படுகின்றன. முத்திப் பேற்றில் ஆன்மா உண்டென்றும் ஒன்றாகக் கலந்தாலும் இல்லாமற் போவதில்லை என்றும், அது பேரானந்தத்தை அனுபவிக்கிற தென்றும் சித்தாந்தம் சொல்லும் கருத்தை மணிவாசகர் இப்பாடல் வாயிலாக உணர்த்துவதால் அவர் சித்தாந்த சைவரே என்பது பெறப்படும்.

"முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்,
சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்த னெனக் கருளியவா றார் பெறுவார் அச்சோவே"

எனத் திருவாசகம் அச்சோப்பதிகத்தில் மணிவாசகர் திருவாய் மலர்ந்திருக்கிறார். 'சிவமாக்கி எனையாண்ட' என அவர் சொல்-வதால், இது முத்திநிலை பற்றிப் பேசப்படும் இடம் என்பது

போதரும். 'எனையாண்ட' என வருவதை நாம் சிந்திக்க வேண்டும். முத்திநிலையிலும் அவன் "என்னை ஆள்கிறான்". என்பது இதன் பொருள் ஆகும். ஆள்கிறாள்" என்றால் ஆண்டு ஆளப்படுபவராகிய இவர் அடிமை என்பது தானே போதரும். ஆண்டான் அடிமைத் திறத்தை "எனையாண்ட" என்னும் தொடர் இனிது புலப்படுத்துகிறது. சுவாமிகள் தாம் அடிமை என்பதைப் பல இடங்களில் புலப்படுத்துகிறார்.

"கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன் கண்கள் களிகூர
வெண்ணாதிரவும் பகலு நானவையே யெண்ணுமது வல்லால்,
மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும்
அண்ணா எண்ணக் கடவேனோ வடிமை சாலவழ குடைத்தே"

எனக் குழைத்த பத்தில் அடிகளார் பாடுகிறார். அவர் அடிமை என்பதை இவ்வாறு புலப்படுத்துவதாலும் "எனையாண்ட" என முத்தி நிலையில் உள்ள அனுபவத்தைக் கூறுவதாலும் ஆன்மா பெத்தம் முத்தி இரண்டிலும் சிவனுக்கடிமையே என்பது தெளிவாக உணரப்படும். எனவே மணிவாசகர் சித்தாந்த சைவக் கருத்தையே தம் பாடல்களில் அருளிச் செய்திருக்கிறார் என்பதைக் கூறவேண்டுவதில்லை.

'சிவமாக்கி' என இப்பாடலில் வருவதை வைத்துச் "சிவம்" என்பது பிரமத்திற்கு மற்றொரு பெயரே ஆதலால், நான் முத்தியில் பிரமம் ஆகிறேன்" என்னும் கருத்தைத்தான் அடிகளார் இங்கே சொல்கிறார் எனச் சங்கரவேதாந்திகள் கூறுவர். "சிவமாக்குதல்" என்பதால் முத்தியில் ஆன்மா சிவசமம் என்னும் கருத்தையே சுவாமிகள் கூறுவதாகச் சிவசமவாதிகள் சொல்வர்.

"அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே
பவமாயங் காத்தென்னை யாண்டு கொண்டபரஞ்சோதி

நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாமொழிந்து
சிவமானவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ''

எனத் திருத்தெள்ளேணத்தில் சுவாமிகள் பாடியுள்ளார். இதில் ''நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாமொழிந்து'' எனச்சொல்வதால் 'சிவஞான சோதியை இறைவன் வழங்கியதும் ''நாம்'' என்னும் முனைப்பு ஒழிந்து சிவமாகின்றோம் என்பது புலனாகிறது. இறைவன் முத்தி நிலையில் தன் எண் குணங்களையும் உயிர் மாட்டுப் பதிவிக்கின்றான். உயிர் சார்ந்ததன் வண்ணமாகும் தன்மை உடையது. பெத்தநிலையில் பாசத்தைச் சார்ந்து பாசமே ஆகிநின்ற உயிர் முத்தி நிலையில் சிவத்தைச் சார்ந்து சிவமேயாகி நிற்கிறது. சிவனின் எண் குணங்கள் பதிவதால் ஆன்மா சிவமாக முடிகிறது. இதனையே ''சிவமாக்கி'' எனச் சுவாமிகள் கூறுகிறார்.

''நானே சிவன்'' என்பது ''கருத்தென்றால்'' எனையாண்ட அத்தன்'' எனும் தொடர் வரக் கூடாது. ''நான் சிவசமம்'' என்றாலும் அத்தொடர் வரக்கூடாது. ஆள்பவன் ஒருவன் இருந்தால் அடிமையாக ஒருவன் அங்கே இருந்தே ஆக வேண்டும். இதனால் சங்கர வேதாந்திகள் கூற்றும் சிவசம வாதிகள் கூற்றும் ஒருங்கே அடிபட்டுப் போகின்றன.

**சிவமாக்குதல் ஏன்?**

முத்திநிலையில் ஆன்மாவை இறைவன் ஏன் சிவமாக்குகின்றான் எனவினவலாம். சிலப்பதிகாரத்தில் வரும் மாலதி கதையைச் சிறிது விரித்துச் சொன்னோமானால் இக்கருத்துப் புரியும்.

மாலதி ஓர் அந்தணப் பெண். அவள் ஓர் அந்தணனை மணந்து கொண்டாள்; பிள்ளையில்லாமல் மிகவும் வருந்தினாள். அந்த அந்தணன் மறுதாரம் செய்து கொண்டான். அவளுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அம்மகவை மாலதி வேற்றுமை பாராட்டாமல் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தாள். சக்களத்தி மகன் என்ற உணர்வே அவளுக்கு இல்லை. ஒருநாள் அந்த அந்தணனும் இரண்டாவது மனைவியும் பிள்ளையை

மாலதியிடம் விட்டுவிட்டு வெளியூர் சென்ருர்கள் மாலதி குழந்தைக்குச் சங்கின் வாயிலாகப் பாலூட்டினுள்; குழந்தை பால்விக்கி இறந்து விட்டது. துடிதுடித்துப்போன மாலதி குழந்தையைத் தூக்கிக்கொண்டு பூம்புகாரில் உள்ள கோயில்கள் அனைத்திற்கும் சென்று அதனை உயிர்ப்பித்துத் தருமாறு வேண்டினுள். ஒரு தெய்வமும் செவிசாய்க்கவில்லை. இறுதியில் அவ்வூர் எல்லையிலிருந்த பாசண்டச்சாத்தன் கோயிலுக்குச் சென்று குழந்தையைக் கிடத்திவிட்டுப் பாடு கிடந்தாள். அப்பொழுது ஓர் இடாகினிப் பேய் தோன்றிக் குழந்தையை விழுங்கி விட்டது. "ஒ" என்று அலறிக் கொண்டு மாலதி உயிர் விடத் துணித்தாள். இதனைக் கண்ணுற்ற சாத்தான் "பழி வருமே", யென அஞ்சி ஒரு குழந்தை வடிவம் எடுத்துக்கொண்டு புதரில் கிடந்தான். குழந்தை உயிர் பெற்று விட்டதென மாலதி கருதி மகிழ்வோடு அதனை அணைத்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்தாள். வெளியூர் சென்றிருந்த பெற்ருேர்களும் திரும்பி வந்தனர். மூவர் அன்புக்கும் கட்டுப்பட்ட சாத்தன், கோயிலுக்குத் திரும்பிச் செல்ல முடியாமல் அங்கேயே வளர்ந்து பெரியவனுனுன். அவனுக்குத் "தேவந்தி" என்னும் பெண்ணை மணம் முடித்து வைத்தார்கள். அவள்தான் கண்ணகிக்குத் தோழியாக வருகிருள். மணம் முடித்து வைத்தபின்னர் பெரியதாயும் அந்தணனும் அவன் மறு தாரமும் காலமாயினர். தேவந்தியோடு வாழ்ந்து வந்த சாத்தான் இனிக் கோயிலுக்குத் திரும்பிச் செல்ல எண்ணினுன். அவளை அழைத்து அமைதியாகப் பின்வருமாறு சொன்னுன்:-

பெண்ணே! நான் மானுடன் அல்லன்; நான் இவ்வூரிலுள்ள பாசண்டச் சாத்தன் என்னும் தெய்வம் ஆவேன். பெற்ருேர்களின் அன்புக்குக் கட்டுப்பட்டுக் கோயிக்குத் திரும்பிப் போக முடியாமல் திணறினேன். உன்னேடும் சிலகாலம் வாழ்ந்து விட்டேன். இனிக் கோயிலுக்குத் திரும்பிச் செல்லலாம் என நினைக்கிறேன். நீ எப்பொழுது விரும்பினுலும் கோயிலுக்கு வந்து என்னை வேண்டினுல் நான் அசரீரியாக நின்று அருள் வழங்குவேன்; இவ்வாறு சாத்தன் சொன்னதும் தேவந்தி திகைத்தாள். "உன்னைத் தெய்வம் என்று எப்படி நம்புவது? நீ

தெய்வமாக இருந்தால் உன் வடிவத்தை எனக்குக் காட்டுக'' என வேண்டினாள். ''என் வடிவத்தை நான் காட்டினால் உன் மெல்லிய கண்கள் தாங்க மாட்டா,'' என்று சாத்தன் விடை கூறினான். ''நீ தெய்வமாக இருந்தால் என் கண்களைத் தாங்கும் படியாகச் செய்துவிட்டு நீ ஏன் உன் வடிவத்தைக் காட்டக் கூடாது'' எனத் தேவந்தி மடக்கிக் கேட்டாள். சாத்தன் மாட்டிக் கொண்டான். தன் அருளாற்றல் கொண்டு அவள் கண்களைத் தாங்கும்படியாக விதித்துத் தன் உருவை அவளுக்குக் காட்டினான். இதனை இளங்கோ,

''பூவத்த வுண்கண் பொறுக்கென்று மெவித்தன்
மூவா இளநலம் காட்டி எங்கோட்டத்து நீவா என
வுரைத்து நீங்குதலும்''

என அழகுறச் சொல்கிறார். தெய்வ ஒளியை நம் ஊனக் கண்கள் தாங்க முடியாது; பேரொளியைக் கண்டால் அவை அவிந்து போகும். ஊனக் கண்களால் காணவேண்டுமென்றால் இறைவன் அவற்றைத் தெய்வக் கண்களாக ஆக்க வேண்டும். அப்பொழுதுதான் அவை தாங்கும்.

இறைவன் வழங்குகின்ற சிவபோகத்தை ஆன்மாவின் அறிவிச்சை செயல்கள் அறிந்து விரும்பி அனுபவிக்கும் ஆற்றல் உடையன அல்ல அவை அனுபவவிக்க வேண்டுமென்றால் இறைவனின் அறிவு இச்சை செயல்களை அவற்றின் மாட்டுப் பதிவித்து அவனுக்க வேண்டும். அப்பொழுதுதான் அவை தாங்கும் சிவபோகத்தை நுகர்வதற்காக இறைவன் தன் எண்குணங்களை ஆன்மாவின் மாட்டுப் பதிவித்து அதனைச் சிவமாக்கி நுகர்விக்கின்றான்.

சிவபோகத்தை நுகர்வதற்காகவே ஆன்மா சிவமாகிறது. ஆண்டும் அஃது அடிமையாதலால் இறைவனைப் போல அதனால் ஐந்தொழிலாற்ற முடியாது. இவ்வுண்மையை நாம் அறிந்து கொண்டால் சிவமாக்குதல் என்னும் சொல்லால் வரும் குழப்பம் நீங்கிவிடும். சிவஞான சித்தியார்,

'உம்பர்பிரான் உற்பத்தியாதிகளுக்குரியன் **உயிர் சிவானுபவம் ஒன்றினுக்கே உரித்து**' என இதனைத் தெளிவுறுத்துவது காண்க.

**சித்தாந்தமும் வேதாந்தமும்:**

சிவமாக்குதல் என்றாலே அஃது ஆன்மாவின் தன்னியல்பன்று என்பதும், சிவனாலேயே அஃது அவ்வாறு ஆக்கப்படுகிறது என்பதும் தாமே பெறப்படும். அவ்வாறு ஆக்கப்பட்டதாலேயே "சிவமானவாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ" என அடிகள் கூறியருளியிருக்கிறார். சங்கரவேதாந்தம் பிருமம் ஒன்றே உள் பொருள் என்றும், உயிரும் உலகமும் மித்தை என்றும், முத்தி நிலையில் தன்னையே பிருமம் என ஆன்மா உணரு-மென்றும் சொல்கிறது. ஆகவே "சிவமாக்கப்படுதல்" என்பது அதன் கொள்கைக்கு மாறானதாகும். 'தத்துவ மசி' என்னும் மகாவாக்கியத்திற்கு 'நீ அதுவாகிறாய்' என்று வேதாந்தம் பொருள் சொல்வதில்லை. 'நீ அதுவாக இருக்கிறாய்' என்றே அதற்கு அது பொருள் சொல்லுகிறது. இதனால் மணிவாசகர் கொள்கைக்கும் வேதாந்தத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது புலனாகிறது. இருப்பினும் சிலர் திருவாசகப்பாடல்கள் இரண்டொன்றை வைத்து மணிவாசகர் வேதாந்தி எனச் சொல்ல முயல்கின்றனர். திருத்தெள்ளேணத்தில்,

"வான்கெட்டு மாருதமாய்ந் தழனீர் மண் கெடினும்
தான் கெட்டலின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்
கூன் கெட் டுயிர்கெட் டுணர்வுகெட் டென்னுள்ளமும் போய்
நான் கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ"

என ஒரு பாடல் வருகிறது. இதில் "உயிர் கெட்டு" என்றும் "நான் கெட்டு" என்றும் வருவதால் முத்தி நிலையில் ஆன்மா-வாகிய உயிர் இல்லை என்றும் பிரமம் ஒன்றே உளதென்றும் சிலர் பொருள் கூறுவர். உயிர் என்பது ஈண்டு ஆன்மா என்றால் ஆன்மாவே இல்லாமற் போயின பின் உள்ளமும் "நான்" என்னும் உணர்வும் தாமே இல்லாமல் போய்விடும். எனவே "உயிர் கெட்டு" என்றதன்பின் "என் உள்ளமும் போய் நான் கெட்டு" என்று சொல்லத் தேவையில்லை. மணிவாசகர் "உயிர்

கெட்ட பின்'' உள்ளமும் போய் நான் கெடும் என்று சொல்வதால் அவர் ஆண்டு உயிர் எனச் சொல்வது ஆன்மாவாக இருக்க முடியாது. அஃது ஆவி எனப்படும் மூச்சுக் காற்ருகிய பிராண வாயுவையே குறிக்கும். பிராணவாயு போயின பின் சூக்கும உடம்பில் மனம் புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய உள்ளம் இருக்கும். முத்தி நிலையில் அந்த உள்ளமும் அஃதாவது சூக்கும உடம்பும் போய்விடுகிறது என்று அடிகள் தெளிவுறுத்துகிருர். ''உள்ளமும் போயினபின்'' நான் என்னும் முனைப்புப் போய்விடுகிறது. அம்முனைப்புப் போவதற்காக ஆன்மாவே ஆண்டு இல்லை எனக்கொள்வது தவருகும். ஆன்ம அறிவு இறை வியாபகத்துக்குள் அடங்கித் தன்னை மறந்து நிற்பதையே ''நான் என்னும் முனைப்புக் கெடுதல்'' என அருளாளர்கள் கூறு கின்றனர். இந்தப்பாடல் வேதாந்தத்திற்கு ஆதரவான பாடலாகாது.

ஒரு பாடல் தெளிவின்றி இருந்தால் தெளிவாகவுள்ள மற்ருெரு பாடலை வைத்தேதான் அதற்குப் பொருள்கொள்ள வேண்டும்.

''யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான்
யாவர்க் குங்கீழா மடியேனை — யாவரும்
பெற்றறியா வின்பத்துள் வைத்தாய்க்கென்னெம்
பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை.

எனத் திருவெண்பாவில் மாணிக்கவாசகர் பாடுகிருர். ''யாவர்க்கும் கீழாம் அடியேனை யாவரும் பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்'' என அடிகள் சொல்வதால் முத்தி நிலையில் பேரின்பத்தை நுகருமாறு இறைவன் அவரை வைத்திருக்கிருன் என்பது புலனுகிறது. பேரின்பத்தை நுகரத் தன்னை வைத்திருப்பதாக அவர் சொல்வதால் அவர் ஆண்டு இருக்கிருர் என்பது தேற்றம். அவரே இல்லையென்ருல் யார் அங்கே இருந்து இன்பத்தை நுகர்வது என்னும் வினு எழும். தன்னை ஆண்டு வைத்தான் என அவர் தெளிவாகக் கூறுவதால் முத்தியில் பிர்மம் மட்டுமில்லாமல் ஆன்மாவும் இருக்கிறது என்பது

தெளிவாகிறது. ஆன்மா இல்லை என்னும் வேதாந்தக் கொள்கைக்கு இது முரணாகும்.

திருவண்டப் பகுதியில் "கன்றை கனிதேர்களிறெனக் கடை முறை என்னையுமிருப்பதாக்கினன்" என வரும் அடிகளை முன்னர் எடுத்துக்காட்டியுள்ளோம். இதற்கு வேறு பொருள் கூறுவாருமுளர். இறைவன் தன்னை இவ்வுலகில் இருப்பதாக்கி விட்டு அடியார்களை அழைத்துக்கொண்டுவிட்டான் என அடிகளார் வருந்திச் சொல்வதாக இவ்விடத்தில் சிலர் பொருள் எழுதியுள்ளனர். தன்னை உலகிடை வைத்துவிட்டுப் போனதற்காக அடிகள் வருந்திப் பல விடயங்களில் கூறியிருக்கிறார் என்பது உண்மையேயாகும். ஆனால் இவ்விடத்தில் "என்னையும் இருப்பதாக்கி" என்பதின் பின்னர் "எள்ளில் கருணைவான் தேன் கலக்க அருளொடு பராவமுதாக்கினன்" எனப் பெருமிதமாகக் கூறுவதால், அவர் முத்தி நிலையில் மத்தகஜம் போல இறுமாந்து வீற்றிருப்பதையே குறிக்கிறார் என அறிதல் வேண்டும்.

"இன்றெனக்கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிது மற்றின்மை
சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீயல்லை யன்றி யொன்றில்லை
யாருன்னை அறிய கிற்பாரே"

எனக் கோயில் திருப்பதிகத்தில் ஒரு பாடல் வருகிறது. இப்பாடலுக்கும் வேதாந்தப் பொருள்கொள்ளச் சிலர் முயல்கின்றனர்.

"சென்று சென்றணிவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றும்" என இப்பாடலில் வருவதால் "ஆன்மா கரைந்து கரைந்து இறைவனோடு கலந்து முத்தியில் மூன்றாய்ப் போய்விடுகிறது; ஆகவே ஆண்டு ஆன்மா இல்லை" என்பது வேதாந்திகள் இப்பாடலுக்குச் சொல்லும் பொருளாகும். அடிகளார் "நின்ற

நின்தன்மைநினைப்பற நினைந்தோன் நீயலாற் பிறிதுமற்றின்மை'' எனக் கூறுகிறார். நீயலாற்பிறிது மற்றின்மையை முத்தி நிலையில் நினைப்பற நினைந்தேன் என அவர் சொல்வதைச் சிந்திக்க வேண்டும். ''நினைந்தேன்'' என்பதால், முத்தி நிலையில் அவர் இருக்கிறார் என்பது புலனாகிறது. மாயா கருவிகளாகிய மனம் புத்தி சித்தம் அகங்காரம் ஆகிய அந்தக் கரணங்களைக்கொண்டு நினைக்காமல் இறைவன் திருவருளே கண்ணாகக் கொண்டு நினைப் பதைத்தான் ''நினைப்பற நினைந்தேன்'' எனச் சுவாமிகள் கூறு கிறார். துரியாதீத நிலையாகிய முத்தியில் அவர் நினைந்திருந்த படியே கீழிறங்கி வந்து துரிய நிலையிற் சொல்லுகிறார். அவர் பெற்ற அனுபவத்தையே இவ்வாறு சொல்வதால் முத்தி நிலையில் அவர் இருந்திருக்கிறார் என்பது தேற்றம்.

சென்று — மாயா கருவிகளாகிய முப்பத்தாறு கருவிகளி-னின்றும் நீங்கிச் சென்று, சென்று — இருவினைத் தொடக்கினின்-றும் நீங்கித்-தேய்ந்து ''எனது'' என்னும் செருக்குத் தேய்ந்து தேய்ந்து — ''நான்'' என்னும் முனைப்புத் தேய்ந்து, அணுவாய் — ஆன்மா தான் என்னும் ஒருமுதல் புலப்படாவகையில் நின்று, ஒன்றும் — இறைவனுடன் ஒன்றாய்க் கலந்து'' — அவனல்லாது பிறிதொன்றுமில்லை என்னும் உண்மையை, ''நினைப்பற நினைந் தேன்'' என்பது இப்பாடலின் பொருளாகும். ''ஒன்று நீயல்லை'' என்றால் எந்தப் பொருளாகவும் நீ இல்லை என்பது பொருள். இது அவர் வேறாகி நிற்கும் நிலையைக் குறிக்கும். ''அன்றி யொன்றில்லை'' என்றால் ''நீ இல்லாமல் ஒரு பொருளும் இல்லை என்பது பொருள். எல்லாப் பொருள்களுள்ளும் இறைவன் கலந்து நிற்பதையே சுவாமிகள் இவ்வாறு சொல்லுகிறார். இதனால் இறைவனல்லாத வேறு பொருட்களும் உண்டு என்பது பெறப்படும். இந்தப் பாட்டிற்கு வேதாந்தப் பொருள் கொண் டால் ''நினைந்தேன்'' என்னும் சொல் இடிக்கும்.

ஆன்மா இறைவனுடன் முத்தி நிலையில் இரண்டறக் கலக் கும் என்பதைச் சுவாமிகள் ஒப்புக்கொள்கிறார். அதனால்தான் ''ஒன்றும்'' என்னும் சொல்லை மேற்கண்ட பாடலில் பெய்-திருக்கிறார். ஆனாலும் அவர் ஆண்டு இருந்து பேரின்பத்தை

நுகர்கிறார் என்பதை "யாவரும் பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்" என முன்பு காட்டிய பாடலில் அவர் தெளிவாகச் சொல்லியிருப்பதிலிருந்து நாமறிந்துகொள்ளலாம்.

**பத்திநெறியும், சித்தாந்தமும் :**

இதுகாறும் கூறியவாற்றால் மணிவாசகர் சித்தாந்த சைவ கருத்துக்களையே தம் பாடல்களில் அறிவுறுத்தியிருக்கிறார் என்பது இனிது புலப்படும். பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய அவர் இவ்வாறு சித்தாந்தக் கருத்துக்களை இடை இடையே சொல்லியிருப்பது நமக்குப் பேருவகை அளிக்கிறது. பத்தி நெறியை ஐயப்பாடற்ற நிலையில் உறுதிப்படுத்தவே சுவாமிகள் இவ்வாறு சொல்லியிருக்கிறார். வாழ்க வாதவூரடிகள்! வாழ்க சைவ சித்தாந்தம் !!

# திருவாசகத்தில் இலக்கியச்சுவை

**திருமுறைகளில் இலக்கியம்:**

திருவாசகம் ஞானப்பனுவல் என்பதை யாவரும் அறிவர். ஆனால் மணிவாசகர் தம ஞான அனுபவங்களை இலக்கியச்சுவை குன்றாமல் வெளிப்படுத்துவதில் வல்லவராக விளங்குகிறார்.

மணிவாசகர் மட்டுமல்லாமல் நம் திருமுறை ஆசிரியர்கள் அனைவருமே இலக்கியப்பற்று மிக்கவராகக் காணப்படுகிறார்கள். உலகப்பற்றை ஒழித்த அவர்கள் இலக்கியப்பற்றை ஒழிக்க இயலாமலிருப்பது வியப்பாகத் தோன்றலாம். இறைவனை இலக்கியச்சுவை ததும்பத் துதிப்பது பெரும் பயன் விளைவிக்கும் என்று அவர்கள் கருதியிருக்கிறார்கள். திருமுறைகளில் தலைவி கூற்றாகவும், தோழி கூற்றாகவும், செவிலித்தாய் கூற்றாகவும் நம் அருளாசிரியர்கள் பாடியுள்ள பாடல்கள் பலவாகும்.

**சுந்தரர் பாட்டு:**

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூருக்குச் செல்லும்போது, காதல் புரி கைக்கிளையில் ஒரு திருப்பதிகம் பாடியதாகச் சேக்கிழார் சொல்லுகிறார். அத்திருப்பதிகத்தில் இறைவனைத் தலைவனாக வைத்து அவன்மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி அக்காதல் மிகுதியால் பறவைகளையும் வண்டுகளையும் நோக்கிக் கூறும் கூற்றாகச் சில வற்றை அருளிச் செய்திருக்கிறார்.

"பறக்குமெங் கிள்ளைகாள் பாடுமென் பூவைகாள்
அறக்கணென் னத்தகும் அடிகள்ஆ ரூரரை
மறக்கில் லாமையும் வளைகள்நில் லாமையும்
உறக்கமில் லாமையும் உணர்த்தவல் லீர்களே"

இங்கே, "பறக்குமெங் கிள்ளைகாள்" எனக்கிளிகளைப் பறக்கும் தன்மையுடையன எனச் சொல்லுகிறார். தன் காதல் நோயை விரைந்து சிவபெருமானிடத்தே சென்று சொல்ல

வேண்டும் என்பதற்காகப் "பறத்தலைக்" கிளிகட்கு அடையாக்கி யிருக்கிறார். ஓசை நயத்தோடு சொற்சுத்தமாகப் பாடுவதில் நாகணவாய்ப்புட்கள் கிளிகளைவிட வல்லமை வாய்ந்தவை; இனிமையாக இறைவனிடம் போய்ச் சொல்ல வேண்டும் என்பதற்காகப் "பாடும் எம் பூவைகாள்" எனக் கூறியுள்ளார். சிவபெருமானிடத்துக் கொண்ட நினைவால், "உறக்கமில்லாது துயர் அடைகின்றேன்" என்றும், "அதனால் உடல் மெலிய வளைகள் கழன்று போயின என்றும், இந்நிலையை என் தலைவனிடத்தே நீங்கள் போய்ச் சொல்ல வேண்டு" மென்றும் சுவாமிகள் வேண்டிக்கொள்கின்றார். இவ்வாறு இலக்கியக் கண்ணோட்டத்தில் நின்றே தனக்கு இறைவன் நினைவு மீதூர்ந் திருப்பதை வெளிப்படுத்துகிறார்.

**கிளிப்பாட்டு:**

மணிவாசகப்பெருமானும் இறைவனிடத்துத் தான்கொண்ட பக்தியை இலக்கியப் பாடல்களாகவே வடித்து வழங்கி யிருக்கிறார்.

"ஏரார் இளங்கிளியே எங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமம் தேர்ந்துரையாய் — ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான்
செப்புவபோல்
எம்பெருமான் தேவர்பிரான் என்று"

இப் பாடல் தலைவி கூற்றுகும். தலைவன் வாராமையால் துயருற்ற தலைவி அவன் பெயரைப் பிறர் சொல்லக் கேட்பினும் அவனைக் கூடி மகிழ்ந்தாற் போன்ற இன்பம் உண்டாகும் என்னும் கருத்தில் பிறர் யாராவது அவன் பெயரைச் சொல் வார்களா? என்று எதிர்பார்க்கிறாள். ஒருவரும் சொல்லாமையால் கிளியை நோக்கி, "நீயாவது அவன் நாமத்தைச்" சொல் என வேண்டிக் கொள்கிறாள். இப்பாடலில் "நிலவுலகிலுள்ள நாங்கள் ஆரூரன் என்றும் செம்பெருமான் என்றும் சொல்வோம்; வெண்மலரானாகிய பிரமனும், பாற்கடலில் பள்ளிகொண்டிருப் பவனாகிய திருமாலும், எம்பெருமான் தேவர்பிரான்" என்று

துதிப்பார்கள்; ''அந் நாமங்களையும் சேர்த்து நீ சொன்னால் எனக்கு நிறைவளிக்கும்'' என்று தலைவி தெரிவிக்கிறாள். இப் பாடலைப் பார்க்கும்போது காதல் நோக்கில் பாடிய ஒரு பாட லாகவே தோன்றும். ஆனால் இப்பாடலில் இரண்டு பேருண் மைகளை அடிகள் உணர்த்துகிறார். ஒன்று: இறைவன் நாமங்களைக் கேட்டால் அடியார்களுக்குப் பேரின்பம் உண்டாகும் என்பது. இஃது இறைவன் திருவருளைப் பெறுவதற்குச் சிறந்த சாதனம் நாமம்சொல்லுதல் என்னும் கருத்தை உணர்த்துகிறது. இரண்டு: பிரமாவும் திருமாலும் சிவனைத், ''தேவர் பிரான்'' என்று சொல்வதால் எல்லாத் தெய்வங்கட்கும் மேற்பட்ட முழுமுதற் பொருள் அவனேயாகும் என்பது. இது தேவர்களில் பெரியவர் களாகிய பிரமாவும் திருமாலும் அவனைத் துதிப்பதால் பல்வேறு தெய்வங்களையும் நாம் வணங்காமல் சிவபெருமான் ஒருவனையே வணங்குதல் வேண்டும் என்னும் கருத்தை உணர்த்துகிறது.

**தத்துவக்கருத்து:**

அகப்பொருள் போலத் தோன்றுகின்ற இப்பாடலில் சைவ சாதனையையும் சிவபிரான் ஒருவனே பதி என்ற உண்மையையும் மணிவாசகர் அறிவுறுத்துவது நினைந்து இன்புறத்தக்கது. மருந்தைக் கருப்புக்கட்டியில் வைத்துக் கொடுப்பது போலப் பிறவிநோய் தீர்க்கும் இவ்வுண்மைகளை அகப்பொருளில் வைத்து மணிவாசகர் நமக்குத் தருகிறார். இலக்கியத்திற்கிலக்கியமாகவும் ஞானத்திற்கு ஞானமாகவும் அவர் பாக்கள் விளங்குகின்றன.

**யானைப்பாட்டு:**

இலக்கியமாகிய நங்கைக்கு உவமைகள் சிறந்த அணிகலன் களாக விளங்குகின்றன. பாடுகின்ற புலவன் தன் உள்ளக் கருத்தை உவமை மூலம் படம் பிடித்துக் காட்டிவிடுகிறான். சிறந்த உவமைகள் ஆழ்ந்து சிந்திக்கச்சிந்திக்கப் புதுப்புதுப் பொருள்களை வழங்கிய வண்ணம் இருக்கும். திருச்சதகத்தில்

''இருகை யானையை யொத்திருந் தென்னுளக்
கருவை யான்கண்டி லேன் கண்ட தெய்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேன்கிற்ப னுண்ணவே''

— எனப்பாடுகிறார்

"தும்பிக்கை என்னும் ஒருகையையுடைய யானை உலகில் உண்டு; இருகை யானை இல்பொருள் உவமையாகும். ஒருகையுடைய யானை உண்பதே தொழிலாகக்கொண்டு தன் உடலைக் கொழுகொழு வெனப் பருக்க வைக்கிறது. இதுதவிர அதற்கு வேறொன்றும் தெரியாது. நான் அந்த யானையைப் போல உண்டு என் உடலைப் பருக்க வைத்திருக்கிறேன். என் உள்ளத்திலுள்ள உன்னை நான் காணாமல் வறிதே நாளைப் போக்குகின்றேன் கையுடைமையில் எனக்கும் அவ்யானைக்கும் வேறுபாடேதவிர செயலுடைமையில் நானும் அதனைப் போலவே வாழ்கின்றேன்'' என்பதுதான் மணிவாசகர் இவ்வுவமையால் நமக்கு உணர்த்தும் பொருளாகும். ஆனால் ஆழ்ந்து சிந்தித்தால் இவ்வுவமை இன்னும் சில அரிய கருத்துக்களை நமக்குத்தருகிறது. ஒருகையானை தன்கையால் தன் தலையிலேயே மண்ணைவாரிப் போட்டுக்கொள்ளும். இது போலவே உலக ஆசையாகிய மண்ணை இருகைகளையும் கொண்டு நாம் நம் தலையில் வாரிப் போட்டுக்கொள்கிறோம். நாமே நம்மைக் கெடுத்துக் கொள்கிறோம் என்பதற்கு இந்தயானை உவமை மிகவும் பொருத்தமாக அமைந்திருக்கிறது. ஒருகை யானை கீழே குனிந்து காலை நீட்டி அதன்மேல் தன் தலைவனை ஏறுமாறு செய்வித்து முதுகில் ஏற்றிக் கொள்ளும். இந்த நல்ல குணம் ஒருகை யானைக்கு உண்டு. ஆனால் இருகை யானைகளாகிய நாம் அவ்வாறு தலைவன் முன் பணிந்து அவனை நம்முள் புகுமாறு செய்விக்கத் தவறி விடுகிறோம். வேறு எந்தச் சாதனையையும் நம்மால் செய்ய முடியாவிட்டாலும் "நீயே கதி'' என இறைவன் முன் சரணம் அடைந்தால் போதும். இதனைக் கூடச் செய்யாமல் நாம் வாழ்நாளை வீணாக்கிக் கொண்டிருக்கிறோம் என வருந்தியே இருகையானை உவமையைத் தன்மீது ஏற்றிக்கொண்டு மணிவாசகர் பாடியருளியிருக்கிறார்.

**சதகப்பாட்டு:**

*திருச்சதகத்தில்,*

**"போற்றியென்போலும் பொய்யர் தம்மையாட்கொள்ளும் வள்ளல் போற்றி நின்பாதம் போற்றிநாதனே போற்றி போற்றி'' என அடிகள் அருளிச் செய்திருக்கிறார். உவமை**

உவமேயத்தைவிட எப்பொழுதும் சிறப்பாக இருக்கும் 'பவழம் போல் வாய்' எனச் சொன்னல் பவழத்திற்குள்ள அவ்வளவு சிவப்பு வாய்க்கு இராது. எனினும் ஒரளவு உவமேயத்தில் சிவப்பு இருப்பதை வைத்துப் பவழம் போன்ற வாய் என உவமிக்கின்ருேம்.

மேற்கண்ட பாடலில் பொய்யர்களுக்கு உவமையாகச் சுவாமிகள் தன்னையே எடுத்துக் காட்டுகிருர். உவமையாக எடுத்துக்காட்டப்படும் தான் உலகிலுள்ள ஏனைப் பொய்யர்கள் எல்லாரையும்விட மிகப்பெரிய பொய்யன் என்பதை முதற்கண் உணர்த்துகிருர். மிகப் பெரிய பொய்னுகத் தான் இருந்தும் தானுட்பட்ட பொய்யர்களே இறைவன் ஆட்கொண்டதற்கு காரணம் யாராக இருக்கும், எனச் சிந்திக்கிருர். அக்காரணத்தை "வள்ளல்" என்னும் சொல்லால் வெளிப்படுத்துகிருர். இறைவனைக் கருணை வள்ளல் என யாவரும் சொல்லுகிருேம். நல்லவர்களே அவன் ஆட்கொள்ளுவது கடமையாகுமேயன்றிக் கருணையாகாது. பெரும்பொய்யர்களே ஆட்கொண்டால்தான அவன் கருணை வள்ளல் என்பது மெய்ப்பிக்கப்படும். தன் கருணையை உலகினர்க்கு மெய்ப்பிப்பதற்காகவே தன் போன்ற பொய்யர்களே இறைவன் ஆட்கொண்டிருக்கின்ருன் எனச் சொல்கின்ருர். இப்படிச் சொன்னதும் அவருக்கு ஒரு பயம் உண்டாகி விடுகின்றது. உலகில் தன் கருணையை மெய்ப்பிப்பதற்கு ஆட்கொண்டு விட்டுப் பின்னர் இவன் உண்மையில் தகுதி உடையன் அல்லன் என நிராகரித்துவிட்டால் என் செய்வது? அவன் நிராகரிக்க நினைத்தாலும் அவன் திருவருட் சக்தி அவ்வாறு நிராகரிக்க விடாது என நம்புகிருர். திருவருள் சக்தியை அருளாளர்கள் "திருப்பாதம்" எனச் சொல்வது வழக்கம். அத் திருப்பாதம் தன்னை விட்டு நெகிழ்ந்து போய்விடக் கூடாது எனக் கருதியே,

"போற்றி நின்பாதம் போற்றி" —எனக் கூறுகிருர்.

பாதத்தை நடுவில் வைத்து முன்னும் பின்னும் போற்றி சொல்லி அது நழுவிப் போய் விடாதபடி பாதுகாக்கிருர். இஃது எவ்வளவு சுவையாக இருக்கிறது என்பதைக் கூற வேண்டுவதில்லை.

**நாடக அடியாரும் சுடர்மணியும்:**

திருச்சதகத்தில் வரும் "நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து நான் நடுவே" என்னும் பாடலில் வரும் நாடக அடியார் பற்றியும் நீத்தல் விண்ணப்பத்தில் வரும் "அடற்கரி போல் ஐம்புலன்களுக்கஞ்சி" என்னும் பாடலில் வரும் சுடர் மணி பற்றியும் பண்டிதமணி அவர்கள் மிகச் சிறந்த நயம் காட்டி எழுதியிருக்கிறார்கள்.

**விரைவதேல றறம் :**

"நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்"

என்னும் பாடலுக்கு அவர்கள் கூறும் நயம் வருமாறு :–

அடியார்கள் நடுவில் அவர்களைப்போல் நானும் ஓர் அடியானாக நடிக்கின்றேன். ஆனால் நடிக்கின்ற நான் முத்திப் பெரும் வீட்டில் நடுப்பங்கு பெற ஆசைப்பட்டு விரைகின்றேன்.

அடியார்கள் நடுவுள் நான் ஓர் அடியான் போல நடிப்பதில் ஒரு பயன் உண்டு. அவர்கள் என்னை நோக்கி ஆசீர்வதிப்பார்கள். போலி அடியாரா? மெய்யடியாரா? என்பதை ஆய்வது அவர்கள் வழக்கமில்லை. திருநீறிட்ட எல்லாரையும் அவர்கள் அடியாராகவே கொண்டு வழிபடுவார்கள். அந்த வழிபாட்டு வலிமையால் நானும் மெய்யடியாராக நாளடைவில் மாறி விடுவேன். அவர்கள் வழிபாட்டிற்கு இத்தகைய ஆற்றல் உண்டு. இமயம் சேர்ந்த காக்கை பொன்னிறம் அடைவது போல அடியாரோடு சேர்ந்த நானும் அடியாராகிவிடுவேன். ஆனால் அதற்கு நாள் பல ஆகும். மெல்ல மெல்லத்தான் நான் அடியாராக மாற இயலும். அதுவரைக்கும் பொறுத்து இராமல் விரைந்து வீடடைய முயல்வதுதான் என்மீதுள்ள தவறாகும். நடிப்பது தவறில்லை. விரைவதுதான் தவறு". இவ்வாறு பண்டிதமணி அவர்கள் விளக்கம் எழுதியுள்ளார்கள். அடியார்களின் அருளாசிக்கு எவ்வளவு வலிமையுண்டு என்பதற்கு ஒரு நிகழ்ச்சியை அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

**கத்தரிக்காய் கதை :**

வீரசைவ மடத்திற்குத் தலைவராக விளங்கிய வசவதேவர் பெரிய அருளாளர்: அவர் மடத்தில் ஒரு சமயம் வீரசைவ அடியார்கட்கு உணவளிக்கப்பட்டது. வீரசைவ சமயத்தைச் சார்ந்தோரே உணவுண்பதற்கு அனுமதிக்கப்பட்டனர் வீர சைவர்கள் என்போர் கழுத்தில் இலிங்கம் கட்டியிருப்பார்கள். அந்த அடையாளத்தைப் பார்த்தே வாயிற் காவலர்கள் உள்ளே செல்ல அனுமதி வழங்குவார்கள். வீரசைவ சமயத்தைச் சார்ந்த இருவர் உணவு உண்பதற்குச் செல்ல விரும்பினர். தெருவில் கிடந்த இரண்டு அழுகல் கத்தரிக்காய்களைத் துணியில் கட்டி இலிங்கம் போலக் கழுத்தில் அணிந்துகொண்டனர். மடத்திற்குள் சென்று பந்தியின் நடுவே அமர்ந்துவிட்டனர். அவர்களுக்கு வீரசைவ மடத்தின் சம்பிரதாயம் தெரியாது. வசவதேவர் தீபம் ஏந்திக்கொண்டு ஒவ்வோர் அடியார் முன்னும் வந்து நிற்பார். அப்பொழுது அடியார்கள் தம் கழுத்திலுள்ள இலிங்கத்தைத் திறந்து காட்ட வேண்டும். இந்நிகழ்ச்சியைக் கண்ணுற்று அவ் விருவரும் நடுநடுங்கிப் போயினர். கத்தரிக்காயைக் காட்டினுல் "அடி விழுமே" என அஞ்சினர். வசவதேவர் ஒவ்வோர் அடியார் முன்னும் தீபம் காட்டிக்கொண்டு வந்தார். இவர்க ளிடத்தே வரும்போது அவர் உள்ளத்தில் ஒரு தடுமாற்றம் ஏற்பட்டது. ஏதோ ஓர் அசம்பாவிதம் நடக்கப்போகிறது என அவர் உணர்ந்து கொண்டார். 'இறைவனே எல்லாம் நல்ல விதமாக நடக்கவேண்டும்' என மனதிற்குள் வேண்டிக்கொண்டு அப்போலி அடியார் முன் தீபத்தைக் காட்டினுர். இருவரும் மிகுந்த பதைப்போடு துணியை அவிழ்த்துக் காட்டினர். கத்தரிக் காய்கள் இரண்டும் சிவலிங்கங்களாக மாறிக் காட்சியளித்தன. உண்மை அடியார் வேண்டுகோட்கிணங்கி இறைவன போலி அடியார்களையும் உண்மை அடியாராக ஆக்கிவிட்டான. மெய்யடியார் திறத்திற்கு இஃதொரு சான்ருகும். மணிவாசகரும் மெய்யடியார் குழாத்துள் தான் ஒருபொய்யடி யானுக வீற்றிருந்தாலும் அவர்கள் அருளாசியால் நாளடைவில் தாம் ஒரு மெய்யடியானுக மாறும் வாய்ப்பு உண்டு என நம்புகிருர். பண்டிதமணி அவர்கள் இந்நிகழ்ச்சியை எடுத்துக்காட்டி உரை எழுதியிருப்பது மிகவும் இன்பம் பயக்கின்றது.

**சாகுந்தல நயம் ;**

" அடற்கரிபோல் ஐம்புலன்களுக் கஞ்சியழிந்த வென்னே
விடற்கரியாய் விட்டிடுதிகண்டாய் விழுத்தொண்டர்க்
கல்லால்
தொடற்கரியாய் சுடர்மாமணியே சுடுதீச்சுழலக்
கடற்கரிதாயெழு நஞ்சமுதாக்கும் கறைக்கண்டனே "

என நீத்தல்விண்ணப்பத்தில் ஒரு பாடல் வருகிறது. இதில் ' விழுத்தொண்டர்க்கல்லால் தொடற்கரியாய் சுடர்மாமணியே' என வரும் பகுதிக்குப் பண்டிதமணி அவர்கள் பின்வருமாறு நயம் எழுதியிருக்கிறார்கள்:- அடியார்களல்லாத ஏனையோர்க்கு இறைவன் தொடுதற்கரிய நெருப்பாக விளங்குவான். அடியார் களுக்கு அவன் தொடுதற்குரிய மாமணிச்சுடராக விளங்குவான். நெருப்புச் சுடர் தொடுதற்கரியது. மாமணியாகிய வயிரத்தின் சுடர் தொடுதற்குரியது — தண்மை மிக்கது.

துஷ்யந்தன் சகுந்தலையை முதன் முதல் கண்ணுவர் ஆச்சிர மத்தில் கண்டு காதல் கொள்ளுகின்றான். முனிவர் பிராமணர்· பிராமணப் பெண்ணாகிய சகுந்தலை அரசனாகிய தன்னால் தொடுதற்கரிய சுடர் என்று நினைக்கின்றான். பின்னர் தோழி மார்களை அவன் வினவியபோது சகுந்தலை முனிவரின் வளர்ப்புப் புதல்வியேயாவாள் என்றும், அவளும் அரச குலத்தைச் சார்ந்த வளே என்றும் அவன் தெரிந்துகொள்கின்றான். உடனே "அவள் தொடுதற்குரிய வைரமணிச் சுடரே " எனக் கூறுகிறான். இது போன்றுதான் மணிவாசகர் அடியாரல்லாதார்க்கு இறைவன் தொடுதற்கரிய சுடர் என்றும், அடியார்க்கு அவன் தொடுதற் குரிய சுடர் என்றும் கூறுகிறார். சாகுந்தலத்திலிருந்து பண்டித-மணி அவர்கள் இதனை எடுத்துக் காட்டியிருப்பது சுவைமிக்க தோர் இலக்கிய விருந்தாக அமைகிறது.

**மகளிர் விளையாட்டு :**

மணிவாசகர் மகளிர் விளையாட்டைக் கருவியாகக் கொண்டு இலக்கியச் சுவைமிக்க பலபாடல்களை அருளிச் செய்திருக்கிறார். திருவெம்பாவை, திருவம்மானை, திருத்தெள்ளேணம், திருப்-பொன்னூசல், திருத்தோணோக்கம் ஆகியவை மகளிர்

விளையாட்டை அடிப்படையாகக் கொண்டு இறைவன் புகழை இலக்கியச்சுவைபடச் சொல்லும் பகுதிகளாகும். திருவெம் பாவை மகளிர் விளையாட்டாகுமா? எனவினவலாம். ஆண்டாள் திருப்பாவை பாவை நேர்ன்பு பற்றிப் பேசுகிறது. “நெய் யுண்ணோம், பாலுண்ணோம்,” என நோன்பு விதிகளை எடுத்துக் கூறுகிறது. கண்ணனைக் கணவனாகப் பெறுதல் வேண்டும் என்னும் நோக்கில் மகளிர் நோன்பாற்றுவதாக அப்பாடல்கள் குறிக்கின்றன.

**நோன்பும் திருவெம்பாவையும்**

திருவெம்பாவையில் நோன்பு பற்றிய குறிப்புக்கள் ஏதுமில்லை. திருவெம்பாவைமகளிர் மழை பெய்தல் வேண்டும், அடியார்களைக் கணவன்மார்களாகப் பெறுதல் வேண்டும் என நீராடும் முகத்தான் வேண்டுகோள் விடுக்கின்றனரேயன்றி நோன்பு நோற்கவில்லை. அதிகாலையில் மகளிர்கள் எழுந்து எழாத மகளிர்களின் வீட்டுக்குச்சென்று அவர்களை எழுப்பிக் கூட்டிக்கொண்டு இறைவன் புகழைப்பாடிப் பொய்கைக்குச் சென்று நீராடுகின்றனர் என்ற அளவோடு திருவெம்பாவை முடிந்துவிடுகின்றது. நீராடும்போது ‘கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடே லோரெம்பாவாய்’ எனச் சொல்வதால், அவர்கள் நீரில்பாய்ந்து விளையாடுகின்றனர் என்பது புலனாகின்றது. இதனால் திருவெம் பாவை மகளிரின் நீர்விளையாட்டுப் பாட்டே அல்லாமல் நோன்புப்பாட்டன்று என்பது தெளிவு.

திருவெம்பாவையில் இறைவனைக் கணவனாகப் பெறுதல் என்னும் குறிக்கோள் இல்லை. அடியார்களைக் கணவராகப் பெறவேண்டும் என்னும் குறிக்கோள்தான் உண்டு. வைணவ சமயத்தில் முத்திநிலையிலும் அப்பிராகிருதத்திருமேனி ஆன்மாக் களுக்குண்டென்றும், அவை அவ்வுடம்புகொண்டு தம் நாயக னாகிய திருமாலை நுகரும் என்றும் கூறப்படுவதால் திருப்பாவை அக்கருத்தினை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

சைவசமயத்தில் முத்தி நிலையில் ஆன்மாக்களுக்கு எவ்வித உடம்புமில்லை என்றும் இறைவனுடன் இரண்டறக்கலந்து

பேரின்பத்தை நுகரும் என்றும் கூறப்படுவதால் திருவெம்பாவை அடியாரைக் கணவராகப்பெறுகின்ற நிலையினையே பேசுகின்றது.

மகளிரின் நீர்விளையாட்டுப் பாட்டை இம்மைப்பயன் வழங்குகின்ற பாடலாகவும், அதேசமயம் இறைவனைப்பற்றிய பல உண்மைகளை உணர்த்தும் பாடலாகவும் மணிவாசகர் அருளிச் செய்திருக்கிறார்.

**பாவையில் வரும் முதல் பாட்டு**

திருவெம்பாவையின் முதற்பாட்டு நீர்விளையாடுவதற்காக அதிகாலையில் விழித்தெழுந்த மகளிர் அவ்வாறு எழாத ஒரு தோழியின் வீட்டின்முன்நின்று பாடுவதாக அமைந்துள்ளது.

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின் மேனின்றும் புரண்டிங்கன்
ஏதேனுமாகாள் கிடந்தாள் என்னே என்னே
யீதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்"

அதிகாலையில் விழித்தெழுந்த மகளிர்சிலர் ஒருதோழியின் வீட்டின்முன் நிற்கின்றனர். அத்தோழி ஆழ்ந்த தூக்கத்தில் தன்னை மறந்து படுக்கையினின்று புரண்டு கீழே கிடக்கிறாள். அவளைப்பார்த்த மகளிருள் ஒருசிலர் 'நாங்கள் ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியைப் பாடிக்கொண்டு வருகிறோம். அப்பாடலைக்கேட்டும் நீ தூங்குகிறாய்; உன் செவி செவிடோ' எனவினவுகின்றனர்.

"வாள்தடங்கண்" என்றால் ஒளிபொருந்திய விசாலமான கண்கள் என்றுபொருள். காலைஒளியைக் காணவேண்டியகண் இருளில் மூழ்கிக்கிடக்கின்றதே என்னும்குறிப்பில் அப்பெண்ணின் கண்களை "வாள் தடங்கண்" என்று கூறுகின்றனர். பெண் களுக்குக் கண்கள் விசாலமாக அமைந்திருக்க வேண்டும் என்பதும்

இதனால் பெறப்படுகிறது. "தூங்கு கிறாயோ? என்று சொல்வது இங்கிதக் குறைவெனக்க கருதி "வளருதியோ" என்கின்றனர். வளர்தலில் ஒரு நுட்பம் உண்டு. நம் உடல் பகல் நேரத்தில் வளர்வதில்லை. தூங்கும் பொழுதுதான் அது வளரும். இதனால் தூக்கத்தைக் கண் வளர்தல் எனச் சொல்லும் மரபு உண்டு. "செவிடோ?" என்றால் கேட்பதற்கு நன்றாக இராது. எனவே 'வன்செவியோ நின்செவிதான்' என்கின்றனர். இறைவன் புகழைக் கேளாத செவிகள் வன் செவிகள் என்னும் பொருளையும் இது தருகிறது. "திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே" – என்னும் இளங்கோவடிகள் வாக்கு ஈண்டு நினைவு கூரத்தக்கது.

கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்

தாளை வணங்காத்தலை"

என்னும் குறளுரையில் பரிமேலழகர் 'தலைமேல் வைத்துக் கூறினாரேனும் இனம்பற்றி வாழ்த்தாத நாக்களும் பயனில' எனக் குறிப்பிட் டுள்ளார். இதுபோல இறைவன் புகழைக் கேளாத செவிகள் பயனில எனச் செவியின் மேல் வைத்து மணிவாசகர் கூறினாரேனும், இனம்பற்றி வணங்காத தலைகளும் கூப்பாத கரங்களும், பாடாத நாக்களும், வலம் வாராத பாதங்களும் பயனில என்பது போதரும்.

இதுவரை எழுப்பச்சென்ற மகளிருள் ஒரு சிலர் மேற்கண்ட வாறு சொல்லித் தம் பேச்சை நிறுத்தி விட்டனர். அப்பொழுது அவர்களுள் கூட இருந்த வேறு சில மகளிர் முன்பு பேசியவர் களைப் பார்த்து நம் தோழியை இவ்வாறு நீங்கள் ஏசக்கூடாது. அவள் உண்மையில் தூங்கவில்லை. நாம் வீதியில் இறைவன் புகழைப் பாடிக்கொண்டு வந்ததைக் கேட்டதும் மெய்மறந்து இறைவன் நினைவில் ஒன்றிப் படுக்கையினின்றும் புரண்டு கீழே வீழ்ந்து கிடக்கின்றாள். இறைவன் புகழ்ப் பாடல்கள் அவளை உருக்கி மெய்மறக்கச் செய்துவிட்டன. அதனால் அவள் எழுந்து வரமுடியாதவளாகச் செயலற்றுக் கிடக்கிறாள்' என்று கூறு கின்றனர். தூங்குகின்றதற்கு வேறு ஒரு காரணம் கற்பித்து இவ்வாறு அவர்கள் நகையாடிச் சொல்வது உளளே படுத்திருப் பவளுக்கு நாணத்தை விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை. அவள்

உடனே எழுந்து தம்முடன் கலந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கில்தான் இவ்வாறு புகழ்வது போலப் பழித்துப் பேசுகின்றனர். இருவகை உரையாடல்களை ஒரே பாடலில் அமைத்து மணிவாசகர் அருளிச் செய்திருப்பது இலக்கியச் சுவையோடு நகைச்சுவையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

இப்பாடலுக்குஇவ்வாறு உரை கூறுது, "வேறு ஒருத்தி இறைவன் புகழைக்கேட்டு மெய்மறந்து கிடக்கின்றதாகவும் அவ்வாறிருக்க "நீ தூங்கு கின்றாயே?" என எழுப்ப வந்த பெண்கள் சொல்வதாகப் பலர் உரைகூறியுள்ளனர். முதற் பாட்டு முதன் முதல் எழுப்பப்படுகிற பெண்ணைப் பற்றியதாகவே இருக்கவேண்டும். மேலும் வேறொருத்தி மெய்மறந்து கிடப்பதை இங்கே சொன்னால் நீயும் அவ்வாறு "மெய் மறந்து கிட", என்னும் பொருளை அறிவுறுத்துமேயன்றி "எழுந்து வா"? என்னும் பொருளை அறிவுறுத்தாது. சினமும் நாணமும் உண்டாகும் வண்ணம் நகையாடிப் பேசினால்தான் அவள் எழுந்து வருவாள். இக்குறிப்பில் தான் இப்பாடல் அமைந்திருக்கிறது.

**சத்தியைவியந்தது:**

பழைய ஏட்டுப் பிரதிகளில் திருவெம்பாவைக்குச் சக்தியை வியந்தது எனத் தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு உரையாசிரியர்களிற் சிலர் ஒரு சக்தி மற்றொரு சக்தியை எழுப்புவதாக இப்பாடல்கள் அமைந்துள்ளன என்று கூறுகின்றனர். அவ்வாறிருந்தால் அச் சக்திகளின் இலக்கணங்களும் செயற்பாடுகளும் இப்பாடல்களில் குறிப்பு வகையாகப் பேசப்பட்டிருக்கவேண்டும். மேலும் சக்திகள் அனைவரும் எழுந்த பின்னர் என்ன செய்கின்றனர் என்பதையும் பிற்பகுதியில் பாடல்கள் பேசவேண்டும். இல்லாத தத்துவப் பொருள்களை வலிந்தும் நலிந்தும் புகுத்திப் பார்ப்பது சிறப்பாகாது. இம்மைப்பயனாகிய மழைபொழிதலும் நல்ல கணவரைப் பெறுதலும் இப்பாடற்கண் பேசப் பெறுவதால், மகளிரின் வேண்டுகோள் பாட்டாகவே இவற்றைக்கொண்டு பொருள் காண்பதுதான் பொருத்தமாகும்.

**அம்மைக்குரிய தனிப்பாடல்கள்:**

"சக்தியை வியந்தது" என்பதற்கு உண்மையான பொருளை உரையாசிரியர்கள் காணத்தவறிவிட்டனர். பன்னிரு திருமுறைகளில் உள்ள பாடல்களை நோக்கினால் ஒரு பாடல் கூட அம்மையைத் தனித்துப் பாடும் நிலையில் அமையவில்லை.

"உண்ணாமுலையாள் உடனாகிய அண்ணாமலையான்"

என இறைவனோடு சாத்தியே அடியார்கள் அம்மையை வாழ்த்தியிருக்கின்றனர். திருவெம்பாவையில் மட்டும் ஒரு பாடலில்,

"பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத்திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்"

என அம்மையைத் தனித்து வாழ்த்தும் திறம் பேசப்பட்டுள்ளது. இதனாலேயே "சத்தியை" வியந்தது எனப்பழைய ஆசிரியர்கள் தலைப்புக் கொடுத்திருக்கின்றனர். மணிவாசகர் இவ்வாறு அம்மையைத் தனித்துப்பாட அனுமதி கொடுத்த பின்னர்தான் அவளுக்கே உரிய வாழ்த்துப் பாடல்கள் தமிழில் தோன்றியிருக்கின்றன. இன்றும்கூடத் தமிழில் விநாயகர், முருகன், சிவன் ஆகியோர்மீது தனித்துப் பாடப்பட்டிருக்கும் அளவு அம்மைக்குப் பாடல்கள் இல்லை என்பது நினைக்கத்தக்கது. இக்கருத்துக்களை மகாவித்துவான் அருணைவடிவேல் முதலியாரவர்கள் தாம் எழுதியுள்ள திருவாசகக் குறிப்புரையில் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். திருவெம்பாவையில் எழுப்பச்சென்ற பெண்களும் எழுப்பப்படும் பெண்ணும் மாறிமாறி உரையாடுவது இனிய இலக்கிய இன்பத்தை நமக்குத்தருகிறது.

**பாவையில் வரும் மற்றொருபாட்டு:**

இன்னொரு பாடலைப் பார்ப்போம்

"முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
அத்தனானந்த னமுதனென்றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டால்
பொல்லாதோ

எத்தோ நின்னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்தமழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்!''

எழுப்பவந்த பெண்கள் உள்ளே படுத்திருக்கின்ற பெண்ணைப் பார்த்து "முத்துப்போன்ற வெள்ளிய பல் வரிசையை உடைய பெண்ணே ! நீ எங்களுக்கு முன்னே எழுந்து வந்து அத்தன் என்றும் அமுதன் என்றும் பெருமானை வாயினிக்கப் பேசுவாய். இப்பொழுது தூங்குகிறாய். நீ எழுந்து வந்து உன் வாசற் கதவைத் திறப்பாயாக'', என்று சொல்கிறார்கள். உள்ளே படுத்திருந்த பெண் விழித்தெழுந்து சிறிது நாணத்தோடு அவர்களைப் பார்த்து, "நான் முன்னே எழுந்து வந்திருக்க வேண்டியவள்தான். என்னை அறியாமலே தூங்கிவிட்டேன், நீங்களெல்லாம் மிகுந்த பக்தி உடையவர்கள். பெருமானுக்கு நீண்ட காலமாகத் தொண்டர்களாக விளங்குகிறீர்கள். நானோ புதியவள். புதியவளாகிய என் பிழையைப் பொறுத்து ஆட் கொண்டால் அதனால் எந்தப் பொல்லாங்கும் வரப் போவ தில்லை'', என்று விடையிறுக்கிறாள். இகழ்ச்சிக் குறிப்பாக நகை யாடியே இவ்வாறு சொல்கிறாள். இதனைச் செவியுற்ற வெளியில் நின்ற பெண்கள் இவள் சினத்தோடு பேசுகிறாள் என நினைத்து "உன் அன்பு எவ்வளவு பெரியது; எல்லாம் நாங்களறிவோம்'' எனக் கூறுகிறார்கள். ஆனால் இந்த விடையையும் உள்ளே இருந்த பெண் இகழ்ச்சிக் குறிப்பாகவே எடுத்துக்கொள்கிறாள். "நீங்கள் சொல்கிறபடி நான் செவ்வையான பக்தி உள்ளம் படைத்தவ ளாக இருந்திருந்தால் முன்னரே எழுந்து வந்து எம் பெருமானைப் பாடியிருக்கமாட்டேனா?'' என வினவுகிறாள். அவள் எழுப்பிய அவ்வினா அவள் இன்னும் கோபம் தணியாமலே பேசுகிறாள் என்பதை எழுப்ப வந்தவர்களுக்கு உணர்ந்திற்று. அவர்கள் சலித்துப்போய், "இவ்வளவும் எங்களுக்கு வேண்டியதுதான்; நாங்கள் உன்னை இகழ்ந்துவிட்டோம் என்ற கருத்தில் பேசுகிறாய். நீ கோபித்துக்கொள்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்'' என்று சொல்கிறார்கள். உள்ளே படுத்திருந்தவள் புன்னகையோடு எழுந்து வந்து இவர்களோடு கலந்துகொள் கிறாள். மணிவாசகர் ஒரே பாடலில் இவ்வாறு உரையாடலை அமைத்திருப்பது நகைச் சுவையாகவும் இருக்கிறது; இலக்கிய

மாகவும் இருக்கிறது. அதிகாலையில் எழுந்து வந்து இறைவனைப் பாடவேண்டும் என்றும் அறிவுரையாகவும் அமைந்துள்ளது. திருவெம்பாவைப் பாடல்களுக்கு உரை எழுதியவர்கள் இக் கண்ணோட்டத்தோடு எழுதியிருந்தால் மிகவும் சுவையாக இருந்திருக்கும். திருப்பாவை உரையாசிரியர்கள் பாடல்களை இயல்பான கண்ணோட்டத்தோடு நோக்கி உரை எழுதியிருப்பதால் அவ்வுரைகள் நம் உள்ளத்தைக் கவர்கின்றன. சிலவிடங்களில் அவர்களும் தத்துவப் பொருள்களை வலிந்து சொல்லும் போது சுவை குன்றிப்போகிறது. திருவெம்பாவைக்கு இயல்பான கண்ணோட்டத்திலேயே நாம் உரை காண வேண்டும்.

மகளிர் விளையாட்டுக்கள் பலவற்றைக் கருவியாகக்கொண்டு மணிவாசகர் பாடியருளிய பகுதிகள் திருவாசகத்தில் நிறைய உள்ளன.

**அம்மானைப் பாட்டு :**

திருவம்மானையில் அவர் பாடியுள்ள ஒரு பாடல் இறைவனின் பெருங் கருணைத் திறத்தை விளக்குவதாக அமைந்துள்ளது.

“ கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப்பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத்தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லைநகர்புக்குச் சிற்றம்பலம் மன்னும்
ஒல்லைவிடையானைப் பாடுதுங் காணம்மானாய் ”

முதலில் மணிவாசகர் தம் மனமாகிய கல்லை இறைவன் பிசைந்து பக்தியாகிய சுவையைத் தருகின்ற பழமாக ஆக்கியிருக்கிறான் என்று சொல்லுகிறார். இது வேறொரு நிகழ்ச்சியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகுந்த சுவையைத் தருகின்றது. இறைவன் திரிபுர சங்காரத்திற்காகப் புறப்படும்போது மேருமலையாகிய கல்லை வில்லாக்கியிருக்கிறான். கல்லை வில்லாக்கிய அவன் அவ் வில்லைப் பயன்படுத்தாமல் சிரித்தே திரிபுரத்தை எரித்து விட்டான். சிரித்தே எரிக்கும் ஆற்றலுள்ள இறைவன் கல்லை வில்லாக்கியிருக்க வேண்டிய அவசியமில்லை. இறைவன் செயல் வீணாக நடைபெறாது. அப்படியானால் ஏன் கல்லை வில்லாக்கினான்?

மணிவாசகனுகிய ஒருவன் பின்னே பிறக்கப் போகிருன்; அவன் மனம் மேருமலையைப்போலக் கல்லாக இருக்கும்; அதனைக் கனி யாக்க வேண்டும்; அதற்காக மேருமலையாகிய கல்லை வில்லாக்கிப் பழகவேண்டும் என நினைத்திருக்கிருன். தன் மனத்தைக் கனி யாக்குவதற்காக நடத்தப்பட்ட ஒத்திகையே திரிபுரசங்காரம் என நினைப்பதுபோல, மணிவாசகரின் இவ்வாக்கு அமைந்திருக் கிறது. இது தொனிப் பொருளாகும். கனி எக்காலத்திலும் கிடைக்காது. குறிப்பிட்ட பருவங்களில்தான் அது கிடைக்கும். மேலும் நாளடைவில் அழுகிக் கெட்டுப்போகும், "என் மனத்தைக் கனியாக்கிய இறைவன் அதனை அப்படியே விட்டு விட்டால் அழுகிக் கெட்டுப்போய்விடுமன்ருே? அதற்காக அவன் வேருெரு செயலையும் செய்திருக்கிருன். பழம் கெட்டுப்போகாமல் இருக்கவேண்டுமானுல் அதைத் தேனில் ஊறப்போட்டு வைத்து விட்டால் ஊறுகாய்போல அஃது எப்பொழுதும் அப்படியே இருக்கும். இதுபோல, "என் மனமாகிய கனியை உன் கருணை வெள்ளமாகிய தேனில் இட்டுக் கெடாமல் வைத்திருக்கிருய்" என மணிவாசகர் பேசுகிருர். தேனில் ஊறப்போட்டுப் பழங்-களைத் தகர டப்பாக்களில் அடைத்து வைக்கின்ற ஒரு வணிக முறையை மனத்தில் கொண்டு இறைவனும் என் மனமாகிய கனியைக் கருணையாகிய தேனில் ஊறப்போட்டு வைத்திருக்கிருன் எனச் சொல்வது மிக நயமாக அமைந்திருக்கிறது.

**பத்தி இலக்கியம் :**

மணிவாசகர் அருளிய திருவாசகத்தில் இலக்கியச் சுவை சொல்தோறும் மிளிர்வதைக் காணலாம். தேனுய் அமுதமுமாய் இறைவன் இருக்கிருன் எனப் பாடுவதே இலக்கியச் சுவைதான். இலக்கியச் சுவை இன்றிப் பக்திச் சுவையை உணர்ச்சி பூர்வமாக வெளிப்படுத்த முடியாது. சுருங்கச் சொல்லப்போனுல் இலக்கி-யத்தையே மணிவாசகர் பக்தியாக்கி வெளிப்படுத்தியிருக்கிருர். ஒவ்வொரு பாடலையும் எடுத்துக்கொண்டு இலக்கிய நயங்கள் பலவற்றை வெளிப்படுத்தலாம். நாம் இப்பேச்சில் சில பாடல் களைமட்டுமே எடுத்துக்கொண்டு மணிவாசகர் வாக்கில் எவ்வாறு இல்க்கியம் இடம்பெற்றுள்ளது என்பதை விளக்கியுள்ளோம். இனி அடுத்தபேச்சில் பக்திச்சுவைபற்றி ஆராய்வோம். இதுகாறும் என் பேச்சைப் பொறுமையோடு செவி மடுத்த உங்கட்கு என் நன்றி.

# திருவாசகத்தில் பத்திச்சுவை

**பத்தி நெறி**

மணிவாசகப்பெருமானுக்கு இறைவன் அறிவுறுத்திய நெறி பத்திநெறிதான் என்பதை அவரே மிகத்தெளிவாக

"முத்திநெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளிய வாறுார் பெறுவாரச்சோவே"

எனக் கூறியருளியிருக்கிறார். இப் பாடலில் இறைவன் தனக்குப் 'பத்திநெறியறிவித்தான்' என்றும், அப்பத்தி நெறியால் ஆணவம், கன்மம், மாயை என்னும் சித்தமலங்களை அறுவித்தா னென்றும் சுவாமிகள் சொல்வதால், சைவசித்தாந்தம் சொல்லும் நெறி 'பத்திநெறியே' என்பது பெறப்படும்.

**பத்தியும் ஞானமும்:**

சைவசித்தாந்தத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனக் கூறப்படும் நான்கு சாதனங்களுள் சரியை கிரியை யோகம் ஆகிய மூன்றும் பத்திநெறியே என்றும், ஆனால் இறுதியில் கூறப்படும் ஞானம் அறிவுநெறியென்றும், ஞானத்தால்தான் வீடு எனச் சிவஞானசித்தியார் சொல்வதால் அன்பு நெறியால் அருளைப்பெற்றாலும் முடிவில் அறிவு நெறியாகிய ஞானத்தால் தான் வீடு பெறலாமென்றும் சிலர் சொல்லுவர். இதனாலேயே அன்பு நெறி, அறிவு நெறியென இரு நெறியாகப் பிரித்து அவர்கள் பேசுவதைக் காண்கிறோம். ஆழ்ந்து நோக்கினால் சைவசித்தாந்தத்தில் அன்பு நெறியே அறிவு நெறியென்றும் அன்புநெறியால்தான் இறைவனை அடைதல் வேண்டும் என்றும் கூறப்பட்டிருப்பது புலனாகும்.

**சிவஞானசித்தியாரும் ஞானமும்:**

சிவஞான சித்தியாரில் 'ஞானத்தால் வீடு' எனக் கூறும் பாடலில் ஞானம் என்பது திருவடி ஞானமே-அதாவது பதி

ஞானமே எனக் கூறப்பட்டுள்ளது. பதிஞானம் என்பது இறைவன் ஞானமேயன்றி, ஆன்மாக்களாகிய நம் ஞானமன்று இதனால் நம்முடைய ஞானத்தால்-அதாவது பசு ஞானத்தால் இறைவனை அடையமுடியாதென்பதும் தெளிவாகிறது. இறைவன் ஞானத்தை ஆன்மா துணையாகக்கொண்டு அவனை அறியும்போது அவன் ஆன்மாவிற்குச் செய்து வருகின்ற எல்லையற்ற உதவிகள் இனிது புலனாகும். அவ்வுதவிகளை நினைக்குந்தோறும் நினைக்குந் தோறும் ஆன்மாவின் இச்சை அவனிடத்தே மீதூரும் மீதூரும் அந்நிலையில் ஆன்மா தன்னை மறந்து இறைவனோடு ஒன்றிப் பேரின்பத்தை நுகரும். ஆன்மாவின் இச்சை மீதூர்தல்' என்பது அதன் அன்புப் பெருக்கையே குறித்து நிற்கிறது. அன்புப்பெருகி லன்றி ஆன்மா அவனோடு ஒன்றி முத்திப் பேரின்பத்தைப் பெற இயலாது. ஆகவே அன்பால்தான் முத்தி சித்திக்கும். ஆன்ம அறிவு அதற்குத் துணை நிற்கும். ஞானம் என்பது பதி ஞானத்தையே குறிக்குமாதலால் ஆன்மாவுக்கு உள்ள ஒரேவழி அந்த ஞானம் துணையாக இறைவனிடத்தே அன்பு செலுத்து தலேயாகும். அன்பால்தான் முத்தி சித்தியாகும் என்பதைச் சிவஞானபோதம் பதினோராம் சூத்திரத்தில்

"அயரா அன்பின் அரன்கழல் செலுமே"

எனக் கூறுவதன் மூலம் மெய்கண்டார் இனிது புலப்படுத்துகிறார். இதற்கு அவர்எழுதிய அதிகரணத்தில், 'பத்தியினால் மறவாதேத்த அவரது சிபோதத்தை அணையும்' எனக் கூறியிருக்கிறார். அறிவுக்குப் பயன் மறவாமையேயாதலால் இறைவனை மறவாது பத்தியினால் ஓத்த அவனது திருவடிப் பேறு கிட்டும் என மெய் கண்டாரே தெளிவாகச் சொன்ன பிற்பாடு அறிவு நெறி எனத் தனியாகப் பிரித்துப் பேசுவது சைவசித்தாந்தத்திற்குப் பொருந் தாதென்பதைக் கூறவேண்டுவதில்லை.

### திருவாசகமும் மெய்கண்டாரும்

மெய்கண்டார் "அயரா அன்பின் அரன் கழல் செலுமே" என்னும் கருத்தைத் திருவாசகத்திலிருந்துதான் எடுத்திருக்கிறார். திருவாசகம் சென்னிப்பதிகத்தில் மணிவாசகர்

'யாவராயினும் அன்பரன்றி யறியொணமலர்ச் சோதியான்''
எனக் கூறியருளியிருக்கிறார். யாரா இருந்தாலும்-அதாவது ஒருவர் யோகியாக இருந்தாலும் அல்லது ஞான விசாரணை செய்யும் ஞானியாக இருந்தாலும் இறைவனுக்கு அன்பரானு லன்றி அவனை அறிய முடியாதென்பது மணிவாசகர் கருத்தாகும். பதி, பசு, பாசம் பற்றிய ஆய்வும் முப்பத்தாறு தத்துவங்கள் பற்றிய விசாரணையும் அறிவுநெறியைச் சார்த்தவை எனச் சிலர் கருதுகின்றனர். இவற்றின் சிறப்பியல்புகள் பதிஞானத்தால் அன்றி அறிய வாராதாதலாலும் பொதுவியல்புகள் நிலையா மையை உணர்த்தி நிலைபேறாக உள்ள இறைவனிடத்தே பத்தியை மிகுவிப்பதாலும் பதிஞானம் உலகப்பற்றை நீக்கி அன்பால் இறைவனை சிவகப் பற்றும் நிலையில் தோன்றுவதாலும் பத்தி நெறியின் ஒருவருகாது இவ்வறிவு விசாரணை சைவசித்தாந்-தத்துள் கொள்ளப்படுகிறதன அறிதல் வேண்டும்.

**ஞானம் என்பது அன்பே:**

பத்தியின் துவக்கநிலை சரியை கிரியை யோகமென்றும், முடிந்தநிலை ஞானமென்றும் கொள்ளப்படும். முழுமையான பத்தியையே சைவம் ஞானமெனச் சொல்கிறதென்பதைக் சேக்கிழார் பெருமான்,

''ஞானம் ஈசன் பாலன்பே'' — எனக்கூறுவதன் மூலம் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

**சுந்தரர் வாக்கு:**

பத்தியின் துவக்க நிலையில் இறைவனைக் காயத்தால் வணங் கியும், வாயினால் ஏத்தியும், மனத்தால் நினைந்தும் ஆன்மா வழிபடும். சுந்தரமூர்த்தி சுவாமிகள்

''பன்னுள் வாயினாற்கூறி மனத்தினுல் நினைந்து
பாக்கிலாச் சிரமத்தடிகளை அடிதொழ''

என இம்மூவகை வழிபாட்டையும் குறிப்பிடுகிறார்.

**சதுரால் முடியாது:**

மணிவாசகர் நும்மூவகை வழிபாட்டையும் தேனினுமினிய தீந்தமிழில் பின்வருமாறு பேசுகிறார்.

"ஆமாறுன் றிருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்
பூமாலே புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் றிருக்கோயி றூகேன் மெழுகேன்
கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே"

"ஆமாறுன் திருவடிக்கே" என்பதை உன் திருவடிக்கே ஆகுமாறு என மாற்ற வேண்டும். "என் மனம் உன் திருவடிக்கே ஆகுமாறு குழையேன் என்கிறது" என்பதே இதன் பொருள். மனத்தால் அகம் குழைவதென்பது அவனை நினைந்து நிற்பதாகும். "குழைதல்" என்றால் நெகிழ்தல் என்று பொருள். மனம் குழைந்ததும் அன்பு பெருக்கெடுத்தோடும். இதனையே "அன்புருகேன்" என அவர் சொல்கிறார். "உருகுதல்" என்றால் பெருக்கெடுத்தோடுதல் என்பது பொருள். பூமாலை புனைதல், திருக்கோயிலில் மெழுகுதல், கூத்தாடுதல் முதலியவை காயத்தின் தொழிலாகும். ஏத்தலும் புகழ்தலும் வாக்கின் தொழிலாகும். மனம் வாக்குக் காயம் மூன்றும் அவனிடத்தே ஈடுபடுதல் வேண்டும் என்பதையே எதிர்மறைவகையால் தன்மேலேற்றி அடிகள் கூறியிருக்கிறார். "இவ்வாறு அன்பு நெறியில் நின்று உருகாமல் என் அறிவால் உன்னை அடைந்து விடலாம் என நான் முயல்கின்றேன். அம்முயற்சியி நான் விரைந்து சாவதற்குரியதாகின்றதேயன்றி உன்னை அடைதற்குரியதாக இல்லை" என ஈற்றடியில் கூறுகிறார். "சதுரால்" என்றால் அறிவால் என்று பொருள். "சார்வானே", என்றால், "எல்லாப் பொருட்கும் சார்பாய் உள்ளவனே" என்று பொருள். முன் அடிகளில் அன்பு நிலையைக் குறிப்பிட்டுப் பின்னடியில் அறிவு நிலையால் சாவதற்கே விரைகிறேன் என அவர் சொல்வதன் வாயிலாக நம் அறிவால் அவனை அடைய முடியாதென்பதை உணர்த்துகிறார். அன்பைச் சொல்லி அதற்குப்பின் சதுரால் எனச் சொல்வதால் அன்பு நெறிக்கும் அறிவு நெறிக்கும் உள்ள வேறுபாட்டைப் புலப்படுத்தவே இவ்வாறு பேசுகிறார் என்பது தெளிவு "சதுர்" என்பதற்கு உலக ஆரவாரம் எனப்பொருள் கூறுவாருமுண்டு, ஆனால் "அன்புருகேன்" எனச் சொல்லிச் "சதுரால் சாமாறு விரைகின்றேன்" எனக் கூறுவதால், "அன்பால்தான் உய்யலாம், அறிவால் முடியாது." எனப் பொருள்கொள்வதே சிறப்பாகும்.

"சதுர்" என்றால் சாமார்த்தியம் எனவும் ஒரு பொருள் உண்டு. அறிவு நெறி சாமர்த்திய நெறியேயன்றி அன்பு நெறியைப் போலப் பயன் தரும் நெறியன்று. சங்கரர் வேதாந்தத்தில் அறிவுநெறி மிகுதியாக எடுத்துப் பேசப்பட்டுள்ளது. அதில் கூறப்படும் விவாதம் சாமர்த்திய வாதமாக இருக்கின்றதேயன்றி உண்மை விவாதமாக இல்லை. இதனை உளம் கொண்டே "சதுரால்" என்னும் மணிவாசகர் வாக்கை நாம் சிந்திக்க வேண்டும். "அறிவு நெறி" செருக்கை விளைவிக்குமாதலால் அடிகள் அதனை உயர் நெறியாகக்கொள்ளவில்லை.

**மனம், மொழி, மெய் பற்றி மணிவாசகர்:**

மனம் மொழி மெய்களால் பக்தியை வெளிப்படுத்துகின்ற சாதனத்தை இன்னொரு பாடலில் மணிவாசகர் மிக அருமையாகச் சொல்கிறார்

"சிந்தனைநின் றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே"

"சிந்தனை நின்றனக்காக்கி "என்றால்," மனத்தை நின் திருவுருவம் முழுவதையும் நினைப்பதற்காக்கி" என்பது பொருள். இறைவன் வடிவில் மனம் அழுந்தி நின்றால் அஃது அவ்வடிவமாகவே ஆகிவிடும்; இதனைத் தியானசித்தி என்று கூறுவர். கண்களை இறைவனின் திருவடித் தாமரை மலர்களுக்கேயாக்குவதென்பது, புறத்தே உருவத் திருமேனிக்கண் உள்ள திருவடிகளையே பார்த்து நெகிழ வேண்டும் என்பதைக் குறிக்கும். 'வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி' என்றால், வழி பாட்டையும் "அத்திருவடித்தாமரை மலர்களுக்கே ஆக்கி" என்பது பொருள். இது காயத்தின் தொழிலாகும். மனத்தின் தொழிலை முதலிற் சொன்னவர் அடுத்துக் காயத்தின் தொழிலைச் சொல்கிறார்

மனம் காயம் இவ்விரண்டிற்கும் இடைப்பட்டு நிற்பது வாக்காகும். வாக்கு இவ்விரண்டின்பக்கமும் சாரும். ஒரு சொல்லைச் சொல்லும்போது அதனை மனத்தால் நினைந்துதான் சொல்ல வேண்டும். வாக்கு மனத்தின் சார்பால்தான் வெளிப்படும். ஆனல் சொல்லை வாயால்தான் சொல்ல வேண்டும். இது வாக்கு, காயத்தைச் சார்ந்தது என்பதை உணர்த்தும். மனவழிபாட்டையும் காய வழிபாட்டையும் சொன்ன மணிவாசகர் இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட மொழிவழிபாட்டை இறுதியில் பேசுகிருர். 'வாக்கு உன் மணிவார்த்தைக் காக்கி' என்று கூறுகிருர். இறைவன் புகழைப்பாடுவதற்காகவே வாக்கைப்பயன் படுத்த வேண்டும். இறைவன் புகழைப்பாடுகின்ற வாக்குகள் பொருட்செறிவு இல்லாதவையாக இருப்பினும் கூட அவை அவனை நோக்கிக் கூறப்படுபவையாக இருப்பதால் மணிவார்த்தைகளாகின்றன. "மணி வார்த்தை" என்று சொன்னமையால்தான் மணிவாசகர் என்னும் பெயர் அவருக்கு ஏற்பட்டதோ? என்று நாம் நினைக்கவேண்டியுள்ளது. இவ்வாறு இப்பாட்டில் மனம் மொழி மெய் வழிபாடு பேசப்பட்டிருப்பதைக் காணலாம்.

**ஞான நிலை:** நாம் மேலே கூறியபடி பத்தியின் துவக்க நிலையில் மனம் மொழி மெய்வழிபாடு ஆகிய இம்மூன்றுமே நிகழும். பத்தியின் உச்சக்கட்டத்தில் இறைவன் பதி ஞானத்தை உணர்த்த் ஆன்மாவின் அறிவு இச்சை செயல்கள் அப்பதி ஞானத்தையே கருவியாகக் கொண்டு அன்பு மேலிட இறைவனைப் பற்றும். அஃதே ஞான நிலையாகும். இந் நிலைகைகூடுவது எளிதன்று, பல பிறவிகளில் செய்த மனம் மொழி மெய்வழிபாட்டாலும் எடுத்த இப்பிறவியில் அவ்வழிபாட்டை முனைத்து நின்று செய்வதாலுமே இது கைகூடும்.

மணிவாசகர் பரமுத்திநிலை தனக்கு விரைவில் கூடவேண்டுமென்று துடிதுடிக்கிருர். இதற்குத்தடையாகத் தன் உடல் இருக்கிறதோ? என எண்ணுகிருர். இவ்வுடலைப்போக்கி விடலாமோ? என்ற எண்ணமும் அவருக்கு உதிக்கிறது. இவ்வெண்ணம் மீதூரப் பெற்ற நிலையில் அவர் பாடியுள்ளபாக்கள் நெஞ்சை உருக்குகின்றன.

"வினையென் போலுடை யார்பிற ராருடை யானடி
நாயேனை
தினையின் பாகமும் பிறிவது திருக்குறிப் பன்றுமற்
றதனாலே
முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்துநான் முட்டிலேன்
தலைகீறேன்
இனையன் பாவனை இரும்பு கல்மனம் செவி இன்னதென்
றறியேனே"

"ஒய்விலாதன உவமனில் இறந்தன ஒண்மலர்த்
தாள்தந்து
நாயிலாகிய குலத்தினும் கடைப்படும் என்னைநன்
னெறிகாட்டித்
தாயிலாகிய இன்னருள் புரிந்தஎன் தலைவனை
நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரைஉருள்கிலேன் செழுங்கடல்
புகுவேனே".

தீயில் வீழாமலும் மலையிலிருந்து உருளாமலும் இருக்கின்றேனே? என அடிகள் கூறுவது அதி தீவிரபக்தியின் உச்சநிலையாகும். கண்ணப்ப நாயனார் கண்ணைத்தோண்டி அப்பிய செயல் அதிதீவிர பக்தியின் உச்சகட்ட விளைவேயாகும்.

**உடல் நீக்கம்:**

உடலைப் போக்கிக்கொள்ள வேண்டுமென எண்ணுகின்ற மணிவாசகர் அவ்வாறு செய்யாமைக்கு ஒரு காரணம் உண்டு. குருந்தமரத்தின் கீழ் இருந்த குருநாதர், "நீ இவ்வுலகில் இருந்து பணியாற்றுக"! எனக் கூறிவிட்டுச் சென்றிருக்கிறார். அந்த ஆணையை மீறமுடியாமல் மணிவாசகர் தவிக்கிறார். மீண்டும் மீண்டும் வேண்டுவதைத் தவிர வேறு வழியில்லை என நினைக்கிறார். தம் வேண்டுகோளைப் பின்வருமாறு சொல்கிறார்,

"பாடவேண்டுநான் போற்றி நின்னையே
பாடிநைந்துநைந் துருகி நெக்கு நெக்
காடவேண்டு நான் போற்றி அம்பலத்
தாடுநின்கழற் போது நாயினேன்

கூடவேண்டு நான் போற்றி யிப்புழுக்
கூடுநீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீடவேண்டு நான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே"

**சாகாக்கலை:**

வீட்டு நிலையில் ஆன்மாவிற்கு எவ்வித உடலுமில்லை. ஆன்மா வியாபகமாக இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்பதுதான் வீட்டுநிலை எனக் கூறப்படும். உடலை அழியாமல் நித்தியமாக வைத்துக்கொள்ள வேண்டும் எனக்கருதி அதற்கான சாதனை முறைகளைப் பயில்வோர் சிலர் உண்டு. இச்சாதனை முறைகளுக்குச் சாகாக்கலை எனப் பெயரிட்டுள்ளனர். மரணமிலாப் பெருவாழ்வு எனவும் இதனைக் கூறுவர். ஆனால் மணிவாசகர் இப்பாடலில் "இப்புழுக்கூடு நீக்கி வீடுதந்தருள வேண்டும்", எனச் சொல்வதால் நித்திய தேகக் கொள்கையை அவர் உடன் படவில்லை என்பது தெளிவாகும். வீட்டுநிலை என்பது எவ்வித உடலும் இல்லாத நிலையே என மணிவாசகர் வாக்கிலிருந்து புலனாகிறது. வள்ளுவப் பெருந்தகையாரும்,

"மற்றும் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க்கு உடம்பு மிகை"

எனக் கூறுவது ஈண்டு நினைக்கத்தக்கது. இறவாமை என்பது மீண்டும் பிறவாமையே என்பது மணிவாசகர் கருத்தாகும்.

**திருமேனி ஈடுபாடு:**

வாதவூர் அடிகள் உள்ளத்தைக் கவர்ந்து நின்றவை இறைவனின் இருவகைத் திருமேனிகளாகும். ஒரு திருமேனி குருந்த மரத்தடியின் கீழ் குருநாதனாக வந்து ஆட்கொண்ட திருமேனியாகும். அத்திருமேனி மானிடச் சட்டை போர்த்தி வந்ததாக இருந்தாலும் ஒளிமிக்க திருமேனியாக விளங்கியதென்பதை மணிவாசகர்,

"செந்தாமரைக் காடனைய மேனித் **தனிச்சுடரே**" எனக் கூறுவதன் வாயிலாக நமக்குணர்த்துகிறார். இத்திருமேனியைப் பலவிடத்தும் சுட்டிப் பாடுகிறார்.

"கோகழியாண்ட குருமணிதன் தாள்வாழ்க" எனக்கூறுகிறார். "உருநாமறிய ஓர் அந்தணனாய் வந்தாண்டுகொண்டான்" எனச் சொல்லுகிறார்.

"அந்தணனாகி ஆண்டுகொண்டருளி
இந்திரஞாலம் காட்டிய இயல்பும்"

எனப் பேசுகிறார்.

"கண்ணால் யானும் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானும் தேறினன் காண்க".

என முழங்குகிறார். இவையனைத்தும் இத்திருமேனிபால் அவர் கொண்ட பத்திப் பெருக்கை நமக்கினிது புலப்படுத்தும்.

**சாந்தத் திருமேனி:**

மற்றொரு திருமேனி இறைவன் குதிரைமேல் வந்த சாந்தத் திருக்கோலமாகும். மணிவாசகர் பொருட்டு இறைவன் காட்டிலுள்ள நரிகளைப் பரிகளாக்கிப் பாண்டிய அரசன் முன் கொண்டு வந்து நிறுத்துகிறான். அப்பொழுது அவன் ஒரு குதிரைமீது குதிரைச் சேவகர்கள் தலைவனாய் வீற்றிருந்து குதிரைகளை நடைபயிலுவித்துக் காட்டுகிறான். அத்திருக்கோலம் மணிவாசகர் உள்ளத்தை மிகப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. குருநாதனாக வந்த திருமேனியினும் பார்க்க இத்திருமேனி மீதே மணிவாசகர் அளவற்ற ஈடுபாடுகொள்கிறார்.

"பெற்றிபிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
**கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித்** தன்னடியார்
குற்றங்கள்நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டி"

என இந்நிகழ்ச்சியை அடிகள் குறிப்பிடுகிறார். இவ்விடத்தே ஆராய்ச்சியாளர் வேறுவிதமாகப் பொருள்கொள்கின்றனர்.

**நரி பரியாக்கிய அற்புதம் :**

'தன்னடியார் குற்றங்கள் நீக்கி' என மணிவாசகர் இப்பாட்டில் சொல்வதால் நரி பரியாக்கிய நிகழ்ச்சி இவர்பொருட்டு

நிகழ்ந்ததன்று என்றும், இவருக்கு முன்னே இருந்த யாரோ ஓர் அடியவர் பொருட்டு மிகப் பழங்காலத்தே நடந்துள்ள தென்றும் அதனால்தான் மணிவாசகர், "தன் அடியார்" எனப் பொதுப்படக் கூறுகிறார் என்றும், தான் கண்டதாக இப்பாட்டில் கூறவில்லையென்றும் சொல்கின்றனர். இது பொருந்தாது. திருப்பொன்னூசலில்,

"ஞாலமிகப் பரிமேல்கொண்டு நமையாண்டான்"

எனக் கூறுவதால், அடிகள் தன் பொருட்டு நிகழ்ந்ததாகவே இதனைக் குறிப்பிடுகிறார் என்பது புலனாகும். ஈண்டும் அவர் "நம்மை" எனச் சொல்வதால், இஃதும் பொதுபடக் கூறியதே யன்றித் தன்னைச் சுட்டிக் கூறியுள்ளது என வாதிப்போரும் உண்டு. இவ்வையப்பாடுகளையெல்லாம் போக்குகின்ற முறை-யில் திருப்பாண்டிப் பதிகத்தில் மணிவாசகர் பின்வருமாறு பாடியுள்ளார்.

"பருவரை மங்கைதன் பங்கரைப் பாண்டியற் காரமுதா
மொருவரை யொன்றுமிலாதவரைக் கழற்போதிறைஞ்சித்
தெரிவரநின்றுருக்கிப் பரிமேற்கொண்ட சேவகனார்
ஒருவரையன்றி யுருவறியா தென்றனுள்ளமதே"

இப்பாட்டுக்கரண்செய்யுமாப்போல "அன்னைப்பத்தில்" பின் வருமாறு பாடுகிறார் ;—

"பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரிமேற் கொண்டென்
உள்ளங் கவர்வரால் அன்னே யென்னும்"

"பரிமேற்கொண்ட சேவகனார் ஒருவரையன்றி உருவறியா தென்றனுள்ளமதே" என்பதால் அடிகளார் நேரே அவ் வுருவைப் பார்த்திருக்கிறார் என்பது தேற்றம். "என் உள்ளமதே" என்பதால் இது பொதுப்படக் கூறாது தன்னையே கூறியதாக அமைகிறது. அன்னைப்பத்தில் "என் உள்ளங் கவர்வரால்" என்பதால் அஃதும் தன் சொந்த அனுபவத்தையே தோழி கூற்றாகச் சொன்னதாகும் என்பதில் ஐயமில்லை.

**ஏக்கநிலை :**

கொற்றப்பரிமேல் வந்த கோலம் மணிவாசகர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டமையால்தான் அடிக்கடி அந்நிகழ்ச்சியைப்

பாடுகிறார். இவ்வாறெலாம் தனக்கு எளிவந்த பெருமான் பின்னர் அவருடன் இருந்த அடியார்களைத் தீயில் மூழ்கித் தன் அடிசேருமாறு செய்துவிட்டுத் தன்னைமட்டும் உலகில் இருக்குமாறு செய்த செயல் அவரால் தாங்கமுடியவில்லை. இதனை மணிவாசகர்,

"போரே றேநின் பொன்னகர்வாய் நீபோந்தருளி யிருணீக்கி
வாரே றிளமென் முலையாளோ டுடன்வந்தருள வருள்பெற்ற
சீரே றடியார் நின்பாதம் சேரக்கண்டும் கண்கெட்ட
வூரே றாயிங் குழல்வேனோ கொடியே னுயிர்தா னுலவாதே"

என ஏக்கத்தோடு குறிப்பிடுகிறார். தன்னை உலகில் இருக்குமாறு செய்ததற்கு ஏதோ ஒரு பொய்ம்மை தன்னிடத்தே இருக்க வேண்டும் என்றும் அப்பொய்ம்மையைப் போக்கிக்கொள்வதற்கு ஒரே வழி இறைவனை நோக்கி ஆடிப்பாடி நைந்துருகுவதுதான் என்றும் முடிவு கட்டுகிறார். இவ்வாறு அழுது அழுது பாடிய பாடல்கள்தாம் திருவாசகம் முழுதும் நிறைந்து கிடக்கின்றன.

**அழுது பெறலாமா ?**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் "அழுதடி அடைந்த அன்பர்" என்று மணிவாசகரைச் சுட்டுகிறார். இவ்வழுகை இரண்டு விதமாகும். ஒருவகை அழுகையை மணிவாசகர் பின்கண்டவாறு சொல்கிறார்.

"யானே பொய்யென் னெஞ்சும் பொய்யென் னன்பும்பொய்
ஆனால் வினையேன் னழுதால் உன்னைப் பெறலாமே
தேனே யமுதே கரும்பின் தெளிவே தித்திக்கு
மானே யருளா யடியே னுனைவந் துறுமாறே"

இப்பாடலுக்குப் பலர் தவருகப் பொருள் கண்டுள்ளனர். இரண்டாம் அடியில் "அழுதால் உன்னைப் பெறலாமே" என மணிவாசகர் கூறுகிறார். இவ்வடியை வைத்து, "அழுதால் இறைவன் அடியைப் பெறலாம்" எனப் பலர் சொல்லி வருகின்றனர். ஈற்றடியில் "அருளாய் அடியேன் உனைவந்துறும் ஆறே" என அடிகள் கூறுவதைச் சிந்திக்கவேண்டும். "உன்னை அடைவதற்குரிய வழியை அருள் செய்வாய்" என்பது இதன் பொருள்.

" அடைவதற்குரிய வழி அழுகைதான் " என இரண்டாமடியில் சொல்லிவிட்டு ஈற்றடியில், " அடைவதற்குரிய வழியை அருள்-வாய், " எனச் சொல்வது பொருத்தமாகுமா? பெறலாமே? என்பதிலுள்ள ஏகாரம் வினாப்பொருட்டு வந்ததாகும். பெற முடியுமா? என்பதுதான் அதன் பொருள். அன்பு பொய்யான பிற்பாடு உன்னைப்பெற முடியுமா? முடியாது. " ஆகவே உன்னை வந்தடைகின்ற வழியைச் சொல் " என்பது இப்பாடலின் திரண்ட பொருளாகும். அன்பு பொய்யான பிற்பாடு அழுகின்ற அழுகை பொய் அழுகையேயாகும். துன்பம் வந்தவுடன் பொறுக்க மாட்டாது இறைவனை நோக்கி அழுவோம். துன்பம் நீங்கியதும் அவனை மறந்துவிடுவோம். இந்த அழுகை உண்மை அன்பின்றி ஆற்றமாட்டாது அழுத அழுகையாகும். உண்மை அன்போடு அவனைப் பிரிந்திருப்பதற்கஞ்சி உடனே அவனைக் கலக்கவேண்டும் என எண்ணி அழுவது மற்றொரு வகை அழுகை யாகும். முன் அழுகை பொய்யழுகை, பின்னழுகை உண்மை அழுகை. அன்போடு உண்மையாக அழுதால் இறைவன் அடியைப் பெறலாம். இதனை மேற்கண்ட பாடலில் அவர் சொல்லவில்லை. வேறொரு பாடலில் சொல்கிறார் அது வருமாறு,

" அழுகே **னின்பா லன்பா** மனமா யழல் சேர்ந்த
மெழுகே யன்னார் மின்னார் பொன்னார் கழல்கண்டு
தொழுதே யுன்னைத் தொடர்ந்தா ரோடும் தொடராதே
பழுதே பிறந்தேன் என்கொண் டுன்னைப் பணிகேனே"

அழுகே னின்பாலன் பாமனமாய் ' எனச் சொல்வதால் உண்மையன்போடழுதால் ஆண்டவனை அடையலாம் என்பது பெறப்படும். இப்பாடலை வைத்துத்தான் ' அழுதடி அடைந்த அன்பர்' எனச் சொல்லவேண்டுமேயன்றி முன்னைப் பாடலை வைத்துச் சொல்லக் கூடாது.

**ஒருமைப்பாடு :**

பத்திஒருமை நிலையை அடைய வேண்டுமென்றால் முழுமுதற் பொருளாகிய சிவபெருமானையே வணங்குதல் வேண்டும். சிவபெருமான் ஒருவனே இறைவன் என்பதை மணிவாசகர்,

" தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி "

என்னும் அடிகளில் தெளிவுபடுத்தியிருக்கிறார். "எந்நாட்டார்க்கும் இறைவன் ஒருவனேதான்; அவனைத் தென்னாடு சிவனே எனப் போற்றுகிறது" என்பது இதன் பொருள்.

**பலதெய்வ வழிபாடு:**

தமிழ் மக்கள் பல்வெறு கோயில்களில் பல்வேறு தெய்வங்களை வைத்து வழிபடுவதைக் காண்கின்றோம். அவர்களிடையே சிறு தெய்வ வணக்கமும் உண்டு. அதி தெய்வ வணக்கமும் உண்டு. "நான்முகன், திருமால், அக்கினிதேவன், நவக்கிரகங்கள்" முதலியவை அதி தெய்வங்கள் எனப்படும். இந்த அதி தெய்வங்களைத் தேவர்கள் எனப் பொதுவாகக் கூறுகிறோம். முனியாண்டி, மதுரைவீரன், மாரியாயி, காடன், காட்டேரி முதலியவை சிறு தெய்வங்கள் எனப்படும்.

சைவப் பெருமக்கள் சிவபெருமானைத் தவிர வேறு எந்தத் தெய்வங்களையும் வணங்கக் கூடாதென்பது மணிவாசகர் கொள்கையாகும். இதனைக்

"கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடி கெடினும்
நள்ளேன் நினதடியா ரொடல்லால் நரகம் புகினும்
எள்ளேன் திருவருளாலே யிருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள்
உத்தமனே"

என்னும் பாடலில் உணர்த்தியிருக்கிறார். "பிற தெய்வங்களை நினைக்கமாட்டேன்" என்று சொன்னதோடமையாமல், ஏனைத் தெய்வங்கள் வீடுபேற்றைத் தரமுடியாதவையாகையால், அவை பொய்த் தெய்வங்கள் எனவும் கூறுகிறார்.

"அத்தேவர் தேவரவர் தேவரென் றிங்ஙன்
**பொய்த்தேவு** பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேது மில்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்பது அவர் வாக்கு.

**அருளனுபவங்கள்:**

சிவபெருமானை மனம் மொழி மெய்களால் உறைப்போடு வழிபட்டமையால் தான் பல்வேறு அருளனுபவங்களை இறைவன் குருநாதனாக வந்து மணிவாசகர்க்கு உணர்த்தியிருக்கிறான்.

**"வண்ணம்தான் அதுகாட்டி வடிவுகாட்டி**
**மலர்க்கழல்கள் அவைகாட்டி வழியற்றேனைத்**
**திண்ணந்தான் பிறவாமல் காத்தாட்கொண்டான்"**

எனப் பெருமிதத்தோடு அவர் பேசுகிறார்.

"காட்டாதன வெல்லாம் காட்டிச் சிவம்காட்டித்
தாட்டாமரை காட்டித் தன்கருணைத் தேன்காட்டி"

எனக் கூறுகிறார். "தன்னை ஆட்கொண்டதாக" அவர் சொல்வதால், உண்மை அருளனுபவத்தை அவர் பெற்றிருக்கிறார் என்பது புலனாகிறது. சிவானுபவத்தின் முடிந்த நிலை சிவனோடு இரண்டறக் கலந்து பேரின்பத்தை நுகர்வதாகும்.

**"அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்"**

என அவர் சொல்வது முத்திப் பேரின்ப நிலையைக் குறிக்கும். இதனையே வீடுபேறு என்றும், பிறவாநிலை என்றும் கூறுவர். மணிவாசகர் அருளனுபவங்களை நேரிடையாகப் பெற்றிருக்கிறார் என்பது அவர் வாக்குகளால் புலனாவதால் பத்தியால் யாவரும் இந்நிலையைப் பெறலாம் என்பது தெளிவு.

**சீவன் முத்தர்:**

மணிவாசகர், எடுத்த பிறப்பிலேயே வீடுபேறு பெற்றிருப்பதால் சீவன் முத்தர் என அழைக்கப்படுவார். அவர் தான் வீடு பெற்றேன் என்பதை,

**"மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்"**

எனச் சிவ புராணத்தில் மிகத் தெளிவாகக் கூறுகிறார். சீவன் முத்தர்கள் உடலை விடுத்ததும் பர முத்தர்கள் என அழைக்கப் படுவர்.

**பத்தியே உய்யும் வழி**

மணிவாசகர் தான் பெற்ற முத்தி அனுபவத்தைத் தேனினுமினிய தீந்தமிழ்ப் பாக்களால் மிக விளக்கமாகக் கூறியிருப்பதால் அவர் பாடல் தொட்ட இடம் எல்லாம் பக்தி மணப்பதோடு, **பத்தி நெறி** ஒன்றே வீடு பேற்றைத் தரும் என்னும் உண்மையைப் புலப்படுத்துவனவாகவும் அமைந்திருக்கின்றன.

வாழ்க மணிவாசகர்!
வாழ்க பத்திநெறி!

AUP